www.padippakam.com

சேஷன் நூல் எதிர்ப்பு: கழகங்களின் உண்மை முகம்

# புதிய ஜனநாயகம்

15 டிசம்பர் 1994

ரூ. 3.00

# அயோத்தி: காவிக் கறை படிந்த தீர்ப்பு



உச்ச நீதிமன்றம்

படிப்பகம்

www.padippakam.com

# நவம்பர் 7 -ரஷ்ய புரட்சிநாள் உழைக்கும் மக்களின் விழா

உலகமே இருள் சூழ்ந்த சுரண்டல்-அடிமைத் தளையில் சிக்கிக் கிடந்த போது ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவெள்ளியாய் உதித்தெழுந்தது நவம்பர் புரட்சி. அதன் நாயகர்களான பாட்டாளிகள் வானத்தைக் கீறி வைகறையைப் பறித்தெடுத்தார்கள். அந்நாள் நவம்பர் 7 1917. ஒடுக்கப்பட்ட நாடுகளின் - மக்களின் மனங்களில் புரட்சிக் கனலை மூட்டிய அந்த மகத்தான நவம்பர் புரட்சிக்கு இன்று 78-வது பிறந்தநாள்!

உலகப் புரட்சியின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த சோசலிச ரஷ்யா, தோழர் ஸ்டாலின் மறைவுக்குப் பிறகு கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றிய முதலாளித்துவப் பாதையாளர்களால் சீரழிக்கப்பட்டு, இன்று யெல்ட்சின் காலத்தில் சீரழிந்த ஏகாதிபத்தியமாய் உருமாறி நிற்கிறது. ரஷியாவின் பாதையில் சென்ற சீனாவும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் இன்று முதலாளித்துவ நரகத்தில் வீழ்ந்து விட்டன.

இவற்றைக் காட்டி 'கம்யூனிசம் தோற்று விட்டது' என்று எக்காளமிட்ட ஏகாதிபத்தியவாதிகள், ரஷிய - கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்குப் பரிசாகக் கொடுத்ததெல்லாம் வறுமை, வேலையின்மை, விபச்சாரம், சீரழிவு, இனவெறி முதலானவற்றைத்தான். இக்கேடுகெட்ட ஆட்சிகளுக்கு எதிராக உழைக்கும் மக்கள் போராடத் தொடங்கி விட்டார்கள். ரஷியாவிலேயே, செங்கொடிகளுடனும் லெனின் - ஸ்டாலின் உருவப் படங்களுடனும் யெல்ட்சின் எதிர்ப்புப் போராட்டங்கள் பெருகி வருவதைக் கண்டு ஆளுங் கும்பல் அலறுகிறது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் உலகப் பாட்டாளி வர்க்கத்தின் நவம்பர் புரட்சி திருநாளை எமது தோழமை அமைப்புகள் எழுச்சியோடும் புரட்சிகர உற்சாகத் தோடும் விழாவாக நடத்தி உழைக்கும் மக்களிடம் பிரச்சாரம் செய்தன.

● பள்ளிப் பாளையத்தில் நவம்பர் புரட்சி நாளன்று மார்க்சிய ஆசான்களின் படங்களை வைத்து, கொடிகள் தோரணங்களைக் கட்டி புரட்சிகர பாடல்களை ஒலிபரப்பி புரட்சிகர மாணவர்-இளைஞர் முன்னணி சார்பாக அறைக்கூட்டம் நடத்தப்பட்டது. நவம்பர் புரட்சியின் வரலாற்றுச் சிறப்பையும் அதன் சாதனைகளையும் தோழர்கள் மோகன், ஜெகதீசன் சிறப்புரையாற்றினர்.

● பள்ளிபாளையம் - ஆவாரங்காட்டில், மார்க்ஸிய ஆசான்களின் படங்களுடன், செங்கொடிகள் அசைந்தாட, புரட்சிகர பாடலை ஒலிபரப்பி புரட்சிகர விசைத்தறித்தொழிலாளர்கள் சங்கம் (R P L U) சார்பில் நவம்பர் புரட்சிநாள் விழா சிறப்பாக நடைபெற்றது. மாலை 6 மணியளவில், தோழர் ஜெயராம் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பல தோழர்கள் கருத்துரையாற்ற, தோழர் ஜெகதீசன் (பு.மா.இ.மு - திருச்சி) சிறப்புரை ஆற்றினார். தோழர் சந்திரன் ''விதியை வென்றவர்கள்'' எனும் தலைப்பில் கனல் மணக்கும் கவிதை வாசித்தார். நூற்றுக்கும் மேற்பட்டோர் தமது குடும்ப விழாவைப் போல் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

● மதுரையில் நவம்பர் புரட்சி நாளை வாழ்த்திய சுவரொட்டிகளைக் கொண்ட ஆட்சியாளர்களை... 

● மதுரையில் நவம்பர் புரட்சி நாளை வாழ்த்திய சூளுரையாகவும் பு.மா.இ.மு. சார்பாக சுவரொட்டி இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. சோலை அழகுபுரம் மெயின் வீதியில் பகத்சிங் படத்துடன் ''வசந்தத்தின் இடிமுழக்கமென நவம்பர் புரட்சிப் புதிய ஜனநாயகப் புரட்சியில் இங்கும் ஒலிக்கும்!'' எனும் வாசகங்களுடன் வைக்கப்பட்டிருந்த ''பேனர்'' பொதுமக்களை கவர்ந்து, ஆரவாரத்துடன் படித்து பாராட்டினார். நவம்பர் புரட்சி நன்று செல்லூரில் ம.க.இ.க.வும் பு.மா.இ.மு.வும் இணைந்து நடத்திய அரங்கு கூட்டத்தில் நவம்பர் புரட்சி பற்றியும், பொதுவுடமைத் தத்துவமே வெல்லும் என்பது பற்றியும் தோழர்கள் வேம்பன், கதிர், முருகேசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ''முட்டாள் குருவும் முட்டாள்களும்'' எனும் தலைப்பில் பார்ப்பன சங்கராச்சாரிகளையும் அவர்களின் காலில் விழுந்து கிடக்கும் ஆட்சியாளர்களையும் அம்பலப்படுத்தி இளந் தோழர்கள் ஓர் நாடகத்தை நடத்தினர். வருணாசிரம சாதிய முறையை நிராகரித்து, சமத்துவத்தைப் பிரகடனப்படுத்தும் விதமாக நிகழ்ச்சிக்கு முன் அனைவருக்கும் மாட்டுக்கறி உணவு வழங்கப்பட்டது.

● கோவையில், ம.க.இ.க.வும் தொழிலாளர் பிரச்சாரக் குழுவும் இணைந்து ஒண்டிப்புதூர் சுங்கம் திடலில் நவம்பர் புரட்சி நாளன்று செங்கொடி ஏற்றி வைத்து முழங்கினர். அன்று மாலை நடந்த அரங்குக் கூட்டத்தில் தோழர்கள் சந்திரசேகரன், நசீம் இக்மத், மணிவண்ணன் ஆகியோரும், சிறப்பு அழைப்பாளர் தோழர் வாணியும் (பெண்கள் விடுதலை முன்னணி, திருச்சி) சிறப்புரை ஆற்றினர்.

● உசிலை வட்ட வி.வி.மு. சார்பில் முண்டுவேலம்பட்டி, மேட்டுப்பட்டி, உசிலை ஆகிய கிளைகளில் நவம்பர் புரட்சி நாள் விழாவையொட்டி அன்று முழுவதும் ஒலிபெருக்கி மூலம் புரட்சிகர பாடல்கள் ஒலி பரப்பப்பட்டு அரங்கில் கூட்டங்கள் நடத்தப்பட்டன. மேட்டுப்பட்டியில் தோழர் திசைகருணன் அவர்களும், முண்டுவேலம்பட்டியில் தோழர் கோட்டையன் அவர்களும் தலைமை தாங்க, தோழர் சிவகாமு நவம்பர் புரட்சி பற்றியும், அதன் ஒளியில் இந்திய விவசாயிகள் சாதிக்க வேண்டிய புதிய ஜனநாயகப் புரட்சி பற்றியும், ராவ் - ஜெயா கும்பலின் மக்கள் விரோத ஆட்சிகளை அம்பலப்படுத்தியும் சிறப்புரையாற்றினார். மேட்டுப்பட்டி கிளை நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் மாட்டுக்கறி விருந்தளிக்கப்பட்டது.

● திருப்புவனம் பு.மா.இ.மு. சார்பில், அருகிலுள்ள பளையன் குளம் கிராமத்தில் காலை முதல் புரட்சிகரப் பாடல்கள் ஒலிபரப்பட்டு மாலையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. டங்கல் திட்டத்தை எதிர்த்தும், இந்து மதவெறியை எதிர்த்தும் நவம்பர் புரட்சிநாள் சூளுரையாக நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டது.



● கரூர் பகுதியில் பு.மா.இ.மு. சார்பாக நவம்பர் புரட்சிநாளன்று அறைக்கூட்டம் நடைபெற்றது. பொது நிகழ்ச்சிக்கு ஒலிபெருக்கி மூலம் பிரச்சாரம் செய்ய பசுபதிபாளையம் போலீசார் அடாவடித்தனமாக மறுத்தனர். இதனால் பு.மா.இ.மு. சார்பாக சுவரொட்டி இயக்கம் மேற்கொள்ளப்பட்டது. ●


படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

பத்தாம் ஆண்டு

1 - 2
16 நவ. - 15 டிச. '94

உள்நாடு:
தனி இதழ்: ரூ. 3.00
ஆண்டு சந்தா: ரூ. 72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

அட்டை ஓவியங்கள்: கரோ

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# அயோத்தி: காவிக் கறை படிந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பு

இந்திய உச்ச நீதிமன்றக் கட்டிடத்தில் ஏற்றப்பட்டுள்ள மூவர்ண ''தேசிய''க் கொடியைக் கழற்றி வீசி விட்டு, திரிசூலத்தில் கட்டப்பட்ட காவிக் கொடியைத்தான் ஏற்றவேண்டும். அந்த அளவுக்கு அங்கேயும் இந்து மதவெறி வகுப்பு வாதம் ஆதிக்கம் செலுத்துகிறது. ஆனால் இந்த உண்மையை மூடி மறைக்கும் வண்ணம் மதச்சார்பற்ற, நடுநிலைவாதியைப் போல நடித்துக் கொண்டு முழுக்க முழுக்க காங்கிரசு, ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களுக்குச் சாதகமான தீர்ப்புகளையும் கருத்துக்களையும் தனது பெரும்பான்மை முடிவாக உச்ச நீதிமன்றம் மூன்று விவகாரங்களில் தெரிவித்துள்ளது. ''ராம ஜென்மபூமி - பாபரி மசூதி கட்டப்படுவதற்கு முன்பு (அதன் வளாகத்தின் உள்ளேயோ, வெளியேயோ) அங்கு இந்துக் கோவிலோ அல்லது வேறு ஏதாவது இந்து மதக் கட்டிடமோ இருந்ததா?'' என்று கருத்துத் தெரிவிக்கும்படி குடியரசுத் தலைவரின் பெயரால் உச்ச நீதிமன்றத்திடம் நரசிம்மராவ் அரசு கோரியிருந்தது. கருத்துக்கோரும் இந்தக் குறிப்பு மிகையானது, தேவையற்றது, பதிலளிக்க வேண்டிய அவசியமற்றது'' என்கிற காரணத்தை முன் வைத்து உச்ச நீதிமன்றப் பெரும்பான்மை நிராகரித்து விட்டது. அயோத்தி பாபரி மசூதி இருந்த, தகராறுக்குட்படுத்தப்பட்ட கையகப்படுத்திக் கொள்ளும் அரசின் உரிமை சட்டப்படி செல்லும் என்று ஏற்றுள்ள அதேசமயம், இதுபற்றி அலகாபாத் உயர் நீதிமன்றம் உட்பட கீழ் நீதிமன்றங்களில் நடக்கும் வழக்குகளின் தீர்ப்பு படியே கையகப்படுத்தப்பட்ட பகுதி ஒப்படைக்கப்பட வேண்டும்; அதுவரை மைய அரசு ஒரு சட்டப்படியான பொறுப்புதாரராக மட்டுமே இருக்க முடியும் என்று பெரும்பான்மை தீர்ப்புச் சொல்லியுள்ளது. ஆர்.எஸ்.எஸ். பாரதீய ஜனதா ஆட்சியின் உத்திரப்பிரதேச முதல்வராக இருந்த கல்யாண்சிங். பாபரிமசூதி வளாகத்துக்குள் ராமன் கோவில் கட்டுமானப் பணி செய்வதைத் தடுப்பதாக உச்ச நீதிமன்றத்தில் வாக்களித்து விட்டு, அதைமீறி அனுமதித்ததற்கான அடையாளத் தண்டனையாக அவரை ஒருநாள் சிறை வைத்தது உச்ச நீதிமன்றம்.

கல்யாண்சிங்குக்கு வழங்கப்பட்ட இந்த தண்டனைத் தீர்ப்பு ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களுக்கு எதிரானது என்று மற்ற பலராலும் வரவேற்கப்படுகிறது. பாபரி மசூதி இடிக்கப்பட்ட நாளில் அங்கு ஒரு அடையாளப் பூசை நடத்திக் கொள்வதற்கு இந்துமத வெறியர்களுக்கு இதே உச்ச நீதிமன்றம் அனுமதி வழங்கி மசூதி இடிப்புக்கு வழிவிட்டது; இந்த அடையாளத் தண்டனை கல்யாண்சிங்கை மாவீரனாக, தியாகியாகக் காட்டிக் கொண்டு, இந்துமத வெறியர்கள் புத்துயிர் பெற வழிவிட்டது. ஆகவே, தன்னை ஒரு நியாயவானாக, நடுநிலையாளனாகக் காட்டிக் கொள்வதற்காக ஆடிய மாய்மாலம்தான் இத்தீர்ப்பு. ''நரசிம்மராவ், அயோத்தி பாபரி மசூதி நிலத்தைக் கையகப்படுத்தி, தான் உருவாக்கிய சங்கராச்சாரிகள், பிற சந்நியாசிகள் அடங்கிய அறக்கட்டளையிடம் ஒப்படைத்து ராமன் கோவிலைக் கட்டுவது; ஆனால் அதைத் தான் நேரடியாகச் செய்யாது, பொறுப்பை உச்ச நீதிமன்றத்தின் மீது சுமத்துவது - அதற்காகவே அதனிடம் கருத்துக் கோரினார் - ஆர்.எஸ்.எஸ். தீவிர இந்து வெறியர்களிடம் போட்டியிட்டு இந்துத்துவ அரசியல் ஆதாயத்தைப் பறித்துக் கொள்வது - அதற்காக ஒரு ''மிதவாத'' இந்துத்துவ - வகுப்புவாதக் கொள்கையைக் கடைப்பிடிப்பது என்கிற திட்டத்துடனே பிரச்சினையை அணுகினார். அதை உச்ச நீதிமன்றத்தால் முறியடிக்கப்பட்டுவிட்டது'' என்று மதச்சார்பற்ற, ஜன நாயக சக்திகள் எனப்படுவோர் முதலிரண்டு தீர்ப்பையும் வரவேற்கின்றனர்.

ஆனால், நரசிம்மராவின் உள்நோக்கம் பிற இந்து மதவெறியர்களினுடையதில் இருந்து மாறுபட்டதல்ல, என்றாலும் அவ்வளவு நேரடியானதோ, எளிதானதோ அல்ல! இரட்டை வேடம் தரித்தது அயோத்தி நிலத்தை ராமன் கோயிலுக்குத் தாரை வார்க்க, ஏற்பாடு செய்த அதே சமயம் ''உருது'' ஒளிபரப்பு, இடஒதுக்கீடு போன்றவற்றைக் காட்டி இசுலாமியரை ஏய்த்தும் வருகிறது, நரசிம்மராவ் அரசு. அயோத்தி விவகாரத்திலும் இரண்டிலொரு தீர்வை உடனடியாகக் காணவேண்டும் என்பதும் அவர்நோக்கமல்ல. அந்த நோக்கத்துடன் உச்ச நீதிமன்றத்திடம் கருத்துக்கோரவும் இல்லை. கருத்துக்கோரும் குறிப்பு இந்து வெறியருக்குச் சாதகமானதாக இருந்தாலும், அதற்கேற்ப ஆதாரங்களைத் திரட்டித் தரவும், வாதாடவும் இல்லை. பிரச்சினையைக் கிளறிவிட்டுக் கொண்டே இருப்பதுதான் நரசிம்மரா்வின் திட்டமாக உள்ளது. அதற்கு உதவும் வகையில்தான் உச்ச நீதிமன்ற பெரும்பான்மைத் தீர்ப்பும் உள்ளது.

ஆனாலும் அப்பெரும்பான்மையினர் மற்றும் நரசிம்மராவின் உண்மை முகத்தைச் சிறுபான்மைத் தீர்ப்பே அம்பலப்படுத்தி விட்டது. உச்ச நீதிமன்றத்துக்குக் கருத்துக்கோரி அனுப்பப்பட்ட குறிப்பும், நிலக் கையகப்படுத்தும் சட்டமும் ஒரு வகுப்புக்குச் சாதகமானது; மற்றதுக்குப் பாதகமானது. கருத்துக்கோரும் குறிப்பு மதச்சார்பின்மைக்கு எதிரானது, சட்டவிரோதமானது; நீதி மன்றத்தின் கருத்தைத் தான் பேரம் பேசுவதற்குப் பயன்படுத்தும் நோக்கமுடையது என்று சிறுபான்மைத் தீர்ப்பு தெளிவாக்குகிறது. ஆனால் பெரும்பான்மை, இசுலாமியருக்குப் பாதகமாகத் தாமே வலிந்து போய் இந்து மதவெறிக்கு வக்காலத்து வாங்கும் கருத்துக்களையும் இணைத்துள்ளது. பாபரி மசூதி இடிக்கப்பட்ட போது அந்த வளாகத்தில் இருந்த ''சாபுத்ரா'' பீடம் என்ற இந்து பூசை மேடையும் ''அராஜகவாதி''களால் இடிக்கப்பட்டுவிட்டதாம். பாபரி மசூதியை இழந்ததைப் போல இது இந்துக்களுக்கு இழப்பாம்! மசூதி சட்ட விரோதமாக இடிக்கப்பட்டது; அங்கு கள்ளத்தனமாக ''திடீர் கோவில்'' எழுப்பியது; இதற்குத் தாமும் நரசிம்மராவுமே உடந்தையாக இருந்தது; இன்னமும் அங்கு பூசை நடத்த அனுமதிப்பது இதையெல்லாம் உச்ச நீதிமன்றம் கண்டு கொள்ளவில்லை. அந்த இந்து மதவெறி அட்டூழியத்துக்குச் சட்ட பூர்வ அங்கீகாரம், அனுமதி வழங்கியுள்ளது. அதேசமயம் இசுலாமியர் தொழும் இடமான மசூதியையோ, ஈத் மைதானத்தையோ புனிதமான இடமாகக் கருத முடியாது; எங்கு வேண்டுமானாலும் தொழலாம் என்று இந்து மதவெறியர்களின் அதே வாதத்தை உச்ச நீதிமன்றப் பெரும்பான்மையினர் வலியப் போய் வாதிட்டிருக்கின்றனர். இதன் மூலம் அவர்கள் தாமும் இந்து மதவெறி வகுப்புவாதிகள் தாம் என்பதைப் பச்சையாகக் காட்டிக் கொண்டுள்ளனர்.

படிப்பகம்

www.padippakam.com

# சேஷனின் பார்ப்பனத் திமிர் கழகங்களின் உண்மை முகம்

**சேஷன் கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் எப்படி ஆதாரமில்லாமல் அவதூறுகளை வீசுவது தவறோ, அதுபோலதான் அண்ணா, எம்.ஜி.ஆர். போன்ற தலைவர்களை விமர்சிக்கவே கூடாது என்பதும்.**

சேஷன் கூறியதாக கோவிந்தன் குட்டி என்பவரால் எழுதி வெளியிடப் பட்ட ''சேஷன் - உள்ளார்ந்த கதை'' என்ற நூல் சர்ச்சைக்கு உள்ளாகியிருக்கி றது. ''1965-ல் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டம் சி.ஐ.ஏ -வின் (அமெரிக்க உளவு நிறுவனம்) தூண்டுதலினால் நடந் தது; பல தலைவர்கள் சி.ஐ.ஏ. கைக்கூலி களாக செயல்பட்டனர்; அண்ணாது ரையோ தன்னையும் அறியாமல், சுற்றி நடப்பது தெரியாமல் சி.ஐ.ஏ.வின் கைப் பாவையாகச் செயல்பட்டார்'' என்ற பொருளில் சி.ஐ.ஏ.வையும் அண்ணாது ரையையும் தொடர்புபடுத்தி அப்புத்தகத் தில் எழுதப்பட்டுள்ளது.

இதற்கு முதலில் கண்டனம் தெரி வித்து அறிக்கை வெளியிட்டார், கருணா நிதி. தி.மு.க. இப்புத்தகத்திற்கு தடை வாங்கப்போவதை அறிந்த ஜெயா ஒரே நாளில் அதுவும் விடுமுறை நாளில் தனது செல்வாக்கைப் பயன்படுத்தித் தடை வாங்கி தான்தான் முதலில் நீதிமன்ற இடைக்காலத்தடை வாங்கியதாக தம்பட் டமடித்துக் கொண்டார். எனினும் திமு.க., ம.தி.மு.க. அடுத்தடுத்து தமது சார்பிலும் தடை வாங்கின. இதனால் சேஷன் புத்தக வெளியீட்டு விழா நின்று போனது. தனக்கு அண்ணா மீது மிகுந்த மரியாதை உண்டு என்று சேஷன் மழுப்ப லாக கூறியும் திராவிடக் கட்சிகள் விடுவ தாக இல்லை. சேஷனின் கொடும்பா வியை எரித்தும், கறுப்புக் கொடிகள் கட் டியும், டெல்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தி யும் தி.மு.க., ம.தி.மு.க.-வினர் கண்ட னம் தெரிவித்தனர். சேஷன் தமிழகம் வந் தால் அவமானப்படுத்தி அனுப்பத் தயா ராக இருந்தனர். இதனால் இரண்டுமுறை தனது தமிழக பயணத்தை சேஷன் ரத்து செய்தார்.

சேஷன் பொய்யெழுதி அண் ணாவை அவமதித்து விட்டார் என்ற அடிப்படையில்தான் இவ்வளவு ஆர்ப் பாட்டங்களையும் செய்தன, தமிழகத் திராவிடக் கட்சிகள். சேஷன், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை சி.ஐ.ஏ.யின் தூண்டுதல் - சதி எனக் கூறி தமிழக மக்க ளின் இன, மொழி உணர்வையே கொச் சைப்படுத்தியதைப் பற்றி இக்கட்சிகள் அவ்வளவாக கண்டு கொள்ளவில்லை. ஆனால் முக்கியமாக சேஷனின் நோக் கம் இதுதான். தமிழக மக்களின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைக் கொச்சைப் படுத்துகிற போக்கில்தான் அண்ணாவும் குறிப்பிடப்பட்டுள்ளார். ஆனால் அண் ணாவை மட்டும் தூக்கி வைத்துக் கொண்டு அதையே மையப்படுத்தி திரா விடக்கட்சிகள் பிரச்சினை கிளப்புவது தனிநபர்துதி - கவர்ச்சி வாத - பொறுக்கி அரசியலின் ஒருபகுதியே. அண்ணாது ரையின் பெயர் மட்டும் குறிப்பிடப்படா மல் சேஷன் கூறியிருந்தால் திராவிடக்கட் சித் தலைமைகள் பிரச்சினையை கிளப்பி யிருக்குமா என்பது சந்தேகமே! ஏனெ னில் இதற்கு முன்பும் சில வருடங்க ளுக்கு முன்பு இதுபோன்ற சில புத்தகங்க ளில் எழுதப்பட்டிருக்கின்றன.

சேஷன் கருத்துச் சுதந்திரம் என்ற பெயரில் எப்படி ஆதாரமில்லாமல் அவ தூறுகளை வீசுவது தவறோ, அதுபோல தான் அண்ணா, எம்.ஜி.ஆர் போன்ற தலைவர்களை விமர்சிக்கவே கூடாது என்பதும். தமிழகத்தில் தொழிற்துறை செயலராக இருந்த சேஷனை ஒரு தனி யார் நிறுவனத்தை அரசு கையகப்படுத்து வதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததன் காரண மாக அன்றைய முதல்வர் எம்.ஜி.ஆர். துறை மாற்றம் செய்து பழிவாங்கினார் எனவும் ''சேஷனின் உள்ளார்ந்த கதை'' நூலில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு ஜெயாவும், ஜெயா 'உதிர்த்த ரோமங்க ளும்', ''இரண்டாம் எம்.ஜி.ஆர் (வை.கோ.)'' கட்சியினரும் கண்டனம்




சர்ச்சைக்குள்ளான நூலின் முகப்பு

தெரிவித்துள்ளனர். இவர்கள் எல்லோ ரும் மையமாக குறிப்பிடுவது மக்களால் போற்றப்பட்ட அதுவும் மறைந்த தலைவர் களைப் பற்றி விமர்சிப்பது கூடாது என்ப துதான்.

திராவிடத் தலைவர்கள் விமர்சனத் திற்கு அப்பாற்பட்டவர் அல்லர்; ஊழலுக் கும் அதிகாரமுறை கேடுகளுக்கும் துரோ கத்திற்கும் மக்கள் விரோத நடவடிக்கை களுக்கும் அப்பாற்பட்டவர்கள் அல்லர். தமது ஆட்சிக்கும் பதவிக்கும் ஆபத்து என்றால் ''திராவிட நாடு'', ''ஈழ ஆதரவு'' போன்ற கொள்கையைக் காற்றில் பறக்க விட்டு துரோகமிழைத்தவர்கள் தான் திராவிடத் தலைவர்கள். ஏன் குறிப் பிட்ட இந்தி போராட்டத்தின் போதே மாணவர் கிளர்ச்சி தி.மு.க.வின் கட்டுப் பாட்டை மீறிச் சென்றபோது அண்ணா துரோகத்தனமாக பேசவில்லையா? மாணவர்கள் போராட்டத்திற்கும் தி.மு. க.விற்கும் தொடர்பில்லை என்று அப் பொழுது (ஜனவரி 23-ந் தேதி) அண்ணா துரை அறிவித்தார். போராட்டத்தைச் சாக்கிட்டு ஆட்சியாளர்கள் வன்முறை கட்சி என்று தடைவிதித்து விடுவார் களோ, எங்கே தமது அரசியல் ஆதாயத் திற்கு பங்கம் வந்துவிடுமோ என்ற அச் சத்தின் காரணமாக போராட்டத் தலை மையை கைவிட்டு ஓடும் துரோகமல்லா மல் வேறென்ன இது? அப்போது காங்கி ரசு காமராசர் ஆட்சியை ஆதரித்ததால் பெரியாரும், வீரமணியும் இதே இந்தி எதிர்ப்பு போராட்டத்தை பகிரங்கமா கவே எதிர்த்தனர்; 1968-ல் அண்ணா துரை ஆட்சியில் இருந்தபோது தமிழிளத் தன்னுரிமையையும் உள்ளடக்கி இன் னொரு இந்தி எதிர்ப்புப் போராட்டம் வெடித்தபோது அதைத் திராவிட இயக் கத்தினர் எவரும் ஆதரிக்கவில்லை.

1965 - இந்தி எதிர்ப்புப் போராட் டம் தமிழக மக்களின் உள்ளுணர்விலி ருந்து பீறிட்டு எழுந்ததாகும். குறிப்பாக இதில் மாணவர்கள் - இளைஞர்கள் தன் னெழுச்சியாக ஈடுபட்டு மலையென உயர்ந்து நின்றனர். இந்தி ஆதிக்கவாதிக ளுடனான போரில் பலர் உயிர்த்தியாகம் செய்த பின்னர்தான் அன்று இந்தி திணிப்பு தடுத்து நிறுத்தப்பட்டது. இப் போராட்டத்தில் திராவிடத் தலைமை யின் செயல்பாடு பிழைப்புவாத வரம்புக் குட்பட்டதாகவும், அரசியல் ஆதாய நோக்கிலும், துரோகத்திற்கு இட்டுச் செல் வதாகவும் இருந்தது என்றாலும் அவர் கள் அந்நியர்களின் கைகூலிகளாக இருந் ததில்லை; இருந்ததற்கான ஆதாரத்தை பார்ப்பன கும்பல் இதுவரை முன்வைக்க வும் இல்லை. உண்மையில் தி.மு.க. தலைமையையும் மீறி இயல்பான உணர் வில் கிளர்ந்தெழுந்ததுதான் தமிழக இந்தி எதிர்ப்புப் போராட்டம். இதற்கு எதிராக வும், விலகியும், வேடிக்கைப் பார்த்தும் நின்ற பார்ப்பன - பனியா கும்பலோ இப்போராட்டத்தை எப்போதும் கொச் சைப்படுத்தி வருகிறது.

அந்நிய நாட்டின் உள்விவகாரங்க ளில் தலையிட்டு கோஷ்டிகளை உரு வாக்குவது, பிரிவினைவாதம் - தீவிரவா தம் - பயங்கரவாத குழுக்களை உருவாக் குவது அல்லது ஊக்குவிப்பது, கலகங் களை கிரிமினல்கள் மூலம் அரங்கேற்றி ஆட்சிக்கவிழ்ப்பதுபோன்றவைசி.ஐ.ஏ - வின் சாதாரண நடவடிக்கைதான். அது தமிழக இந்தி எதிர்ப்பு போராட்டத்தை தமது நோக்கத்திற்கு பயன்படுத்த முயன் றிருக்கலாம். ஆனால் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையே தூண்டி சதி செய்ததா கவோ அதன் தூண்டுதலில்தான்


படிப்பகம்

www.padippakam.com

போராட்டம் வீச்சாக நடந்ததாகவோ சித்தரிப்பது அபத்தம்; அயோக்கியத்தனம். இதை சேஷன் துணிச்சலாக செய்வதற்குக் காரணம் பார்ப்பனத் திமிர் தவிர வேறில்லை. இந்தி எதிர்ப்புப் போராட்டம், இடஒதுக்கீடு போராட்டம், இன உரிமைப் போராட்டங்களைப் பற்றி அவதூறு பரப்புவது இந்தியாவெங்கும் பார்ப்பன - பனியா கும்பல் கடைபிடிக்கும் முறை. மேலும், சி.ஐ.ஏ., ''ரா'' போன்ற உளவு நிறுவனங்களின் நண்பனாக இருந்து தமிழர்களுக்காக குரல் கொடுப்பது போல் நாடகமாடிக் கொண்டு சதிகளை அரங்கேற்றுவது சுப்ரமணியசாமி போன்ற பார்ப்பனர்களுக்குத்தான் பிறரைக் காட்டிலும் கைவந்த கலையாக இருக்கிறது.

சேஷனின் புத்தகத்திற்கு முன்பாக முன்னாள் குடியரசு தலைவர் ஆர்.வெங்கட்ராமன் தனது பதவிக்காலம் பற்றி எழுதி வெளியிட்ட நூலில் ''ராஜீவ் அரசியல் முதிர்ச்சியில்லாதவர்'' என்று எழுதியிருந்தது சர்ச்சைக்குள்ளானது. காங்கிரசுக்காரர்களின் எதிர்ப்புக்குப் பின் காங்கிரசு விசுவாசி வெங்கட்ராமன் அதை திரும்பப் பெற்று புத்தகத்திலிருந்து நீக்கி விட்டார். வெங்கட்ராமன் தனது வயது, அதிமேதாவித்தனத்தைக் காட்டுவதற்காகத்தான் ராஜீவைப் பற்றிய உண்மையைக் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால் சேஷன் குறிப்பிட்டதோ, கொச்சைப்படுத்தும் நோக்கில் கூறும் ஆதாரமற்றவையாகும். தனது அதிகார - பார்ப்பனத் திமிரில்தான் இன்னமும் எழுதியதை நீக்குவதாகக் கூறி சேஷன் திரும்பப் பெற்றுக் கொள்ளவில்லை. இதுமட்டுமல்ல ராஜீவ் கொலையில் சந்திரசேகரின் அமைச்சரவையிலிருந்த ஒருவருக்கு தொடர்பு இருந்ததாகவும், மொசாட் படைக்கு இக்கொலையில் சம்பந்தம் உண்டு என்றும் ஆதாரமில்லாமல் பலவற்றை சேஷன் குறிப்பிட்டிருக்கிறார். புலன் விசாரணை நடத்தும் சி.பி.ஐ. அதிகாரிகள் சேஷனை கைது செய்து விசாரித்திருக்க வேண்டும். ஏன் இன்னமும் செய்யவில்லை? இதற்கு சேஷனிடம் ஒரு வேளை ஆதாரம் இருந்தால்கூட இவ்வளவு நாள் மறைத்தது குற்றமில்லையா? என்ன தண்டனை?

ஆனால் துக்ளக் ''சோ'' போன்ற பார்ப்பன வகையறாக்களோ, முக்கியப் புள்ளிகள் இதுபோன்று ஏதாவது எழுதுவது வியாபாரத் தந்திரம் என்றும் இதற்கு எதிர்ப்புக் காட்டுபவர்கள் இலவச விளம்பரதாரர்கள் என்றும் கிண்டலடித்து விசயத்தையே நீர்த்துப் போகும்படி செய்ய முயலுகிறார்கள். இல்லை சேஷனின் பார்ப்பன - அதிகாரத் திமிரில் குறிப்பிடப்பட்ட வாசகம் தமிழக மக்களின் இன, மொழி, உணர்வைக் கொச்சைப்படுத்தும் நோக்கிலானதே. சேஷன் மன்னிப்பு கேட்டு திரும்ப பெறாதவரை தமிழக மக்கள் சேஷனுக்கு மன்னிப்பு வழங்கவே கூடாது.

■ சுப்பு


போலீசால் பலாத்காரப்படுத்தப் பட்ட மீனவப்பெண் ராக்கம் மாளை விசாரிக்கும் அதிகாரிகள்; அருகே மருமகள் முருகலெட்சுமி

# போலீசு கிரிமினல்களின் சாதனை!

கற்பழிப்பு கூடங்களாக செயல்படும் போலீசு நிலையங்கள் தமிழகத்தில் சாதனை படைத்து வருகின்றன. வெளியில் கிரிமினல் கும்பலால் பெண்கள் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படும் அளவிற்கு போலீசு நிலையத்திற்குள்ளும் நிகழத் தொடங்கி விட்டன.

● கடந்த செப்டம்பர் மாதம் 14-ந் தேதி சிவகாசி - வலையப்பட்டியைச் சேர்ந்த உமா, ராஜு ஆகிய ஊரைவிட்டு ஓடி வந்த காதலர்களில் உமாவை சென்னை - அம்பத்தூர் போலீசு கைது செய்து பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தியுள்ளது. பெண்வீட்டார் கொடுத்த புகாரின் பேரில் இருவரையும் கைது செய்த போலீசு, வேலுச்சாமி என்ற போலீசுக்காரரின் உறவினர் வீட்டில் வைத்து உமாவை பலாத்காரப்படுத்தியுள்ளது. பிறகு அனைத்து கட்சி கண்டனம், முதல்வரிடம் முறையீடு போன்ற நடவடிக்கைகளுக்குப் பின்னே அதாவது 5 நாட்களுக்குப் பிறகே மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி தடயங்கள் இல்லை என கைவிரிக்கிறது. போலீசு அதிகார கும்பல். அதுவும் சாத்தூர் டி.எஸ்.பி. சுப்பையா திமிரெடுத்து மிரட்டியுள்ளார்.

● அக்டோபர் 15-ந் தேதி ராமேசுவரம் போலீசு, ராக்கம்மாள் என்கிற மீனவப் பெண்ணுடன் உள்ள முன்பகை காரணமாக அவரை ஒரு திருட்டு வழக்கில் தொடர்புபடுத்தி கைது செய்தது. பின்னர் இவரது மருமகள் முருகலட்சுமியையும் கைது செய்தது. இருவரையும் போலீசு நிலையத்தில் நிர்வாணமாக்கி கும்பலாக பலாத்காரப் படுத்தியதோடு காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கி சித்தரவதையும் செய்துள்ளனர். இருவரும் மயக்கமடைந்து விழுந்ததால் மருத்துவமனையில் ஒப்புக்கு சிகிச்சை கொடுத்து விடுவித்தது. போலீசு குற்றுயிராக இருந்த ராக்கம்மாளை உறவினர்கள்தான் மருத்துவமனையில் சேர்த்தனர். முருகலட்சுமியின் கணவர் முனியசாமியையும் கைது செய்து கொண்டுபோன போலீசு அவரை என்ன செய்தது என்றே தெரியவில்லை. வெகுண்டெழுந்த பொதுமக்கள் கலவரத்தில் ஈடுபட்டபோதும் போலீசு கோரமாகவே ஒடுக்கியது. ராக்கம்மாள் அடையாளங்காட்டிய போலீசு குற்றவாளிகளை மக்கள் தாக்குதலிலிருந்து பாதுகாப்பாக வைத்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட முக்கிய குற்றவாளியான தலைமைக் காவலரை தலைமறைவாக போலீசே பாதுகாப்பாக வைத்திருக்கிறது. உயரதிகாரிகள் மட்டத்தில் விசாரணை நடந்தாலும் போலீசு மிருகங்களுக்கு தற்காலிக பதவி நீக்கம்தான் தண்டனையாகக் கிடைத்துள்ளது.

ராமேசுவரத்தில் மகளிர் போலீசு நிலையம் அருகிலிருந்தும் போலீசு பெண்களை விசாரணைக்கு அங்கு கொண்டு செல்லப்படவில்லை. போலீசின் 'கற்பழிப்புகள்' அளவு கடந்து செல்வதால் ஏற்பட்டுள்ள அவநம்பிக்கைக்கு மாற்றாக மகளிர் போலீசு நிலையத்தை மாவட்டந்தோறும் திறந்து ஏய்த்தார், ஜெயா. ஊர்தோறும் மகளிர் போலீசு நிலையம் இருந்தாலும் இக்கொடுமை ஒழியாது. ஏனெனில் போலீசு என்பதே மிருகவெறி கும்பலாகத்தான் ஊட்டி வளர்க்கப்படுகிறது. அது பாய்ந்து குதறுவதில் ஆண், பெண் பேதமில்லை. போலீசை வேண்டாத மிருகம் என பிரச்சினைகளுக்காக அணுகாமல் மக்கள் ஒதுக்கிவிட்டாலும் அது வம்புக்கு வந்து மேலும் வெறிபிடித்து பாய்ந்து குதறுவது நிற்கப் போவதில்லை. உழைக்கும் மக்கள் அதன் உயிர்நாடியில் கை வைக்கும் போதே அதன் அட்டூழியம் ஒழியும்.

www.padippakam.com

ஐ.எம்.எஃப்.-உலக வங்கியின் 50ம் ஆண்டு விழா

# ஊரைக் கொள்ளையடித்து உலையில் போட்ட வரலாறு

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாம் உலகப் போரினால் சீரழிந்து போயிருந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளைத் தனது செல்வாக்கின் கீழ் கொண்டு வருவதற்காக அமெரிக்கா உருவாக்கிய நிறுவனங்கள்தான் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியம் - ஐ.எம்.எஃப்பும். 1970-களின் பின்னே உலகப் பொருளாதார நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் காரணமாக பின்தங்கிய மூன்றாம் உலக நாடுகளை ''கடன்'', ''உதவி'' என்ற பெயரில் தாங்கள் விரிக்கும் வலையில் சிக்க வைக்கத் தொடங்கின, அவை. இதற்காக ''கட்டுமான சீரமைப்புத் திட்டம்'' (Structural Adjustment Programme) எனும் பொருளாதாரக் கொள்கையினை வகுத்து அதை அமுல்படுத்துமாறு உலகமெங்கும் கிட்டத்தட்ட எண்பது நாடுகளை நிர்ப்பந்தித்து வருகின்றன.

சமூக நலத்திட்டங்களுக்கு வழங்கப்படும் நிதியைக் குறைப்பது; . மானிய வெட்டு; அரசு - பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயமாக்குவது; அந்நிய மூலதன இறக்குமதிக்கான கட்டுப்பாடுகளை நீக்குவது; நாணய மதிப்பைக் குறைப்பது - இவைதான் ''சீரமைப்பு''த் திட்டத்தின் முக்கிய அம்சங்கள். இதன் மூலம் பல மூன்றாம் உலக நாடுகளின் சமூக - பொருளாதார வளர்ச்சிக்கு தாங்கள் வித்திட்டிருப்பதாக மார்தட்டும் ஏகாதிபத்தியவாதிகள், அந்நிறுவனங்களின் ஐம்பதாவது நிறுவன தினத்தை மாட்ரிட் நகரில் வெகு விமரிசையாக கொண்டாடினார்கள். ஆனால் ''சீரமைப்பு'' திட்டத்தை அமுல்படுத்திய பல ஆசிய, ஆப்பிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளின் நிலையோ அவர்கள் கூறுவதற்கு நேர்மாறாக உள்ளது என்பதை இனி பார்ப்போம்.

### ''மூன்றாம்'' உலக நாடுகளுள் மூன்றாம் உலகமாக ஆப்பிரிக்கா

இன்று பஞ்சத்தின் பிடியில் சிக்கித் தவிக்கும் சோமாலியா 1970 வரை உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைந்த நாடாக இருந்து வந்தது. '70-களின் பின் பகுதியில் அந்நாட்டினுள் காலடி எடுத்து வைத்த ஐ.எம்.எஃப், அந்நாட்டின் பொருளாதார அடிப்படையாக விளங்கிய கால்நடை வளர்ப்பையும் சிறு விவசாயத்தையும் கால்நடை மருத்துவ - பராமரிப்பு வசதிகளையும் தனியார்மய மாக்கியதன் மூலமும் ஏற்றுமதிக்கான பணப்பயிர் உற்பத்தியை ஊக்குவித்ததன் மூலமும் சீரழித்தது.

இதனால் அந்நாடு இன்று தனக்குத் தேவையான உணவுப் பொருட்களுக்கு கூட ஒவ்வொரு வருடமும் ஐ.எம்.எஃப்-பிடம் கடனுதவி பெற்று, மேற்குலகில் இருந்து இறக்குமதி செய்து கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டது. சோளமும் கம்பும் என்றிருந்த அம்மக்களின் உணவுப் பழக்கம், இன்று கோதுமை, அரிசி என்றவாறு மாறிப்போனது. இவ்வாறு இனியும் சுரண்ட முடியாது என்ற நிலை ஏற்பட்டபின், ஐ.எம்.எஃப் சோமாலியாவின் பொருளாதார 'வளர்ச்சி'க்கு உதவ முடியாது எனத் தீர்மானித்து தான் தர ஒப்புக்கொண்ட 210 கோடி ரூபாய்க்கான கடனுதவியையும் ரத்து செய்துவிட்டது.

இன்று ஆப்பிரிக்க கண்டத்தின் முப்பதுக்கும் மேலான நாடுகளில், சோமாலியாவைப் போன்றே அந்நாடுகளின் தேசியப் பொருளாதாரம் சீரழிந்து போயிருக்கிறது. அக்கண்டத்தின் சரிபாதி மக்கள் - கிட்டத்தட்ட 22 கோடி பேர் வறுமையில் சிக்கி உழல்கின்றனர்; வேலையற்றோரின் எண்ணிக்கை 10 கோடிக்கும் அதிகம்; ஐந்து வயதுக்கு கீழான 40 லட்சம் குழந்தைகள் இந்நூற்றாண்டு முடிவதற்குள் இறந்த போகும் நிலையில் உள்ளனர்.

இத்தகைய அவலத்திலும் 1992-ம் ஆண்டில் மட்டும் ஏகாதிபத்தியங்கள் அக்கண்டத்தில் இருந்து 10500 கோடி ரூபாயை வட்டியாகவும் முதலாகவும் பெற்றுச் சென்றுள்ளன. இன்று அக்கண்டத்து நாடுகளின் கடன் நிலுவைத் தொகை ஐந்து லட்சத்து நாற்பதாயிரம் கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது. ஆனால் உலக வர்த்தகத்தில் கடன் வாங்கும் முன் நான்கு சதவீதமாக இருந்த ஆப்பிரிக்காவின் பங்கு இன்று ஒரு சதவீதமாக சுருங்கிப் போனது. இப்படி பொருளாதாரம் சீரழிந்து போனதோடு தேசிய அரசாங்கங்கள் சீர்குலைந்து போய் அங்கோலா,, ஜாம்பியா, லைபீரியா, சோமாலியா, ருவாண்டா போன்ற நாடுகளில் போட்டி மற்றும் இனகுழுக்களின் மோதல் உருவெடுத்து ஒருபுறம் அரசியல் அராஜகத்தையும் மறுபுறம் அகதிகள் பிரச்சினையையும் தோற்றுவித்துள்ளன. ஆனால் ஏகாதிபத்தியவாதிகளோ சோவியத் யூனியன் சிதைந்து புதிய சந்தை கிடைத்த பிறகு பழத்தைத் தின்று விட்டு கொட்டையை விசிறி எறிவது போல ஆப்பிரிக்க நாடுகளை இன்று கை கழுவிவிட்டனர்.

### கழுத்தை நெறிக்கும் கடன் வலை

1980-களின் 'மூன்றாம்' உலக நாடுகளின் மொத்த கடன் சுமை 56,700 கோடி அமெரிக்க டாலர்களாகும். இத்தொகைக்காக அந்நாடுகள் '92-ம் ஆண்டுவரை, 89,100 கோடி அமெரிக்க டாலர்கள் அசலாகவும், 77,100 கோடி அமெரிக்க டாலர்கள் வட்டியாகவும் கட்டியுள்ளன. ஆனாலும் கடன்தொகை ஒரு பைசா கூட குறையாது இரண்டரை மடங்கு அதிகரித்து 1,41,900 கோடி அமெரிக்க டாலர்களாக உயர்ந்துவிட்டது. இந்தக் கடன் பெருக்கத்தின் இரகசியம் என்னவெனில் மூன்றாம் உலக நாடுகள் தாங்கள் பெற்ற கடனையும் அதற்கான வட்டியையும் கட்டவும், உணவுத் தேவைக்காகவுமே மீண்டும் மீண்டும் கடன்பெறும் நிலையிலுள்ளன என்பதுதான்.

ஐ.எம்.எஃப். - உலக வங்கி - காட் அமைப்பின் தலைவர்கள் - ஏகாதிபத்தியங்களின் எடுபிடிகள்



இப்படி ஐ.எம்.எஃப் மற்றும் உலக வங்கியின் திட்டங்கள் பிறவியிலேயே ஊனமடைந்தவையாக இருப்பினும், , ஏகாதிபத்தியவாதிகள் தாய்லாந்து, மெக்சிகோ, கானா போன்ற நாடுகளை அற்புத 'வளர்ச்சி'க்கு உதாரணமாகக் காட்டுகிறார்கள். கானாவின் சொல்லிக் கொள்ளப்படும் வளர்ச்சிக்காக அந்நாடு 27,000 கோடி ரூபாய் கடனாகப் பெற்றுள்ளது. இதற்கு ஈடாக அந்நாட்டின் காட்டுவளம் வரைமுறையின்றி குறையாடப்பட்டு வருகின்றது. தாய்லாந்தில் 11 வயதான இளஞ்சிறுமிகள்கூட விபச்சாரத்தினுள் தள்ளப்படு



படிப்பகம்

www.padippakam.com



உணவுக்குத் தட்டேந்தும் சோமாலியா மக்கள்; சீரமைப்பு தந்த பேரழிவு

கின்றனர்; 6 கோடி மக்கள் தொகை கொண்ட அந்நாட்டில் இன்று 20 லட்சம் பெண்கள் விலைமாதர்களாக அல்லலுறுகின்றனர். மெக்சிகோ நாட்டில் அரசின் கேடுகெட்ட சமூக - பொருளாதார கொள்கைகளை எதிர்த்து அந்நாட்டின் பூர்வகுடி சியாபஸ் இனமக்கள் இந்த ஆண்டின் தொடக்கத்தில் புரட்சிகர யுத்தத்தைத் தொடுத்தனர். இங்கு மட்டுமின்றி ஆப்பிரிக்காவிலுள்ள காரகஸ், துனிசியா, நைஜீரியா, மொராக்கா, மாலி நாடுகளிலெங்கும் ஐ.எம்.எஃப் மற்றும் உலக வங்கிக்கு எதிரான மக்களின் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பியுள்ளன.

### சிலந்தி வலையில் சிக்கிய ஈயாக இந்தியா

வளைகுடாப் போரின் பொழுது இந்தியாவின் அன்னிய செலாவணி கையிருப்பு திவாலாகிப் போனதைக் காரணம் காட்டி சந்திரசேகர் அரசு ஐ.எம்.எஃபிடமிருந்து 6000 கோடி ரூபாய் கடன் வாங்க திட்டம் தீட்டியது. அதன் பின் வந்த ராவ் அரசாங்கமோ அந்நிய மூலதனத்துக்கு இருந்த அனைத்துக் கட்டுப்பாடுகளையும் நீக்கியிருப்பதோடு, 1995-க்குள் ஐ.எம்.எஃப்-டமிருந்து மட்டும் 21,000 கோடி ரூபாயைக் கடனாகப் பெறுவதை நோக்கமாகக்(!) கொண்டு செயல்படுகிறது.

1980-ல் 77,000 கோடி ரூபாயாக இருந்த இந்தியாவின் மொத்த அந்நியக்கடன் இன்று 2,76,000 கோடி ரூபாயாக விண்ணை முட்டுமளவு வளர்ந்துவிட்டது. ஆனாலும் ஆட்சியாளர்களின் கற்பனைகள் யாவும் பகற்கனவாகத்தான் போயின. இந்த வருடத்திற்கான வரவு - செலவு கணக்கில் 70,000 கோடி ரூபாய் அளவிற்கு துண்டு விழும் என எதிர்பார்க்கிறது நிதியமைச்சகம். பண வீக்கம் கண்ணாமூச்சி காட்டியபடியே இருப்பதாலும் தொழிற்துறை - பொருளாதார வளர்ச்சி எதிர்பார்த்த இலக்கை எட்ட முடியாமற்போவது, எதிர்பாராத செலவீனங்கள் போன்ற காரணங்களால், இந்தத் துண்டுத் தொகை மேலும் அதிகரிக்கவே செய்யும். இதை ஈடுகட்ட கூடுதல் வரிவிதிப்பு, மேலும் கடன் வாங்குவது, பணப்புழக்கத்தை அதிகரிப்பது என்ற வழிகள் தவிர வேறு ஆட்சியாளர்களுக்குத் தெரியாது. ஆனாலும் அந்நிய செலாவணி கையிருப்பு 60,000 கோடி ரூபாயாக உயர்ந்துவிட்டது என மார்தட்டுகிறார்கள், அவர்கள். உண்மையிலேயே இந்தச் 'சாதனை'யையும் அன்னியக் கடன்மூலம்தான் சாதித்திருக்கிறார்கள்.

### நவீன காலனியாதிக்கம்தான் இறுதி நோக்கம்

கடன் மற்றும் உதவி பெறும் நாடுகளின் பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்துவதோடு, தேசிய அரசாங்கங்களின் ஒவ்வொரு அரசியல் கொள்கை முடிவுகளிலும் ஏகாதிபத்தியவாதிகள் தலையிட்டு வருகிறார்கள். பாகிஸ்தான் தனது அணு ஆயுத பரிசோதனைகளைக் குறைத்துக் கொள்ள சம்மதித்ததும்தான், அதன் மீதான பிரெஸ்லர் தடையுத்தரவை நீக்கியது அமெரிக்கா. பிரேசில் நாட்டில் ஐ.எம்.எஃப்-க்குச் சாதகமாக நடந்து கொள்ளவில்லை என்பதால் இரு நிதிமந்திரிகள் அடுத்தடுத்து நீக்கப்பட்டனர். மொசாம்பிக்கில் தொழிலாளர் நலச்சட்டங்கள் திருத்தப்பட்டன.

ஐ.எம்.எஃப்-ம் உலக வங்கியும் ''தாங்கள் கூறும் நாடுகளுக்குத்தான் சலுகைகள் காட்ட வேண்டும்'' என அந்நிறுவனங்களின் தலைமையினை ஏழு பெரும் கூட்டணி நாடுகள் (G7) நிர்ப்பந்தித்து வருகின்றன. இந்நிறுவனங்களில் உறுப்பு நாடுகளாக உள்ள 'மூன்றாம்' உலக நாடுகள், தடையின்றி உதவியினைப் பெறுவதற்குத் தங்களுக்கு இருக்கும் சிறப்பு வரவு உரிமையினை (Special Drawing rights) ப் பயன்படுத்துவதையும் அவை நீண்டகாலமாக தடை செய்து வருகின்றன. ரசியாவில் தங்களது கைப்பாவையான யெல்ட்சினுக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்காததற்கு ''ஐ.எம்.எஃப் நிதியுதவி செய்யாததுதான் காரணம்'' என வெளிப்படையாகவே குற்றஞ்சாட்டினார், அமெரிக்காவின் துணை அதிபர்.

இந்தியாவில் அதிகரித்துள்ள அந்நிய செலாவணிக் கையிருப்பை ''நுகர் பொருள் இறக்குமதிக்குத்தான் பயன்படுத்த வேண்டும்'' என அறிவுறுத்தியுள்ளது உலக வங்கி. மாநில மின்சார வாரியங்கள் 3' சதவீதம் அளவிற்கு இலாபம் ஈட்டவில்லை என்பதைக் காரணம் காட்டி, 2250 கோடி ரூபாய்க்கான கடனுதவி ரத்து செய்யப்பட்டது. உடனே, மின் உற்பத்தியில் முதலீடு செய்யவுள்ள ஆறு அந்நிய நிறுவனங்களுக்கு குறிப்பிட்ட சதவீதம் இலாப உத்தரவாதம் அளித்து ஒப்பந்தமிடப்பட்டது. மத்திய அரசின் அனுமதியின்றியே மாநிலங்களின் 50 கோடி வரை முதலீடு செய்யவும் சர்வதேச நிதி நிறுவனங்களுக்குத் தற்பொழுது சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன.

அணு ஆயுதப் பரவல் தடுப்பு, ஏவுகணைக் கட்டுபாடு, மனித உரிமை, ஜனநாயகத்தை மீட்பது, இவையெல்லாம் இன்று ஏகாதிபத்தியவாதிகள் 'மூன்றாம்' உலக நாடுகளில் நேரடியாகவே தலையிடுவதற்கான முகாந்திரங்கள். இதற்காக ஐ.நா. உலக வங்கி, ஐ.எம்.எஃப், சர்வதேச அணுசக்தி நிறுவனம் போன்ற 'சர்வதேச' நிறுவனங்களின் மூலையாக செயல்பட்டு காய்களை நகர்த்தி வருகிறார்கள், ஏகாதிபத்தியவாதிகள். இதன்மூலம் தங்களின் மறு காலனியாதிக்கத்திற்கான யுக்திகளை மக்களிடமிருந்து மறைத்துவிடலாம் என நம்புகிறார்கள்; ஆனால், ''மக்கள் தங்கள் சொந்த அனுபவங்களின் மூலம் உண்மைகளைப் புரிந்து கொள்கிறார்கள்'' என்ற வரலாற்று பாடத்தைப் புரிந்து கொள்ள முடியாத முட்டாள்கள் அவர்கள்!

● ரஹீம்

**ஏகாதிபத்தியங்களின் சீரமைப்பு திட்டத்தால் ஆப்பிரிக்க கண்டத்தின் சரிபாதி மக்கள் வறுமையில் உழல்கின்றனர்; வேலையற்றோரின் எண்ணிக்கை 10 கோடிக்கும் அதிகம்; 5 வயதுக்கு கீழான 40 லட்சம் குழந்தைகள் இந்நூற்றாண்டுக்குள் இறக்க நேரிடலாம்**



படிப்பகம்

www.padippakam.com

# ராஜகோபாலன் கொலை:

# முன்வினைப் பயனே!

**எல்லோரும் சித்தரிக்கும்படி ராஜகோபாலன் ''சொக்கத் தங்க மல்ல''; ஒரு கிரிமினல் குற்றவாளி, மதவெறி பயங்கரவாதி**

இந்து முன்னணி மாநிலத் தலைவர் ராஜகோபாலன் மதுரையில் அண்மை யின் அடையாளம் தெரியாத நபர்களால் கோரமாக வெட்டிக் கொல்லப்பட்டார். கருணாநிதி, நெடுமாறன் முதல் போலி கம்யூனிஸ்டுகள் வரை அனைத்துக் கட்சி யினரும் இரங்கல் தெரிவித்து வன்முறை கள் பெருகி வருவதாக கண்டனம் தெரி வித்தனர். அனைத்துப் பார்ப்பனப் பத்தி ரிகைகளும் ராஜகோபாலனை தேசப்பற் றாளர் - நேர்மையானவர் - நியாத்திற்கா கப் போராடியவர் என்றெல்லாம் சித்த ரித்து செய்தி வெளியிட்டன; வெளியிடு கின்றன.

ராஜகோபாலன் கொலைக்குப்பின் இரண்டு நாட்களாக இந்துமுன்னணிக் கும்பல் ஓட்டுப் பொறுக்கிகளின் கலாச் சார மரபுபடி மதுரை, திண்டுக்கல், சென்னை, கன்னியாகுமரி முதலான பகு திகளில் வெறியாட்டமிட்டனர். சமூக விரோதிகளை கூலிக்கமர்த்திக் கொண்டு கொலை, தீ வைப்பு, மசூதி தகர்ப்பு, பேருந்து - கடைகள் தாக்குதல் என முஸ் லீம்களையும் அவர்களது உடமைகளை யும் குறிவைத்து அட்டூழியம் புரிந்தனர். கடைகளை மிரட்டி மூடவைத்தும் பேருந் துகளைத் தாக்கி மறித்தும் ''பந்த்'' என்ற ளவிற்கு உயர்த்த முயன்று வியாபாரிகள், பயணிகள், பொது மக்களின் அலட்சியம் மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளால் முடங்கிப் போனார்கள். அதாவது ராஜ கோபாலனை 'அரும் பெரும் மக்கள் தலைவராக' சித்தரிக்க முயன்று தோற்ற னர்.

இந்து முன்னணியினர் கொலை செய்தி கிடைத்துமே முஸ்லீம்கள்தான் கொலையாளிகள் என ஆதாரமே இல்லா மல் அசிங்கமாக திட்டி எழுதிக் கருத்து பரப்பினர். இதற்கு வசதியாகவே போலீ சும் பத்திரிகைகளும் தமது ஆய்வுகளை நகர்த்தி ஆதாரங்களை வெளியிடுகின் றன. ஒரு சில பத்திரிகைகள் கொலைக்கு உள்ளூர் அ.தி.மு.க. எம்.பி ராஜன் செல் லப்பா தொடர்பு இருப்பதாகவும் போலீசு வழக்கை திசைதிருப்புவதாகவும் வேறு கோணத்தில் ஆதாரங்களை வெளியிட் டாலும் இவை ராஜகோபாலனை 'நேர் மையான தலைவராகவே' வைத்து அணு குகின்றன. இவர்கள் எல்லோரும் சித்தரிக்கும்படி ராஜகோபாலன் என்ன ''சொக்கத் தங்கமா'' என்றால் இல்லை. இவர் ஒரு கிரிமினல் குற்றவாளி; மத வெறி எனும் விஷம் கொண்ட பார்த்தீனி யம்.

இவற்றை இவர்கள், முஸ்லீம்கள் கொலை செய்திருக்கலாம் என்பதற்கு முன்வைக்கும் பின்வரும் காரணங்களில் இருந்து உணர முடியும். ● இராமேஸ்வ ரம் - கீழக்கரையில் கடந்த இரண்டு வருட மாக ராஜகோபாலன் தலைமையில் முஸ் லீம்களை தாக்கி முழக்கமிட்ட விநாயகர் ஊர்வலம் நடத்தப்பட்டதால் ● கடந்த மாதம் மதுரையை காசி, மதுரா போல இந்துக்களின் புனித நகரமாக்கக் (Holy city) கோரி ராஜகோபாலன் நடைபயணம்



ராஜகோபாலன்; மதவெறி பார்த்தீனியம்

மேற்கொண்டதால் ● திருப்பரங்குன்றம் மலையில் இருக்கும் பள்ளிவாசலை குறி வைத்து அதனருகே இந்துக்களைத் திரட் டிக் கொண்டு கார்த்திகை தீபம் ஏற்றப் போவதாக ராஜகோபாலன் அறிவித்த தால் ● மதுரை டவுன்ஹால் தெப்பக்கு ளம் சுற்றியுள்ள கடைகளை (பெரும்பா லானவை முஸ்லீம்களுடையவை) அகற்றி ''தெப்போற்சவம் விழா'' நடத் தப்போவதாக அறிவித்ததால் ● மதுரை யில் பாகிஸ்தான் உளவாளிகள் ஊடுருவி யுள்ளதற்கான ஆதாரங்களை விரைவில் வெளியிடப் போவதாக ராஜகோபாலன் கூறியதால்... முஸ்லீம் தீவிரவாதிகள் கொலை செய்திருக்க வாய்ப்புண்டு எனக்கூறும் பத்திரிகைகள் ராஜகோபா லனை அப்பாவியாக சித்திரிக்கின்றன. மேற்கண்டவை எல்லாம் மதக்கலவரம் நடத்துவதற்காகவே ராஜகோபாலனால் திட்டமிட்டு நடத்தப்பட்டவை; மதவெ றியை தூண்டுவதற்காகவே திட்டமிட்டு அறிவிக்கப்பட்டவை. இது அப்பட்ட மான கிரிமினல் குற்றமல்லாமல் வேறென்ன?

மதுரையை புனித நகரமாக்கக் கோருவதற்கு எவ்வித அடிப்படையும் அவசியமும் இல்லை. காசி, மதுரா போல் புனித நகரமாக்கப்பட்டால் மாடு வெட்டக்கூடாது, புலால் உண்ணக் கூடாது, மது கடைகள் இருக்கக்கூடாது, இந்துக்களின் புனித பழக்க வழக்க முறை களுக்கு விரோதமானவற்றை கைகொள் பவர்களான முஸ்லீம்களும், சூத்திர - தாழ்த்தப்பட்ட சாதியினரும் நகருக்கு வெளியில்தான் குடியிருக்க முடியும் முத லான கட்டுப்பாடுகள் விதிக்க கோரலாம் என்பதே இந்து முன்னணியின் நோக்கம். ஆனால் மதுரையில் முஸ்லீம்களும் சூத் திர - தாழ்த்தப்பட்ட சாதியினர்களான கள்ளர், நாடார், பறையர், பள்ளர், சக்கிலி யர் முதலானவர்களே ஒட்டுமொத்த அள வில் பெரும்பான்மையாக உள்ளனர். இந் துமத 'புனித' ஆச்சார முறைகளை கடை பிடிக்கும் பார்ப்பனர்களும், சௌராஷ்டி ரர்களும், முதலியார், வேளாளர், செட்டி யார் போன்ற மேல்சாதியினரும் சிறு பான்மையினரே.

அயோத்தி - பாபர் மசூதி பிரச் சினை பாணியில் கிளப்பப்படும் திருப்ப ரங்குன்றம் - சிக்கந்தர் பள்ளிவாசல் பிரச் சினையும் அடிப்படையும் அவசியமும் இல்லாததே. திருப்பரங்குன்றம் மலை உச்சியில் இந்த பள்ளிவாசலும், கீழடிவா ரத்தில் முருகன் கோயிலும் இருப்பதால் ''சிக்கந்தர் மலை'', ''திருப்பரங்குன்றம் மலை'' என முஸ்லீம்களும் இந்துக்க ளும் வேறுவேறாக அழைத்துக் கொண் டாலும் மதப்பகைமையின்றியே ஒற்று மையுடன் பழகி, வழிபட்டு வருகிறார் கள். '94 நவம்பர் 18-ந் தேதி முஸ்லீம்கள் சந்தனக்கூடு விழாவிற்காக மலை உச்சி யில் கூடுவதும் இந்துக்கள் கார்த்திகை விழாவிற்காக மலையடிவாரத்தில் முரு கன் கோயிலுக்குச் செல்வதும் நடக்கும். இந்நாளை தேர்ந்தெடுத்து இது சிக்கந்தர் மலையல்ல, கந்தர் மலைதான் என்ற கூறி திருவண்ணாமலையில் ஏற்றப்படும் தீபம் போல் இம்மலையிலும் தீபம் ஏற்றப் போவதாக அறிவித்துள்ளது, இந்துமுன் னணி. ராஜகோபாலன் போட்ட இந்த சப தத்தை ராமகோபாலன் முடித்து வைக்கப் போவதாகவும் அறிக்கை வெளியிட்டுள் ளார். ''மதக்கலவரம் நடத்தப் போகி


படிப்பகம்

www.padippakam.com

றேன்; மதவெறியூட்டப் போகிறேன்'' என இதைவிட வேறு பகிரங்கமாக எப்படி அறிவிக்க முடியும்? தமிழின ஆதரவாளர்கள், புரட்சிகர அமைப்புகள் சாதாரணமாக பொதுக்கூட்டம், ஊர்வலம், மாநாடு நடத்த அனுமதி கேட்கப் போகும்போது கைது செய்து அடக்கி ஒடுக்குகிற அரசு, கோபாலன்கள் இப்படி பகிரங்கமாக அறிவித்தும் ஏன் விட்டு வைக்கிறது?

மேலும் பாகிஸ்தான் எல்லைப்புற மாவட்டங்களில் வாழும் இந்துக்களை தூண்டிவிட்டு மதக்கலவரங்களை, ஆயுத மோதல்களை நடத்திவரும் இந்திய அரசின் கொள்கைக்கு பக்கபலமாக நிற்பவர்கள், ஆர்.எஸ்.எஸ். இந்து வெறியர்கள். இவர்கள் இந்தியாவில் பாகிஸ்தான் உளவாளிகள் ஊடுருவல் - சதி என்ற கூச்சல் போடுவதற்கு என்ன அருகதை உள்ளது? எவ்வித அடிப்படையுமில்லை. ஆனால் இந்துவெறி கும்பலை எதிர்ப்பவர்களை (முஸ்லீம்கள் மட்டுமல்ல மதச்சார்பின்மையாளர்கள், புரட்சியாளர்கள் வரை) ''தேசத் துரோகிகள்; முஸ்லீம்களின் கைக்கூலிகள், பாகிஸ்தான் உளவாளிகள்'' என முத்திரை குத்துவது ராஜகோபாலன் தொடங்கி அத்வானி வரை கடைபிடிக்கும் முறை. இதைக் கீழ்த்தரமாக, ஒன்றுமில்லாத பிரச்சினைகளுக்கும் பயன்படுத்தி புரளி கிளப்பிவிடுவது இன்னும் கொடுமையானது. ''தேசப்பற்று'' என்ற போர்வைக்குள் இந்த உரிமையைப் பெற்றுக் கொள்கிறார்கள், இந்துமத வெறியர்கள்.

இந்து முன்னணிக்காரர்களின் மூதாதையரான திலகர் விநாயகர் ஊர்வலத்தை மதப்பிரச்சாரத்திற்காகப் பயன்படுத்தச் சொன்னார். அடிபிறழாமல் விநாயகர் ஊர்வலத்தின் மூலம் மதவெறிப் பிரச்சாரத்தை நடத்தி. குறிப்பாக தென்னிந்தியாவில் காலூன்றி வருகின்றன, ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள். தமிழகத்தில் கடந்த சில வருடங்களுக்கு முன் விநாயகர் ஊர்வலத்தை இறக்குமதி செய்த இந்து முன்னணிக் கும்பல் சென்னை மட்டுமல்லாது மதுரை, ராமேஸ்வரம் என விரிவுபடுத்தி படர்ந்து வருகிறது. மத உரிமை, மத உணர்வு என்கிற பெயரில் இத்தகைய ஊர்வலங்கள், விழாக்கள் மூலம் இந்து மதவெறியை கக்கி வருகிறார்கள். இவர்கள் நடத்துகிற ஊர்வலங்கள் எல்லாம் கலவரத்தையும் கலவரத்திற்கான பதற்ற நிலையையுமே தோற்றுவிக்கின்றன.

ஆம்பூர், வாணியம்பாடி, ராணிப்பேட்டை, கோவை, மதுரை, சென்னை - திருவல்லிக்கேணி, ராமேஸ்வரம் - கீழக்கரை போன்ற பகுதிகளில் இந்து முன்னணியினர் திட்டமிட்டு மதக்கலவரங்களை நடத்திய பிறகும் இவர்களுக்கு தொடர்ந்து அனுமதி அளிக்கப்படுகின்றன. ஏராளமான போலீசு பாதுகாப்பு கொடுத்து கலவரமில்லாமல் நடத்திக் கொடுப்பதாக மாநில அரசு வாக்குறுதி தருகின்றது. 'அமைதியாக' ஊர்வலம் நடந்ததைக் காட்டி ஆட்சியாளர்கள் (சூத்திர ஆட்சியாளர் கருணாநிதியும் விதிவிலக்கல்ல) பெருமைபட்டுக் கொள்வதுமுண்டு. ஆனால் சில முறை இக்கும்பலின் மதவெறி ஊர்வலங்கள் 'அமைதியாக' நடந்து முடிந்திருந்தாலும் அவை மதக் கலவரத்திற்கான - மதப்பகைமைக்கான தயாரிப்பாகவும் விதையாகவும் உரமாகவும்தான் அமைகின்றன. இந்துக்களின் ஓட்டைக் கருதி எந்தக் கட்சியும் இந்து முன்னணிக் கும்பலின் ஊர்வலத்தை - செயல்பாட்டை தடைசெய்யவோ முடக்கவோ முயன்றதுமில்லை; கோரியதுமில்லை. இப்படி இந்துவெறிக் கும்பலுக்கு உடந்தையாக இருப்பதன் மூலம் இவர்கள் கூறிக்கொள்கிற இந்துக்களின் மத உணர்வை கொச்சைப்படுத்தவே செய்கிறார்கள்.

ஏனெனில் ஆம்பூர், வாணியம்பாடி, திருவல்லிக்கேணி, கீழக்கரை



திண்டுக்கல்லில் இந்துவெறியர்களால் கொல்லப்பட்ட மௌலி காசிம்

முதலான பகுதிகளில் இந்து முன்னணிக் கும்பலின் நிழல் படாதவரை அங்குள்ள இந்துக்களிடம் மதப்பகைமை உணர்வு அறவே இல்லை. வேறுபாடு இல்லாமல் அவரவர் மத உணர்வுகளை மதித்து இந்துக்களும் முஸ்லீம்களும் ஒற்றுமையுடன் சகோதரர்களாகத்தான் பழகி வந்தனர்; இந்து முன்னணியின் சில கைவரிசைகளுக்குப் பின்னும்கூட அவ்வாறே பழகி வருகின்றனர்.

ஆனால், ''இந்துக்களே, இந்துக்களின் கடைகளிலேயே பொருள் வாங்குங்கள்'', ''இந்தியாவை துண்டாடிய முஸ்லீம்களை பாகிஸ்தானுக்கு விரட்டுவோம்'', ''முஸ்லீம்களுக்கும், கிறித்தவர்களுக்கும் தனிநாடு இருப்பதுபோல் இந்துக்களுக்கும் தனிநாடு வேண்டாமா? முஸ்லீம்களையும் மதச்சார்பின்மைவாதிகளையும் விரட்டியடித்து இந்தியாவை இந்துக்களின் நாடாக்குவோம்'' முதலான முழக்கங்கள் மூலம் இந்து முன்னணி - பா.ஜ.க. கும்பல்தான் செயற்கையாக பகைமை உணர்வை விதைக்கின்றன. ''புனித நகரமென அறிவி'', ''பசுவதை தடை கொண்டுவா'', ''திருப்பரங்குன்றம் மலையில் தீபம் ஏற்றுவோம்'', ''பாகிஸ்தான் உளவாளிகளின் ஊடுருவலை தடுத்து நிறுத்து'' என்றெல்லாம் இல்லாத பிரச்சினைகளை திட்டமிட்டே கிளப்பிவிடுகிறது, இந்து முன்னணி கும்பல். இவர்களின் விஷமப் பிரச்சாரத்திற்கு இதுவரை பார்ப்பன - மேல்சாதி வெறியர்கள்தான் பெருமளவு அடிமையாகி அணிதிரண்டிருக்கிறார்கள். ஏராளமான பசப்பல்கள் மூலம் பிற சாதியினரையும் ஏன் ஓரிரு முஸ்லீம்களையும்கூட தமக்கு அடிமையாக்கி சவாரி செய்ய முனைகின்றன, ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்கள். ராஜகோபாலன் 'சூத்திரர்' என்பதை முன்னிறுத்தி பிரச்சாரம் செய்தும் ஆதாயம் தேட முனைகிறது, இந்து முன்னணி. திருப்பரங்குன்றம் மலையில் தீபத்தை ஒரு முஸ்லீம் பிரமுகர் வேண்டுமானால் ஏற்றி வைக்கட்டும் என்று கூறுகிறது. விநாயகர் ஊர்வலத்தை தாழ்த்தப்பட்டவர்களைக் கொண்டு தொடங்கி வைத்தும் நாடகமாடுகின்றது.

தமிழர்களுக்கு எள் முனையளவும் தொடர்பில்லாத பண்பாட்டு - கலாச்சார முறைகளை புகுத்தி அவர்களது பாரம்பரிய பண்பாட்டு முறைகளை பின்னுக்கு தள்ளி மறைந்தொழிந்து போவதை திட்டமிட்டு செய்து வருகின்றன, இப்பார்ப்பனீய - இந்து சனாதன அமைப்பு. தீபாவளி, நவராத்திரி, தசரா, ஹோலி பண்டிகைகள், ராக்கி கட்டுவது வண்ணப்பொடி தூவுவது போன்ற வடநாட்டு பார்ப்பன மேல்சாதியினரின் பண்பாட்டு - பழக்க வழக்கங்களை இங்கு திணித்து தமிழர்களை அடிமைகளாக்கி வருகிறார்கள். விநாயகர் ஊர்வலம் போன்று, மஹா ஆரத்தி விழா, கார்த்திகை தீபமேற்றும் விழா என்று புதிதுபுதிதாக உருவாக்கியும் வருகிறது, இந்து முன்னணிக் கும்பல். இவைகளோடு இந்துமதவெறியையும் சேர்த்தே ஊட்டுகிறார்கள். குறிப்பிட்ட மேல்சாதியினரின் பண்பாட்டு முறைகளை மட்டுமே நிலைநிறுத்த முனைகிறார்கள்.

ஆர்.எஸ்.எஸ். பரிவாரங்களின் மதப்பற்று, தேசப்பற்று போன்ற கூச்சல் முஸ்லீம்களுக்கு மட்டுமல்ல, சாதாரண உழைக்கும் மக்களுக்கும் எதிரானதுதான். நச்சு பார்த்தீனியமாக பரவிவரும் இந்துமதவெறிதான் மக்களை மோதவிட்டு பெருமளவு உயிர்பலி கேட்கிறது; முஸ்லீம் மதவெறியோ இதன் எதிர்விளைவாகத்தான் இங்கு இருக்கிறது. அதாவது மதவெறிநோயைப் பரப்பும் கிருமி இந்துமதவெறிக் கும்பலே. இதன் தாக்குதல் நடவடிக்கைகளை தடுக்காமல் முஸ்லீம்களின் தற்காப்பு நடவடிக்கைகளைத் தடுக்க முடியாது. ஆனால் பார்ப்பன


படிப்பகம்

www.padippakam.com

ஜெயா கும்பல் முஸ்லீம்களின் 'தற்காப்பு நடவடிக்கை'களைத்தான் பிரதான குற்றமாக பாவிக்கின்றது.

ராஜகோபாலன் கொலையைத் தொடர்ந்து இந்து முன்னணி கும்பல் நடத்திய வன்முறை - தாக்குதல்களை வேடிக்கை பார்த்த போலீசு பதில் தாக்குதலில் ஈடுபட்ட முஸ்லீம் மக்கள் மட்டுமல்லாது, பொது மக்களின் மீதும் நடவடிக்கை எடுத்தது; கைது செய்து பொய் வழக்கு போட்டது. தற்போது இவ்வழக்கு தொடர்பாக கைது செய்து விசாரணை நடத்திவரும் சீனி நைனார் என்பவரை கொடிய ''தடா'' சட்டத்தில் போட்டுள்ளது. ஆர்.எஸ்.எஸ். அலுவலக குண்டு வெடிப்பிலும் சரி (சந்தேகத்தின் பேரில் - கைது செய்யப்பட்ட கோவை பாட்ஷா முதலானவர்கள் ''தடா''வில் சிறை வைக்கப்பட்டனர்), ராஜகோபாலன் கொலை வழக்கிலும் சரி குற்றவாளிகள் பற்றி பலவாறாக செய்திகள் - யூகங்கள் வெளிவந்தபோதும் மத்திய, மாநில அரசுகள் முஸ்லீம்கள் மீதே இத்தகைய கொடிய நடவடிக்கைகளை எடுத்து இந்துவெறியர்களுக்கு பக்கபலமாக நிற்கின்றன.

மதுரை மீனாட்சி கோவில் வளாக கடைகள், கழிப்பறை கட்டிடங்களின் ''கான்டிராட்''டை அ.தி.மு.க. எம்.பி ராஜன் செல்லப்பா என்பவர் எடுத்து தனது பினாமி கிட்டாபாய் என்கிற முஸ்லீம் பிரமுகர் மூலம் அடாவடியாக அதிக வசூல் செய்து வருகிறார். இதற்கு எதிராகப் போராட்டம் நடத்தி இந்த ''கான்ராக்ட்'' தனது ஆட்கள் கைக்கு மாற வேண்டும் என்று முயற்சி எடுத்தார், ராஜகோபாலன். இதன் காரணமாக, பழி தீர்க்கப்பட்டிக்கலாம் என்கிற கூற்றை மறுக்க முடியாது. ஏனெனில் ராஜகோபாலன் கொலையைத் தொடர்ந்து கன்னியாகுமரியில் இந்து முன்னணி உள்ளூர் பிரமுகர் சவுந்தர்ராஜன், கள்ளச்சாராய தொழில் நடத்தும் அ.தி.மு.க. புள்ளிகளால் கொலை செய்யப்பட்டதைப் போல் இதற்கும் வாய்ப்புகள் அதிகமுண்டு. இதன் உண்மை தெரிந்து பல்வேறு அனுகூலங்களுக்காக - ஏன் வழக்கை முஸ்லீம்கள் பக்கம் திசை திருப்புவதற்காகக்கூட - பேரம்பேசி இந்து முன்னணிக் கும்பல் விட்டு கொடுத்திருக்கவும் வாய்ப்பிருக்கிறது.

ராஜகோபாலன் அ.தி.மு.க. ரௌடிக் கும்பலால் கொல்லப்பட்டிருந்தாலும் சரி, முஸ்லீம் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டிருந்தாலும் சரி இது அவரே தேடிக் கொண்ட முடிவு. விதைத்தவன் அறுவடை செய்துதானே ஆக வேண்டும்?! மதவெறியை திட்டமிட்டு தூண்டும் கிரிமினல் குற்றவாளிக்கு மதவெறி பயங்கரவாதிக்கு இரங்கல் தெரிவிப்பது உழைக்கும் மக்களுக்கு எதிரானதே!

● ராசு



(கை விலங்குடன் சிகிச்சை

# தாழ்த்தப்பட்டோர் கிள்ளுகீரையா?

தாழ்த்தப்பட்டவர்கள் மீதான தாக்குதல் பட்டியல் நீண்டு கொண்டே போவதோடு அதனளவு அதிகரித்தும் வருகிறது. கடந்த அக்டோபர் 10-ந் தேதி செங்கல்பட்டில் நிலம் கேட்டு போராடிய காரணை (மாமல்லபுரம் அருகே உள்ள கிராமம்) மக்கள் மீது போலீசு 45 நிமிடமாக 52 சுற்று சுட்டு கண்மூடித்தனமாக வெறியாட்டமிட்டது. தடியடி, கண்ணீர் புகை போன்ற எச்சரிக்கை நடவடிக்கை எதுவும் இல்லாமல் நடத்திய இத்துப்பாக்கி சூட்டில் ஜான் தாமஸ் உட்பட மூவர் இறந்தனர். பலர் காயமடைந்துள்ளனர். வெறிதணியாத போலீசு கலைந்து சென்ற தாழ்த்தப்பட்ட மக்களை விரட்டிப் பிடித்து 54 பெண்கள் உட்பட 150 பேரை கைது செய்து சிறையில் அடைத்தது. பெண்கள் இரவு 6 மணிக்கு மேலும் போலீசு நிலையத்தில் வைத்து தாக்கப்பட்டனர்.

மேலும் செங்கை மாவட்டத்தைச் சேர்ந்த தாழ்த்தப்பட்டோர் இயக்கத் தலைவர்களையும் முன்னோடிகளையும் விவசாய சங்கங்கள் உட்பட பல ஊழியர்களையும் கைது செய்ய போலீசு கிராமம் கிராமமாகச் சென்றது. வீடு வீடாகப் புகுந்து சிறுவர்கள், முதியவர்கள் என்று கூட பாராமல் மிருகத்தனமாகத் தாக்கியது. துப்பாக்கி சூட்டில் மரணம் அடைந்த ஜான் தாமஸ் உடலை உறவினர் தவிர கிராம மக்கள் யாரும் இறுதி மரியாதைகூட செய்யவிடாமல் தடுத்து அடக்குமுறையை ஏவியது. போலீசு. பலரை கைது செய்து 48 பேர் மீது பொய் வழக்குகள் போட்டுள்ளது.

காரணையிலுள்ள 650 ஏக்கர் நிலம் 1933-ல் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட பஞ்சமி நிலங்களாகும். பின்னர் இதற்கு பட்டா வழங்கப்பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் பின்தங்கிய நிலையைப் பயன்படுத்தி உயர் சாதியினர் சிலர் நிலத்தை ஆக்கிரமித்து போலி ஆவணங்களைத் தயாரித்து வீட்டுமனைகளாக விற்பனை செய்து கொண்டிருக்கின்றனர். மார்வாடி கௌதம் சந்த், சகுந்தலா, வாசுதேவ நாயக்கர், புரோக்கர் ஜெகதீசன், போலீசு ஐ.ஜி. பெருமாள் சாமி ஆகியோர் இந்நில ஆக்கிரமிப்பில் கூட்டாக ஈடுபட்டுள்ள புள்ளிகள். நில ஆக்கிரமிப்புக்கு எதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் தீபன் சக்கரவர்த்தி தலைமையில் பல வடிவங்களில் போராடியும் பயனில்லை. அக்டோபர் 5-ந் தேதி கௌதம் சந்த் ஆக்கிரமித்த நிலத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் அம்பேத்கார் சிலையை வைத்தனர். அன்று மாலையே அதிகாரிகள், போலீசு பட்டாளம் வந்து சிலையை இடித்ததோடு சுற்று பகுதி கிராமங்களில் புகுந்து தாழ்த்தப்பட்டவர்களைத் தாக்கி வெறியாட்டமிட்டது. தலைவர் தீபன் சக்கரவர்த்தி உட்பட 14 பேரை சில நாளில் கைது செய்தனர். இதனால் ஆத்திரத்திற்குள்ளான தாழ்த்தப்பட்ட மக்கள் கிளர்ந்தெழுந்து 10-ந் தேதி செங்கல்பட்டு துணை ஆட்சியரை சந்தித்து மனு கொடுக்கச் சென்றனர். துணை ஆட்சியாளர் ரமேஷ் சந்த் மீனா மக்கள் பிரதிநிதிகளை அவமதித்து அனுப்பியதால் தாழ்த்தப்பட்ட மக்கள் ஜி.எஸ்.டி. சாலையில் மறியல் செய்தனர். உள்ளூர் ரவுடிக்கும்பல் இந்த நேரத்தில் ஏற்படுத்திய கலவரத்தை சாக்காக வைத்துதான் போலீசு காட்டுத்தனமாக துப்பாக்கி பிரயோகம் செய்தது.

இத்தாக்குதலுக்கு எதிராக தாழ்த்தப்பட்டோர் அமைப்புகளும் சில ஜனநாயக அமைப்புகளும் புரட்சிகர குழுக்களும் தான் பிரச்சார இயக்கம் மேற்கொண்டன. பகுதியிலுள்ள ஓட்டுக்கட்சிகளோ உரிய அக்கறை செலுத்தவில்லை. சட்டமன்றத்தில் எதிர்க்கட்சியினர் பிரச்சினை கிளப்பியதனால் ஒப்பிற்கு ஜெயாவும் வருத்தம் தெரிவித்து முறையான விசாரணை, நீதிபதி தலைமையில் நடக்கும் என அறிவித்தார். எனினும் பகுதி மக்கள் மற்றும் பல்வேறு அமைப்பினர் ''பஞ்சமி நில மீட்பு போராட்டக் குழு'' என்ற பெயரில் ஒருங்கிணைந்து நீதி, நிவாரண கோரிக்கைகளை வைத்து போராடி வருகின்றனர். நவம்பர் 19-ந்தேதி சென்னையில் கண்டனப் பேரணியையும் பனகல் பூங்காவில் பொதுக்கூட்டத்தையும் நடத்தியுள்ளனர்.


படிப்பகம்

www.padippakam.com

## இலங்கை:

# திசநாயகா படுகொலையும் பரம்பரை ஆட்சியும்

இலங்கையின் அதிபர் தேர்தலில் போட்டியிட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரான காமினி திசநாயகா, கடந்த அக்டோபர் 23-ந் தேதியன்று நள்ளிரவில் மனித வெடிகுண்டு வெடித்து கோரமான முறையில் கொல்லப்பட்டுள்ளார். அதைத் தொடர்ந்து நடந்த தேர்தலில் பிரதமர் சந்திரிகா அதிபராக வெற்றி பெற்றுள்ளார்.

அதிபர் தேர்தலுக்கான இறுதிக்கட்ட தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் நடந்த இக்குண்டு வெடிப்பில் திசநாயகா வுடன் 52 பேர் கொல்லப்பட்டுள்ளனர். ராஜீவ் கொலையைப் போலவே, ஆர்.டி. எக்ஸ் எனும் மிக சக்திவாய்ந்த பிளாஸ்டிக் வெடிமருந்து கொண்ட மனித வெடிகுண்டாக வந்த நபரால் இக்குண்டு வெடிப்பு நடத்தப்பட்டுள்ளது. இக்கொலையை புலிகள்தான் செய்திருப்பார்கள் என்ற ஊகம் மற்றும் சிங்கள இனவெறியர்களின் நிர்பந்தம் காரணமாக, புலிகளுக்கும் சந்திரிகா அரசுக்குமிடையிலான சமரச பேச்சுவார்த்தை ஒருதலைப் பட்சமாக நிறுத்தப்பட்டது. திசநாயகா கொலை பற்றிய விசாரணைக்கு இந்திய சிறப்பு புலனாய்வுக் குழுவின் உதவியை இலங்கை அரசு கோரியுள்ளது.

திசநாயகா கொலையைத் தொடர்ந்து இந்தியாவின் உற்ற நண்பரை இழந்துவிட்ட ஆத்திரத்தில் புலிகளுடன் எவ்வித பேச்சுவார்த்தையும் கூடாது; கடுமையாக ஒடுக்க வேண்டுமென கூறும் இந்திய ஆளும் வர்க்கப் பத்திரிகைகள் திசநாயகா மீது அனுதாபத்தை ஏற்படுத்துகின்றன. ஆனால் திசநாயகா, சிங்கள இனவெறிக்கு எதிரானவரோ, தமிழ் மக்களின் நியாயமான சுயநிர்ணய உரிமைப் போரை அங்கீகரிக்கும் ஜனநாயகவாதியோ அல்ல. இந்திய மேலாதிக்கத்தை ஆதரிக்கும் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை தயாரிப்பதிலும் நிறைவேற்றுவதிலும் முக்கிய பங்காற்றியவர்தான் திசநாயகா. சிங்கள இனவெறியர்களுக்கு ஆதரவாக மகாவலி திட்டத்தின் மூலம் ஈழத் தமிழர்களை வெளியேற்றி, சிங்களர்களை அங்கு குடியமர்த்தினார். யாழ் நூலகம் தீக்கிரையாக்கப்பட்டதில் அவருடைய கை மறைந்திருந்தது. அதிபர் தேர்தலில் வெற்றி பெறவும், அதிபரான பின் ஈழத்தமிழர்களையும் புலிகளையும் ஒடுக்கவும் இந்தியாவிடம் ஆதரவு திரட்டுவதற்காக அவர் இரகசியமாக தமிழகத்துக்கு வந்து அரசியல் தரகரான சுப்பிரமணிய சாமியைச் சந்தித்து விட்டுச் சென்றுள்ளார்.

அவரது இனவெறி பாசிச நடவடிக்கைகளும், இந்திய மேலாதிக்க ஆதரவுமே அவரது கொலைக்குக் காரணங்களாக அமைந்து விட்டன.

திசநாயகாவின் சாவைத் தொடர்ந்து, அவரது மனைவி சிறீமாவை அதிபர் தேர்தலுக்கான வேட்பாளராக நிறுத்தி அனுதாப அலையெழுப்ப ஐக்கிய தேசியக் கட்சி முயன்றது. ஆனால் 17 ஆண்டு காலமாக இக்கட்சியின் இனவெறி பாசிச பயங்கரவாதத்தால் வெறுப்புற்றிருந்த இலங்கை மக்கள், சுதந்திரக் கட்சிக் கூட்டணி வேட்பாளரான சந்திரிகாவை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்துள்ளனர். அதிபராகப் பதவியேற்ற சந்திரிகா, தனது தாயாரும் முன்னாள் பிரதமருமான சிறீமாவோ பண்டாரநாயகாவை பிரதமராக நியமித்து, தமது குடும்பத்தின் பரம்பரை ஆட்சியை நிறுவியுள்ளார். புலிகளுடன் மீண்டும் சமரச பேச்சுவார்த்தை தொடரும் என்று அறிவித்துள்ளார். புலிகளும் இதை வரவேற்று ஒருவார காலப் போர் நிறுத்தத்தை அறிவித்துள்ளனர்.

இச்சமரச பேச்சுவார்த்தை மூலம் ஓர் இடைக்கால ஏற்பாடு கிட்டும்; ஈழத்தில் அமைதிதிரும்பும் என்று குட்டி முதலாளித்துவ ஈழ ஆதரவாளர்கள் பகற்கனவு காண்கிறார்கள். உண்மையில் புலிகளோ, சந்திரிகா அரசோ சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஒருபோதும் நம்பிக்கை கொள்ளவில்லை. சமரசப் பேச்சுவார்த்தை நாடகமாடி அரசியல் ஆதாயம் தேடவும், எதிர்த் தரப்பினரை அரசியல் ரீதியில் முடமாக்கவும் அதிபர் சந்திரிகா முயற்சிக்கிறார். பேச்சு வார்த்தை தோல்வியடைந்தால் புலிகள் மீது பழிபோட்டு தனிமைப்படுத்துவது, திசநாயகா கொலையை துருப்புச் சீட்டாகக் கொண்டு சிங்கள இனவெறியைக் கிளறிவிட்டு புலிகளையும் ஈழ மக்களையும் ஒடுக்குவது என்கிற நோக்கத்தோடுதான் அவர் காய்களை நகர்த்துகிறார்.

புலிகளோ, தம்மை சமாதானவாதிகளாக காட்டிக் கொள்ளவும், தம்மை பலப்படுத்திக் கொள்ளவும் கிடைத்த வாய்ப்பாக கருதியே இப்பேச்சுவார்த்தையைப் பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றனர். இச் சமாதான பேச்சுவார்த்தைகளால் தீர்வு காண முடியாது என்பதையே மேலை நாடுகளில் குடியேறிய புலிகளால் நடத்தப்படும் பத்திரிகைகள் எழுதுகின்றன. இப்படி இருதரப்புமே தமது ஆதாயத்துக்காக நடத்தும் நாடகம் தான் இச் சமாதான பேச்சுவார்த்தை என்பது இப்போது நிரூபணமாகி வருகிறது.

எனவே சந்திரிகா அரசின் ஆரம்ப சூரத்தனங்கள், சமாதான பாசாங்குகளை நம்பி ஈழ மக்கள் ஏமாந்துவிடக் கூடாது. பாசிச சர்வாதிகார புலிகளின் சைவப்புலி நாடகத்தைக் கண்டு அதன் மீது நம்பிக்கை வைக்கவும் கூடாது. சிங்கள உழைக்கும் மக்களின் நம்பிக்கையையும் ஆதரவையும் பெற்று, ஈழத்தில் ஒரு ஜனநாயக அமைப்பு உருவாகாத வரையில் சிங்கள இனவெறி பாசிசத்தையோ, புலிகளின் பாசிச பயங்கரவாதத்தையோ ஒருபோதும் முடிவுக்குக் கொண்டு வர முடியாது. ●



குண்டு வெடிப்பில் பலியான திசநாயகா

இலங்கை அதிபர் சந்திரிகா; பிரதமர் பண்டாரநாயகா;





படிப்பகம்

www.padippakam.com

## வங்கதேச நெருக்கடி: ஏகாதிபத்தியங்களின் தலையீடு

ஒரு நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடுவதென்பது அந்நாட்டின் சுயாதிபத்திய உரிமைக்கே எதிரானது என்று இத்தனை நாளும் பசப்பி வந்த ஏகாதிபத்திய வல்லரசுகள், இப்போது வெளிப்படையாகவே ஏழை நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிட்டு, ஆதிக்கம் செலுத்தி ஆட்டிப் படைக்கின்றன.

வங்கதேசத்தில் தேசியக் கட்சியின் பிரதமரான கலீதா ஜியாவின் கூட்டணி ஆட்சி நடக்கிறது. அதன் ஊழல் - ஒடுக்குமுறையை எதிர்த்து ஷேக்ஹசீனா வஜீத் தலைமையிலான அவாமி லீக் கட்சியும் மற்றும் பிற எதிர்க்கட்சிகளும் கலீதாவின் ஆட்சியைக் கலைத்து தேர்தல் நடத்தக் கோரி கடந்த மார்ச் முதலாக நாடாளுமன்றத்தைப் புறக்கணித்து, வீதிகளிலே போராட்டத்தைப் தொடர்கின்றன நாடாளுமன்றம் செயல்படாமல் போனதால், கலீதா அரசின் எந்தக் கொள்கையும் நிறைவேற்ற முடியாமல், அந்நாட்டின் 'ஜனநாயகம்' மரணப் படுக்கையில் கிடக்கிறது. கலீதா அரசு, எதிர்க்கட்சிகளைப் பலமுறை சமரசத்துக்கு அழைத்தும் அவை ஏற்க மறுத்துவிட்டன.

**ஏகாதிபத்திய ஆதிக்கத் தலையீட்டை எதிர்த்து வங்கதேச இளைஞர்களும் ஜனநாயக சக்திகளும் நடத்தும் ஆர்ப்பாட்டம்**

வங்கதேசத்தில் நிலவும் இந்த அரசியல் நெருக்கடியைச் சாதகமாக்கிக் கொண்டு 'காமன்வெல்த்' நாடுகளின் கூட்டமைப்பு என்னும் பெயரில் ஏகாதிபத்தியங்கள் நேரடியாகவே தலையிடுகின்றன. 'காமன்வெல்த்' கூட்டமைப்பின் சார்பாக அதன் தூதர் சர் நைனியன் ஸ்டீபன் கடந்த அக்டோபர் 13-ந் தேதிமுதலாக அந்நாட்டில் தங்கி ஆளும் கட்சியையும் எதிர்க்கட்சிகளையும் தனித்தனியே சந்தித்துப் பேசி சமரசத்துக்கு முயற்சிக்கிறார். எர்ஷாத்தின் சர்வாதிகார ஆட்சியை முடிவுக்குக் கொண்டு வந்த வங்கதேச நாடாளுமன்ற ஜனநாயகக் குழந்தையைக் காப்பாற்றவே தாம்



இந்நடவடிக்கையை மேற்கொள்வதாக ஏகாதிபத்தியங்கள் நாடகமாடுகின்றன. எதிர்க்கட்சிகள் கலீதா அரசைக் கலைத்து ஒரு இடைக்கால-நடுநிலை அரசை நிறுவி தேர்தல் நடத்தக் கோருகின்றன. இது சட்டவிரோதமானது என்று கலீதா அரசு மறுக்கிறது. இதனால் 'காமன்வெல்த்' தூதரின் சமரசப் பேச்சு வார்த்தை இழுபறியில் சிக்கி தோல்வியடைந்து விட்டது. இருப்பினும் ஏகாதிபத்திய தூதர்கள் அந்நாட்டின் முகாமிட்டு மீண்டும் சமரசத்துக்கு முயற்சிக்கின்றனர். மறுபுறம், ஏகாதிபத்தியங்களின் நேரடித் தலையீட்டை எதிர்த்து மாணவர்களும், முற்போக்கு - ஜனநாயக சக்திகளும் வீதிகளிலே திரண்டு போராடி வருகின்றனர்.

## நேற்று பிளேக்; இன்று மலேரியா மீண்டும் கொள்ளை நோய்கள் படையெடுப்பு

குஜராத் மாநிலத்தில் நூற்றுக்கணக்கானோரைக் காவு கொண்ட பிளேக் நோயைத் தொடர்ந்து, ராஜஸ்தான் மாநிலத்தைத் தாக்கியுள்ள மலேரியா நோயினால் இதுவரை 1000-க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளனர். இன்று 67,000 பேர் இந்நோயினால் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருப்பதாக செய்திகள் வருகின்றன. பாரதீய ஜனதா ஆளும் ராஜஸ்தான் மாநில அரசோ, ஏறத்தாழ ஒரு மாதத்துக்கும் மேலாக இவற்றை மறைத்து வந்ததோடு, சாவு எண்ணிக்கை வெறும் 200 பேர்தான் என்று கூசாமல் புளுகி வருகிறது. ஏற்கனவே பிளேக் நோய் காரணமாக வெளிநாடுகளுடன் போக்குவரத்து - வணிகம் பாதிக்கப்பட்டு பல கோடி ரூபாய் நட்டமான நிலையில், மலேரியா பற்றிய செய்தி வெளியானால் பேராபத்தாகிவிடும் என்று மத்திய - மாநில அரசுகள் திட்டமிட்டே மலேரியா கோரத்தை மூடி மறைத்துவிட்டன. மலேரியா நோய் பத்தாண்டுகளுக்கு முன்பே ஒழிக்கப்பட்டு விட்டதாக விளம்பரம் செய்கிறது, அரசு. ஆனால், உலக வங்கியின் உத்திரவுப்படி மருத்துவ - சுகாதார அடிப்படை வசதிகளை அறவே புறக்கணித்ததன் விளைவாக, ஒழிக்கப்பட்ட கொள்ளை நோய்கள் மீண்டும் பெருகத் தொடங்கிவிட்டன. ராஜஸ்தானைத் தொடர்ந்து டெல்லியையும் மே. வங்கத்தையும் மலேரியா நோய் தாக்கிவருகிறது.

இந்நிலையில் கடந்த அக்டோபர் மாதத்தில் புதிய மருந்துக் கொள்கையை அறிவித்துள்ள மத்திய அரசு, நாட்டு மக்களின் உயிர் வாழும் உரிமையையும் பறித்து சுடுகாட்டுக்குத் துரத்தத் தொடங்கிவிட்டது. இப்புதிய கொள்கையின்படி, மக்களுக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் 69 உயிர் காக்கும் மருந்துகளின் மீதான விலைக்கட்டுப்பாடு நீக்கப்பட்டுள்ளது. அதாவது, மருந்து உற்பத்தியாளர்கள் தமது விருப்பம் போல் இவற்றின் விலையை உயர்த்திக் கொள்ளலாம். கட்டுப்பாடுகள் நீங்கி உற்பத்தியாளர்களிடையே போட்டி அதிகரித்தால் விலைகள் குறைந்துவிடும் என்று காதில் பூச்சுற்றுகிறார் மத்திய அமைச்சர் ராம் லக்கான்சிங் யாதவ். இதுதவிர, அன்னிய ஏகபோக மருந்து நிறுவனங்கள் இந்தியாவில் தொழிற்சாலைகளை நிறுவவும், இந்தியக் கம்பெனிகளைக் கபளீகரம் செய்து உள்நாட்டு நிறுவனங்கள் பன்னாட்டு பகாசுர மருந்துக் கம்பெனிகளுடன் கூட்டுச் சேரவும் தாராள அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. நாட்டு விரோத, மக்கள் விரோத இப்புதிய மருந்துக் கொள்கையை நாடாளுமன்றத்தில் கூட விவாதிக்காமல் சர்வாதிகாரமாக அறிவித்துள்ளது. அரசுத்துறை நிறுவனங்கள் தயாரிக்கும் 15 முக்கிய மருந்துகள் இப்போது 5 ஆகக் குறைக்கப்பட்டு, அன்னிய மற்றும் தரகுப் பெருமுதலாளிகளின் கொள்ளைக்காக அவை ஒதுக்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டில் அரசு விலைக் கட்டுப்பாட்டின் கீழிருந்த 143 மருந்துகள் இன்று 73 ஆக சுருங்கிவிட்டது. ''காட்'' ஒப்பந்தப்படி கட்டுப்பாடுகள் அனைத்தையும் படிப்படியாக நீக்கி வருவதன் விளைவாக, அத்தியாவசிய மருந்துப் பொருட்கள் 3 மடங்கு விலை உயரும் என்று ஆளும் வர்க்கப் பொருளாதாரவாதிகளே அச்சம் தெரிவித்துள்ளனர். இந்த லட்சணத்தில் கி.பி. 2000 ஆண்டுக்குள்ளாக இந்தியாவில் வாழும் 90 கோடி மக்களுக்கு மருத்துவம் மற்றும் அடிப்படை சுகாதார வசதிகளை செய்து கொடுப்போம் என்று காங்கிரசுத் துரோகிகள் தமது கொள்கையாக அறிவித்துள்ளனர், வெட்கக்கேடு!


படிப்பகம்

www.padippakam.com

## சாதிவெறியர்களின் சமூக புறக்கணிப்பு தாழ்த்தப்பட்டவருக்கு நேர்ந்த அவலம்

ஈராயிரம் ஆண்டுகளாகக் கட்டி வளர்த்த சாதிய முறை - அதை அவ்வளவு எளிதில் மீறிவிட அனுமதிப்பார்களா சாதிவெறியர்கள்? எத்தனையோ இளங் காதலர்களைக் கொன்றவர்கள், எத்தனையோ இளைஞர்களை தற்கொலைக்குத் தள்ளியவர்கள் - கலப்புத் திருமணம் செய்த தாழ்த்தப்பட்ட பெண்ணாகிய பிரஜாஹிதாவை வாழவிடுவார்களா?

ஆந்திர மாநிலம் ஐதராபாத்திலுள்ள இந்து அறநிலையத்துறை அலுவலகத்தில் 1983 முதலாக இடைநிலை ஊழியராகப் பணியாற்றி வருபவர் பிரஜாஹிதா. பிறப்பால் தாழ்த்தப்பட்டவரான அவர் 1988-ல் பிராமண சாதியைச் சேர்ந்த பத்திரிகை செய்தியாளரைக் காதலித்து திருமணம் செய்து கொண்டார். இந்தக் 'குற்றத்'துக்காக அவருக்கு ஏற்பட்ட சோதனைகளைச் சொல்லி மாளாது. "பிராமணரை மணந்த தாழ்த்தப்பட்ட பெண்ணை ஒரு விதவையாகத்தான் கருதமுடியும்; அவளை இந்துக் கோயிலினுள் அனுமதிக்க முடியாது" என்று கொக்கரிக்கும் சாதிவெறி பிடித்த அதிகாரிகள் அவளுக்கு விடுமுறை, பதவி உயர்வு, பேறுகாலச் சலுகைகளை மறுத்தனர். எந்த இடத்தில் என்ன வேலை என்று வரையறுக்காமல் இழுத்தடித்தனர். நிறைமாத கர்ப்பிணியான அவர் அவசிய சேவை காரணமாக வேலைக்குக் கட்டாயமாக வரவேண்டுமென உத்திரவிட்டனர். பிரசவத்திற்குப் பிறகு அவர் மருத்துவமனையில் இருந்த போதுகூட அவர் வேலைக்கு வரவேண்டுமென ஓலை அனுப்பினர். இந்த அநியாயத்தை ஏற்க மறுத்து அவர் விடுப்பு கோரியதற்காக அவரது சேவைக் குறிப்பேட்டில் கரும்புள்ளி வைக்கப்பட்டது. வேலைக்குத் திரும்பிய பிறகும் அலுவலகங்களில் சாதிவெறியர்கள் ஒன்று சேர்ந்து அவரை சமூகப் புறக்கணிப்பு செய்தனர். எந்தக் கோயிலுக்குள்ளும் பணி நிமித்தமாகக்கூட நுழையவிடாமல் அதிகார வர்க்க சாதிவெறியர்கள் விரட்டியடித்ததோடு, அவர் மீது கணக்கற்ற குற்ற அறிக்கைகளைத் தயாரித்து வேலை நீக்கம் செய்யவும் துடிக்கின்றனர். இக்கொடுஞ்செயலை எதிர்த்து உயரதிகாரிகள், அமைச்சர், முதல்வர் மட்டுமின்றி பிரதமர், 'குடியரசு' தலைவர், மகளிர் கமிஷன் உள்ளிட்ட பலருக்கும் பலமுறை முறையிட்டும்கூட எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

1979-ல் பிராமண சாதியில் பிறந்த கீலானந்த் ஜா என்ற அரசு ஊழியர் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மீனாத்திதேவியை கலப்பு மணம் செய்த 'குற்றத்'திற்காக பீகாரின் சாதிவெறி அதிகார வர்க்கத்தால் பந்தாடப்பட்டு, அரசு அலுவலகத்தினுள் நுழைய முடியாமல் விரட்டப்பட்டார். இக்கொடுமையை எதிர்த்து டெல்லி போட்கிளப் மைதானத்தில் அவர் தமது குடும்பத்துடன் "தர்ணா" போராட்டம் நடத்தியதை நாடே அறியும். அண்மையில் கரூர் அரசு மேல்நிலைப்பள்ளியிலிருந்து மாணிக்கம் என்ற தாழ்த்தப்பட்ட மாணவியை சாதிவெறியர்கள் நீக்கி வைத்துள்ளனர். மாவட்ட ஆட்சியாளர், கல்வி அதிகாரி முதலானோர் உத்திரவிட்ட போதிலும் பள்ளியில் சேர்க்க மறுத்து சாதியத் திமிரோடு கொக்கரிக்கின்றனர். சாதிக்கொடுமைகளை சீர்திருத்தச் சட்டங்களால் ஒழித்துவிட்டதாக நாடகமாடும் ஆட்சியாளர்களின் சாதிவெறி கோர முகத்தை பிரஜாஹிதா விவகாரம் மீண்டும் படம் பிடித்துக் காட்டிவிட்டது.

## பஞ்சாப் பயங்கரம்: ஆளுநர் அடித்த கொள்ளை

ஓட்டுக்கட்சி அரசியல்வாதிகள் லஞ்ச - ஊழல் கொள்ளையில் ஈடுபட்டு கோடிகோடியாய் குவிப்பதென்பது புதிய விவகாரம் அல்ல. ஆனால் அவர்களையே விஞ்சும் வண்ணம் ஒரு மாநிலத்தின் ஆளுநரே கோடிகோடியாய் குவித்து வைத்துள்ளது அம்பலமாகி, அதை எப்படி மூடிமறைப்பதென்று அரசே விழிபிதுங்கி நிற்கிறது. பஞ்சாப் மாநிலத்தின் ஆளுநராக இருந்த சுரேந்திரநாத் சில மாதங்களுக்கு முன்பு விமான விபத்தில் மாண்டுபோனார். விபத்து நடந்த இடத்தில் பல லட்ச ரூபாய்க்கு கரன்சி நோட்டுகள் சிதறிக் கிடந்தன. அவர் மறைவுக்குப் பிறகு, ஆளுநர் மாளிகையில் கோடிக் கணக்கில் கத்தை கத்தையாக கரன்சி நோட்டுகள், நகைகள், பங்கு பத்திரங்கள், நில ஆவணங்கள், நிரந்தர வைப்புத் தொகை பத்திரங்கள் முதலியன இருந்துள்ளன. ஆளுநர் பெயரிலும் அவரது குடும்பத்தார் பெயரிலுமான இச்சொத்துக்களின் மதிப்பு 50 கோடியைத் தாண்டும் என்று அதிகாரிகள்



கலப்பு திருமணம் செய்ததற்காக சாதி வெறியர்களால் சமூகப் புறக்கணிப்பு செய்யப்பட்ட பிரஜாஹிதா

மதிப்பிடுகின்றனர். ஆளுநரும் அவரது குடும்பத்தாரும் சட்டபூர்வ வழிகளின் மூலம் இவ்வளவு சொத்து சேர்த்திருக்க அடிப்படையே இல்லை. முதலில் ஐ.பி.எஸ். அதிகாரியாகவும் பின்னர் சிறிது காலம் அசாம் மாநில கவர்னராகவும் இருந்த சுரேந்திரநாத்துக்கு இவ்வளவு சொத்து எப்படி வந்தது என்பது மர்மமாகவே உள்ளது.

ஆளுநரது இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட மத்திய உள்துறை அமைச்சர் சவாண், ஆளுநர் மாளிகையிலிருந்து ஏராளமான நகை மற்றும் பணத்தை டெல்லிக்குக் கொண்டு சென்றுள்ளார். இதைக் கொண்டு மாண்டுபோன ஆளுநர் பெயரில் அறக்கட்டளை அமைக்கப் போவதாக செய்திகள் வந்தன. ஆனால் உள்துறை அமைச்சர் இது குறித்து அதிகாரபூர்வமாக எதுவும் அறிவிக்கவில்லை. கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புடைய அந்த பணமும் நகையும் என்னவானது என்றும் தெரியவில்லை. அப்படியே அறக்கட்டளை நிறுவினாலும், அது சட்டவிரோத -கிரிமினல் குற்றமாகும் என்பதால், இந்த விவகாரத்தை அப்படியே அமுக்கிவிட முயற்சிக்கின்றனர். பஞ்சாபில் தீவிரவாதத்தை ஒடுக்க மத்திய அரசு ரகசியமாக ஒதுக்கீடு செய்த கோடிக்கணக்கான ரூபாயை ஆளுநர் பொய்க் கணக்குக் காட்டி சுருட்டியிருக்கலாம் என்று அதிகாரத் தாழ்வாரங்களில் கிசுகிசுக்கப்படுகிறது. ஆளுநரின் முறைகேடான சொத்துக்கள் பற்றிய உண்மை அறிய ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கையையும்



படிப்பகம்

www.padippakam.com

உள்துறை அமைச்சகம் கிடப்பில் போட்டுவிட்டது. ஆளுநர் முறை கேடாக சொத்து சேர்த்துள்ளதைக் கண்டு, நாட்டின் அரசியலமைப்பே ஊழல் புற்று நோயால் முடங்கிவிட்டதாக ஆளும்வர்க்க சித்தாந்த வாதிகள் புலம்புகின்றனர். அவர்களது கவலையைப் போக்கும் வகையில், ஊழலுக்கு ஊற்று மூலமான இந்த அரசியலமைப்பை உழைக்கும் மக்கள் சவக்குழிக்கு அனுப்ப வேண்டியதுதான் இனி பாக்கியிருக்கிறது!

## வடகிழக்கு மாநிலங்களில் இனக் கலவர அபாயம்

பாசிச இந்திரா தனது தேர்தல் ஆதாயங்களுக்காக 1983-ல் அசாமின் நெல்லியில் இனப் படுகொலைகளைக் கட்டவிழ்த்து விட்டதைப் போல, மீண்டும் ஒரு இனவெறிப் படுகொலைக்கான அபாயத்தில் வடகிழக்கிந்திய மாநிலங்கள் சிக்கியுள்ளன. மிஜோரத்தில் பூர்வகுடியினர் அல்லாத வங்காளிகள் விரட்டப்படுகின்றனர். அருணாச்சல பிரதேசத்தில் சாக்மா அகதிகள் துரத்தப்படுகின்றனர். மேகாலயாவில் காசி இனத்தவர் அல்லாதோரை - குறிப்பாக நேபாளிகளை வெளியேற்றுகின்றனர். நாகாலாந்திலிருந்து அசாமிய வியாபாரிகளைத் துரத்துகின்றனர். பாரபெட்டா படுகொலைகளைத் தொடர்ந்து அசாம் அரசோ எல்லைப் பகுதியில் ஊரடங்கு உத்திரவு போட்டு படைகளைக் குவித்து, அந்நியர்கள் தமது மாநிலத்தில் நுழைந்தால் சுட்டுக் கொல்லுவோம் என்று கொக்கரிக்கிறது. அனைத்து வடகிழக்கு மாநில அரசுகளும் அக்டோபர் 30-ம் தேதிக்குள் பூர்வகுடியினர் அல்லாத அனைவரும் வெளியேற வேண்டுமென இறுதிக் கெடு விதித்துள்ளன.



நிச்சயமற்ற எதிர்காலம்: இன வெறியர்களின் தாக்குதலுக்கு அஞ்சி பரிதவிக்கும் சாக்மா அகதிகள்

மேகாலாயாவில் 1947-க்கு முன்னரே குடியேறியுள்ள நேபாளிகள் இன்று ஏறத்தாழ ஒரு லட்சம் பேராக பல்கிப் பெருகியுள்ளனர். நேபாளிகள் இந்தியாவில் குடியேறிப் பிழைக்க தடை ஏதும் கிடையாது என்று இந்திய-நேபாள அரசுகள் சட்டம் இயற்றியுள்ளன. ஜெயந்தியா குன்றுகளில் நிலக்கரி வெட்டும் கூலித் தொழிலாளர்களாகப் பிழைக்கும் இவர்களைத்தான் அந்நியர்கள் - எதிரிகள் என்று குற்றம் சாட்டி இனவெறியர்கள் துரத்துகின்றனர். 1966-ல் வங்கதேசத்தில் நடந்த இனப்படுகொலையைத் தொடர்ந்து அகதிகளாக ஓடிவந்த சாக்மா மக்கள் திரிபுராவிலும் அருணாச்சல பிரதேசத்திலும் எவ்வித அடிப்படை வசதிகளுமின்றி அல்லற்படுகின்றனர். இவர்களோடு ஹாஜோங் மற்றும் வங்க தேச முஸ்லிம் இனத்தவரும் வெளியேற வேண்டுமென அருணாசல பிரதேச மாணவர் சங்கமும் அம்மாநில முதல்வர் ஜிகாங் அபாங்கும் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இதே போல மிஜோ அரசு ஆதரவுடன் செயல்படும் மாணவர் அமைப்புகள் அசாமியர், வங்காளிகளை வெளியேற்றக் கோருவதோடு, அவர்களிடம் கட்டாய அபராதமும் வசூலிக்கின்றன. மணிப்பூரில் குக்கி இனப் போராளிகள், வங்காள முஸ்லிம்களைத் தாக்குகின்றனர். இது தவிர நாகா-குக்கி இனங்களுக்கிடையிலான பகைமை இன்று உச்சகட்டத்தை எட்டியுள்ளது.

பூர்வகுடியினர் அல்லாத வங்காளிகளும், அகதிகளாக வந்த சாக்மா இனத்தவரும், வங்கதேச முஸ்லீம்களும், பிழைப்புக்காக வந்த நேபாளிகளும் பூர்வகுடியினரைச் சுரண்டிக் கொழுப்பவர்களோ, ஆதிக்கம் செய்பவர்களோ அல்லர். பூர்வகுடியினரைப் போன்றே தமது சொந்த மண்ணாகக் கருதி உழைத்து வளப்படுத்தியவர்கள்தாம். ஆயினும் குறுகிய இனவெறி, பிராந்தியவெறியைக் கிளறிவிட்டு ஆளும் கும்பல்கள் ஆதாயமடையத் துடிக்கின்றன. மூண்டெழும் சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களிலிருந்து மக்களைத் திசைதிருப்பவும், பிளவுபடுத்தவும் இனவெறியை ஏவிவிடுகின்றன. இதன் விளைவாக வடகிழக்கு மாநிலங்கள் இன்னுமொரு ருவாண்டாவாக மாறுவதும், தமது சொந்த மண்ணிலேயே சிறுபான்மை இன மக்கள் அகதிகளாகிப்போகும் அபாயம் நிலவுகிறது.

## ஏகாதிபத்திய கோட்டையில் எழுச்சிமிகு போராட்டங்கள்

ஏகாதிபத்திய உலகின் கோட்டையாகக் கருதப்படும் ஐரோப்பிய நாடுகளில், கேடு கெட்ட முதலாளித்துவ ஆட்சிகளுக்கு எதிராக அண்மைக்காலமாக உழைக்கும் மக்களின் போராட்டங்கள் தீவிரமடைந்து வருகின்றன. கடந்த அக்டோபர் மாத மத்தியில் இத்தாலி அரசின் சிக்கன - சீரமைப்பு நடவடிக்கையை எதிர்த்து 30 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். தொழிலாளர்களின் ஓய்வூதியக் குறைப்பு, மக்களின் மருத்துவ - சுகாதார நலத்திட்ட மானியக்குறைப்பு, தொழிலாளர்களை கட்டாய வெளியேற்றம் செய்வது முதலானவற்றை உள்ளடக்கிய புதிய அரசின் கொள்கையை எதிர்த்து பெரி நகரிலிருந்து மிலான் நகர் வரை உழைக்கும் மக்கள் இதுவரை காணாத மிகப்பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தியுள்ளனர். இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தால் விமான, ரயில் போக்குவரத்தும் வங்கிகளும் இயங்க முடியாமல் இத்தாலி நாடே செயலற்று போனது. இத்தாலியில் எந்தக் கட்சியுமே தொடர்ந்து ஆள முடியாமல் அடிக்கடி ஆட்சி மாற்றங்கள் நடந்து வரும் வேளையில், மிகப்பெரும் முதலாளியான பெர்லுஸ்கோனி அந்நாட்டின் புதிய பிரதமராகியுள்ளார். ஆனால், ஆட்சிக்கு வந்த 5 மாதங்களிலேயே அவரது கொள்ளைக்கு எதிராகப் போராட்டங்கள் பெருகத் தொடங்கிவிட்டன. போதாக்குறைக்கு, அவரது "ஃபின் இன்வெஸ்ட்" நிறுவனம் வரி ஏய்ப்புக் குற்றங்களில் ஈடுபட்டு மோசடி செய்ததாக அம்பலப்பட்டு, மக்களிடம் தனிமைப்பட்டு கிடக்கிறார்.

இதேபோல, பிரிட்டனின் தலை நகரான லண்டனில் கடந்த அக்டோபர் மத்தியில் அரசின் அடக்குமுறை சட்ட மசோதாவை எதிர்த்து 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் திரண்டு மாபெரும் ஆர்ப்பாட்



படிப்பகம்

www.padippakam.com

டத்தை நடத்தியுள்ளனர். பயங்கரவாதத்தை எதிர்ப்பதாகக் கூறும் இச்சட்ட மசோதா போலீசாருக்கு வரம்பற்ற அதிகாரங்களை அளிப்பதோடு, நாடோடிகளாகத் திரிபவர்கள், அரசு எதிர்ப்பு கலை நிகழ்ச்சி நடத்துவோரை விசாரணையின்றி கைது செய்யவும் உரிமை அளிக்கிறது. பிரிட்டனில் நிலவும் வேலையின்மை, ஆட்குறைப்பு காரணமாக ஆலைகளிலிருந்து வெளியேற்றப் பட்டவர்கள்தான் இவர்கள். அரசின் கொள்கைகளால் ஏற்கனவே வீடுவாசல் இழந்து பரிதவிக்கும் ''புதிய தலைமுறையினர்'' எனப்படும் நாடோடி இனத்தவர்களுக்கு இதனால் வீடு - வேலை - பாதுகாப்பு அறவே இல்லாமல் போகும். குற்றவியல் நீதி மசோதா எனப்படும் இக்கொடிய மசோதாவை எதிர்த்து மக்கள் உரிமை அமைப்புகளும், நாடோடி இனத்தவரும், ஜனநாயகவாதிகளும் நடத்திய அமைதியான ஊர்வலத்தின் மீது போலீசார் நடத்திய மிருகத்தனமான தாக்குதலில் நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். ஆத்திரமடைந்த மக்கள் போலீசார் மீது நடத்திய எதிர்த்தாக்குதல் நள்ளிரவு வரை நீடித்தது. நான்காண்டுகளுக்கு முன்பு நடந்த தேர்தல் வரி எதிர்ப்புப் போராட்டத்துக்குப் பிறகு நடந்துள்ள மிகப் பெரிய போராட்டம் இதுதான் என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறுகின்றன. நாடாளுமன்ற ஜனநாயகத்தின் தொட்டில் என்று வர்ணிக்கப்படும் பிரிட்டனில் ஜான் மேஜர் அரசு ஜனநாயக உரிமைகளை காலில் போட்டு மிதித்து வருவதோடு, அவரது கட்சியினர் ஊழல் -ஆயுதபேரக் கொள்ளைகளாலும், காமக் களிவெறியாட்டங்களாலும் மேலும் மேலும் அம்பலப்பட்டு மக்களிடமிருந்து தனிமைப்பட்டுக் கிடக்கிறது.

அன்று, கம்யூனிசம் வீழ்ந்தது; முதலாளித்துவ ஜனநாயகம்தான் உன்னதமானது என்று ஏகாதிபத்தியவாதிகள் எக்காளமிட்டனர். இன்று ஏகாதிபத்திய உலகில் நெருக்கடிகள் முற்றி, மக்களது போராட்டங்கள் பெருகத் தொடங்கியதும் மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் பரிதவிக்கின்றனர்.

## பாசிச ஜெயா கும்பலின் கிரிமினல் தாக்குதல்

பொறுக்கி அரசியலை உருவாக்கி அதன் உச்சநிலைக்கே வளர்த்தெடுப்பதில் நாட்டுக்கே முன்னோடியாகத் திகழ்வது நமது தமிழகம்தான். அதே சமயம் கிரிமினல் அரசியலில் சற்றே பின்தங்கியிருந்தது. இந்தக் குறையையும் தீர்த்து வைக்கும் வகையில் பாசிச ஜெயா கும்பல் நாலுகால் பாய்ச்சலில் முன்னேறி வருகிறது. அண்மையில் எம்.ஜி.ஆர்.அ.தி.மு.க. தலைவர் திருநாவுக்கரசு, எம்.ஜி.ஆர். பெயரில் ஓர் அறக்கட்டளை தொடங்கி அதற்காக மதுரையில் விழா நடத்த முற்பட்டார். இந்நிகழ்ச்சிக்குத் தடை விதிக்கப்பட்டு அரங்கமும் மேடையும் பாசிச ஜெயா குண்டர்களால் அடித்து நொறுக்கப்பட்டன. தனது கட்சி அலுவலகத்தினுள் விழா நடத்தக்கூட அவருக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பு அவர் ஈரோட்டில் எம்.ஜி.ஆர். சிலையை நிறுவி, திறப்பு விழா நடத்த முயன்றபோது, ஜெயா அரசு அச்சிலையை கைப்பற்றி, சிறை வைத்து விழாவைத் தடை செய்தது.

கட்சியிலிருந்து நீக்கப்பட்ட முன்னாள் அமைச்சர்களான ஜி.விசுவநாதன், அழகு திருநாவுக்கரசு, எஸ்.ஆர்.ராதா ஆகியோர் வேலூரில் எம்.ஜி.ஆர். நினைவுநாள் கூட்டம் நடத்த முயன்றபோது அதற்கு ஜெயா கும்பல் தடை விதித்தது. பின்னர் மவுன ஊர்வலம் நடத்த முயன்றபோது போலீசாரால் தடுக்கப்பட்டனர். அதன் பிறகு இவர்கள் தஞ்சையில் கூட்டம் நடத்த முயன்றபோது, அரங்கத்தின் நிர்வாகிகள் உருட்டி மிரட்டிப்பட்டு கூட்டம் தடை செய்யப்பட்டது. திருச்சியில் இவர்களது பொதுக்கூட்ட மேடை ஜெயா குண்டர்களால் அடித்து நொறுக்கப்பட்டது. முத்தமிழ் அறிஞர் என வருணிக்கப்படும் கி.ஆ.பெ. விசுவநாதத்துக்கு வேலூரில் பாராட்டுக் கூட்டம் நடத்த முயன்ற முன்னாள் அமைச்சர் ஜி.விசுவநாதன் கைது செய்யப்பட்டு, கூட்டத்துக்குத் தடை விதிக்கப்பட்டது.



ஜெயாவைப் பதவியிலிருந்து நீக்காமல் ஓய மாட்டேன் என்று முழங்கிவரும் அரசியல் தரகரான சுப்பிரமணியசாமியை தருமபுரி மாவட்டத்தில் நுழைய விடாமல் தடுத்த ஜெயா கும்பல், போலீசாரைக் கொண்டு அவரைக் கைது செய்து தமிழக எல்லைக்கு அப்பால் கொண்டு போய் விரட்டியடித்தது. முதல்வருக்கு வந்த பரிசுப் பொருட்கள் அரசு விதிமுறைகளின்படி ஜெயா தன்னிடமே வைத்துக் கொள்ளக் கூடாது என்று வழக்கு தொடுத்த முன்னாள் அமைச்சர் ராஜாராமின் வீட்டை ஜெயா கும்பல்கள் அண்மையில் தாக்கி, 'ஆசிட் பல்பு'களையும் வீசியுள்ளனர். எல்லாவற்றுக்கும் மேலாக, கடந்த செப்டம்பர் மாதத்தில், நாகை மாவட்டம் குடவாசலில் 'மார்க்சிஸ்ட்' கட்சியைச் சேர்ந்த தங்கையனும், கொரடாச்சேரியில் கண்மணியும் அ.தி.மு.க. குண்டர்களால் நடுவீதிகளில் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.



எம்.ஜி.ஆர். அறக்கட்டளை விழாவைத் தடுத்ததை எதிர்த்து திருநாவுக்கரசு கட்சியினரின் சாலைமறியல்; உள்ளே : கண்மணி

எதிர்க்கட்சியினரை விலைபேசி கட்சிமாறச் செய்வது, சட்டமன்றத்திலேயே தாக்குவது, எதிர்க்கட்சிகள் செயல்பட முடியாமல் தடைகளை விதித்து குண்டர்களை ஏவித் தாக்குவது என ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதித்து கொட்டமடிக்கிறது, பாசிச ஜெயா கும்பல். தி.மு.க; ம.தி.மு.க; பா.ம.க. முதலான எதிர்க்கட்சிகளோ இட ஒதுக்கீடு, இந்தி எதிர்ப்பு, சேஷன் எதிர்ப்பு என பக்கவாட்டில் ஒதுங்கிக் கொள்கின்றன. இதைச் சாதகமாக்கிக் கொண்டு தனது கிரிமினல் தாக்குதல்களை மூடிமறைத்து மாவட்டந்தோறும் பஞ்சுமிட்டாய் திட்டங்களை ஆடம்பரமாக அறிவித்து மக்களை ஏய்த்து வருகிறது, பாசிச ஜெயா கும்பல்.


படிப்பகம்

www.padippakam.com

# 10ம் ஆண்டு

**"தமிழகத்தில் புதிய ஜனநாயகம் வெகுசன பத்திரிகையாக தொடர்ந்து வெளிவருவது மா-லெ புரட்சிகர இயக்க வரலாற்றில் இதுவே முதன்முறையாகும்."**

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

உங்களது புதிய ஜனநாயகம், இந்த இதழிலிருந்து 10-வது ஆண்டில் அடியெடுத்து வைக்கிறது. பத்தாண்டுகளாக ஒரு பத்திரிகை தொடர்ந்து வெளி வருவது தமிழக வாசகர்களுக்குப் புதிய செய்தியோ, சாதனையோ அல்ல. இருப்பினும், எல்லா வகையான சந்தர்ப்பவாதிகளையும் தோலுரித்து, அரசின் அடக்குமுறைகள் - பொய் வழக்குகள் - அவதூறுகளை எதிர் கொண்டு, புரட்சிகர அரசியலை ஏந்தி இப்படியொரு வெகுசன பத்திரிகை தொடர்ந்து வெளிவருவது மார்க்சிய - லெனினிய புரட்சிகர இயக்க வரலாற்றில் இதுவே முதன்முறையாகும்.

இதற்கு முன் புரட்சிகர அரசியலை உழைக்கும் மக்களிடம் கொண்டு செல்லும் முயற்சியாக பல்வேறு பத்திரிகைகள் தொடங்கி நடத்தப்பட்டுள்ளன. ஆனால் உறுதியான அமைப்பு அடித்தளமும் விற்பனையாளர்கள் வலைப்பின்னலும் இல்லாததால் அத்தகைய முயற்சிகள் விரைவிலேயே தோல்வியடைந்தன. இதற்கு மாறாக புதிய ஜனநாயகம் இந்த அடித்தளமும் வலைப் பின்னலும் புரட்சிகர அரசியலும் கொண்டிருந்ததால், எத்தனையோ சோதனைகளும் இடர்ப்பாடுகளும் அடக்குமுறைகளும் வந்தபோதிலும் உறுதியாக நின்று ஓங்கி வளர்ந்து வருகிறது.




புதிய ஜனநாயகம், சில தனிநபர்களின் முயற்சியாக நடத்தப்படும் பத்திரிகை அல்ல: அது ஓர் அரசியல் இயக்கத்தின் அங்கம். புரட்சிகர இயக்கம் எனும் இயந்திரத்தின் பல்லும் சக்கரமுமாக - அதன் உள்ளுறுப்பாக புதிய ஜனநாயகம் செயல்பட்டு வருகிறது. எனவேதான் கசப்பானதாக இருந்தாலும் அது உண்மைகளைச் சொல்லி வருகிறது. தேர்தல்களில் ஏதாவது ஒரு தரப்பை ஆதரிக்க வேண்டும்; ஈழப் பிரச்சினையில் புலிகளின் பாசிசப் போக்கைக் கண்டு கொள்ளக் கூடாது; இட ஒதுக்கீட்டில் 'பிற்பட்ட' மேல் சாதிகளை ஆதரிக்க வேண்டும்; அயோத்தி மசூதியை நினைவுச் சின்னமாக்க வேண்டும் — இப்படி சமரசமாகப் போனால்தான் வளர முடியும் என்று போலிப் புரட்சியாளர்கள் உபதேசித்தார்கள். இல்லையென்றால், புதிய ஜனநாயகம் வறட்டுத்தனமாய் உள்ளதென்று அவதூறு செய்தார்கள். ஆனால் எளிதாய்த் தோன்றும் இச்சமரச - சந்தர்ப்பவாதப் பாதையைப் புறக்கணித்து, கடுமையான சிக்கல் நிறைந்த புரட்சி வழியில் புதிய ஜனநாயகம் தொடர்ந்து பீடுநடை போட்டு வருகிறது. எனவேதான் அதனிடம் எப்போதும் சமூகப் பொறுப்பற்ற புலம்பல்கள் இல்லை; சமரசமோ - சந்தர்ப்பவாதமோ அறவே இல்லை.

கவர்ச்சியும் பொழுதுபோக்கும் நிறைந்த காகிதக் குப்பையாக இல்லாமல், புதிய ஜனநாயகம் வாசகர்களிடம் புதிய சிந்தனையை விதைத்து வருகிறது. அவர்களை ஓர் அமைப்பாக அணி திரட்டி வருகிறது. எங்கெல்லாம் புதிய ஜனநாயகம் விற்பனையாகிறதோ, அங்கெல்லாம் புரட்சிகர சிந்தனைகள் வளரத் தொடங்கி வருகின்றன.

தமிழகத்தில் பேருந்துகளிலும், நகர்ப்புற ரயில்களிலும், ஆலை வாயில்களிலும், கடை வீதிகளிலும், சந்தைகளிலும், தெருமுனைக் கூட்டங்களிலும் எமது தோழமை அமைப்புகள் மூலமாக உழைக்கும் மக்களிடம் புரட்சிகர அரசியலைப் பிரச்சாரம் செய்து விற்பனை செய்யப்படும் பத்திரிகை என்ற பெருமை புதிய ஜனநாயகத்துக்கு மட்டுமே சொந்தமானது. ஓட்டுக் கட்சி குண்டர்களாலும் போலீசாராலும் தாக்கப்பட்டு அவதூறு - பொய் வழக்குகள் சோடிக்கப்பட்ட போதிலும் இவற்றுக்கெல்லாம் அஞ்சாமல் புதிய ஜனநாயகத்தைக் கையிலேந்தி புரட்சிகர அரசியலைத் தொடர்ந்து பிரச்சாரம் செய்து வரும் உறுதிமிக்க விற்பனையாளர்களைக் கொண்ட பத்திரிகை என்ற பெருமை புதிய ஜனநாயகத்துக்கு மட்டுமே சொந்தமானது.

1985-இல் நவம்பர் புரட்சி நாளிலிருந்து தொடர்ந்து முறையாக வெளிவந்து கொண்டிருந்த புதிய ஜனநாயகம், 7-ஆம் ஆண்டிலிருந்து நிதி நெருக்கடி காரணமாக ஏறத்தாழ மாத இதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இந் நிலைமையைச் சமாளித்து 10-ஆம் ஆண்டில் தொடர்ந்து முறையாக வெளியிட எம்மாலான முயற்சிகளை மேற்கொள்ள உறுதியளிக்கிறோம். உங்களது உறுதியான ஒத்துழைப்பாலும் உளப்பூர்வமான ஆதரவாலும் இதை நிச்சயம் சாதிக்க முடியும் என நம்புகிறோம்.

கடந்த 9 ஆண்டுகளில் புதிய ஜனநாயகம் இதழில் வெளியான படைப்புகளைப் பற்றி சுருக்கமாக இங்கே தொகுத்தளித்துள்ளோம். புதிய ஜனநாயக நிலைப்பாடுகளின் சரியான தன்மையைப் புரிந்து கொள்ளவும், கடந்த கால நிலைமைகளைப் பற்றிய கண்ணோட்டத்தை வாசகர்கள் பெறவும் இத்தொகுப்பு உதவும் என்றும் நம்புகிறோம்.

பத்தாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் புதிய ஜனநாயகத்துக்கு நேரிலும் கடிதங்கள் மூலமாகவும் வாழ்த்துக்களைத் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றியையும் புரட்சிகர வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தோழமையுடன்
*ஆசிரியர் குழு*

## அடக்குமுறை - சுரண்டல் நிறுவனமே அரசு!

கருணாநிதி அரசு, ஜெயா அரசு, மத்திய அரசு, மாநில அரசு என கட்சிகள் - தனிநபர்களின் ஆட்சிகளையே அரசு என்பதாக, முதலாளித்துவ வாதிகள் மக்களைக் குழப்பி ஏய்த்து வரும்வேளையில், அரசு என்பது அதிகார வர்க்கம், போலீசு - ராணுவம், நீதிமன்றம், சிறைச்சாலை ஆகியவற்றை உள்ளடக்கிய மிகப்பெரிய சுரண்டல் - அடக்குமுறை நிறுவனம் என்பதை புதிய ஜனநாயகம் தனது முதல் இதழிலேயே தெளிவுப்படுத்திக் காட்டியது. எந்தவொரு ஓட்டுக் கட்சி ஆட்சிக்கு



படிப்பகம்

www.padippakam.com



**"புலிகளை விமர்சிப்பவர்கள் ஈழ விடுதலைக்கே எதிரானவர்களாக சித்தரிக்கப் பட்ட காலக்கட்டத்திலும் புலிகளின் பாசிசத்தை துணிந்து அம்பலப்படுத்தினோம்."**

வந்தாலும் இத்தகைய ஒடுக்குமுறை எந்திரத்தைக் கொண்டு தான் ஆள்கிறார்கள் என்பதையும், மிகப்பெரிய கொள்ளை அடக்குமுறை, சாதி-மத-இனவெறி மற்றும் கலாச்சார சீரழிவு நிறுவனமான அரசை தூக்கியெறிந்துவிட்டு உழைக்கும் மக்களுக்கான அரசை நிறுவுவதுதான் புரட்சியாகும் என பிரகடனப் படுத்தியது.

● நாட்டை ஆள்வது மந்திரிகளோ, மக்கள் பிரதிநிதிகளோ அல்ல; அதிகார வர்க்கத்தினர்தான் உண்மையில் நாட்டை ஆள்கிறார்கள் என்பதை, அரசு எந்திரத்தின் மிக முக்கிய தலைமை உறுப்பான அதிகார வர்க்கம் எவ்வாறு ஊதிப்பெருத்து நமது வரிப் பணத்தைத் தின்று கொழுக்கிறது என்பதை, மக்கள் மீதான அதன் ஒடுக்குமுறை, மக்களை இழிவுபடுத்தும் அதன் ஆணவ - அலட்சியப் போக்கு, புள்ளி விபர - சதவிகித கணக்கு காட்டி ஏய்க்கும் நரித்தனம், அதன் ஊழல்-கொள்ளை, மோசடிகளை தொடர்ந்து அம்பலப்படுத்தியது. குறிப்பாக உலகிலேயே மிகப் பெரிய மோசடிகளில் ஒன்றான வங்கி - பங்குச் சந்தை மோசடியில் சிக்கி கோடி கோடியாய் விழுங்கி ஏப்பம் விட்ட அதிகார வர்க்கத்தை - அதிலும் பார்ப்பன கும்பலின் கூட்டுக் கொள்ளையை தோலுரித்துக் காட்டியது. மக்களுக்குப் பெருஞ்சுமையாக - வேண்டாத சதைப் பிண்டமான அதிகார வர்க்கத்தை வெட்டியெறிய வேண்டியதன் அவசியத்தை மக்களுக்கு உணர்த்தியது.

● அடக்குமுறை அரசு எந்திரத்தின் வன்முறைக் கருவியான போலீசு - ராணுவத்தின் பயங்கரவாத வெறியாட்டங்கள், பாலியல் வன்முறைகள், சாதி-மத-இனவெறி அட்டூழியங்கள், அண்டை நாடுகளை மேலாதிக்கம் செய்யத் துடிக்கும் அதன் ஆக்கிரமிப்பு வெறி, போலீசு-ராணுவத் துறையில் நடக்கும் ஊழல் - கொள்ளைகள், கடத்தல்-கிரிமினல் நடவடிக்கைகள், நாட்டைக் காட்டிக் கொடுக்கும் போலீசு-ராணுவ உயரதிகாரிகளின் துரோகம் - விபச்சாரத்தனம் ஆகியவற்றை தொடர்ந்து வெளிச்சமிட்டுக் காட்டியது. கொட்டடிகளில் தொடரும் சித்தரவதைக் கொடூரங்களை "வதையின் கதை" என்ற சிறப்புக் கட்டுரை மூலமும், இந்தியாவில் மனித உரிமைகள் காலில் போட்டு மிதிக்கப்படுவதை "இட்லரின் வாரிசுகள்" என்ற சிறப்புக் கட்டுரை மூலமும் அம்பலப்படுத்தியது. இவை தவிர "போலீசு-சட்டபூர்வ கிரிமினல் கும்பல்" எனும் அதிர்ச்சி தரும் புகைப்படங்களைக் கொண்ட ஒரு வெளியீட்டையும் கொண்டு வந்தது. இத்தகைய வன்முறைக் கும்பலிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது மக்களுக்கு எவ்வளவு கொடூரமானது என்பதை "யாருக்காக இந்திய ராணுவம்?" என்ற தொடர் கட்டுரை மூலமும், ராணுவ சர்வாதிகார ஆட்சிகள் நடக்கும் பிற நாடுகளின் அனுபவங்களையும் தொகுத்து வெளியிட்டது. அடக்குமுறை அரசு எந்திரம் பாசிச முறையில் கட்டி வளர்க்கப்படுவதையும், பாசிச அபாயம் பற்றிப் படர்ந்து வருவதையும் சுட்டிக் காட்டி எச்சரித்தது.

● சார்லஸ் சோப்ராஜிலிருந்து "ஆட்டோ" சங்கர் வரை எல்லாவகை கிரிமினல் பேர் வழிகளுக்கும் சிறைச் சாலைகள் சொர்க்கம்; புரட்சியாளர்களுக்கோ நரகம் என்பதை புதிய ஜனநாயகம் தொடர்ந்து ஆதாரங்களுடன் விளக்கியது. சிறைக் கொடுமைகள், விசாரணைக் கைதிகளின் - குறிப்பாக பெண்கள், குழந்தைகளின் அவலம், அடிப்படை வசதியும் ஜனநாயக உரிமையும் இன்றி கைதிகள் வதைக்கப்படும் கொடூரம், சிறைச் சாலைகளில் நடக்கும் ஊழல்-கொள்ளைகள் ஆகியவற்றின் மூலம் ஒடுக்குமுறை நிறுவனமான சிறைச்சாலைகளைத் தோலுரித்துக் காட்டியது.

● இந்திய நீதித் துறையின் யோக்கியதையை, விலைபோகும் நீதித்துறை, கோர்ட்டுகளில் நீதி கிடைக்குமா?, விசாரணைக் கமிஷன் மோசடிகள், ஊழல் நாயகர்களின் உறைவிடமாக உச்ச நீதிமன்றம், காவி அங்கி நீதிபதிகள் முதலான கட்டுரைகள் மூலம் அம்பலப்படுத்திக் காட்டியது.

## ஈழ விடுதலைப் போரும் புலிகளின் பாசிசமும்

ஈழ விடுதலைப் போர் புதிய எழுச்சியுடன் முன்னேறிக் கொண்டிருந்த காலகட்டம் (1986-87) அது. தமிழக மக்களிடம் - குறிப்பாக இளைஞர்களிடம் ஈழவிடுதலைக்கான ஆதரவும் - உணர்வும் பொங்கி வழிந்த காலம் அது. அப்போது பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த ஈழப் போராளிகள் தமிழகத்திலே தஞ்சமடைந்திருந்தனர். அவர்களிலே விடுதலைப் புலிகள் இயக்கத்தினரை - அவர்களின் போர் சாகசங்களைப் பற்றி பெருமையாகப் பிரச்சாரம் செய்தனர், பிழைப்புவாத திராவிட இயக்கத்தினர். அண்ணாசாலையிலேயே அதிவேகமாக காரோட்டும் திறமைசாலிகள்; பிரபாகரனோ ஒரே தோட்டாவில் குறிதவறாது இலக்கை வீழ்த்தும் வித்தகர் எனப் பலவாறாக தமிழக பத்திரிகைகள் புலிகளைத் துதிபாடிக் கொண்டிருந்த நேரம் அது. புலிகளை விமர்சிப்பவர்கள் ஈழ விடுதலைக்கே எதிரானவர்கள் என்ற அளவுக்குத் தமிழக மக்களிடம் கருத்து பரப்பப்பட்டிருந்த காலம் அது. அப்போது, சமூக பாசிஸ்டாகச் சீரழிந்த பிரபாகரனையும், புலிகளின் அராஜக - துரோக நடவடிக்கையையும் அம்பலப்படுத்தி "ஈழத்து எம்.ஜி.ஆர். பிரபாகரனின் பொய்கள் - சதிகள் - கொலைகள்" எனும் தலைப்பில், ஒரு தொடர் கட்டுரையை புதிய ஜனநாயகம் ஜனவரி '87 இதழ்களில் துணிவுடன் வெளியிட்டது. இது தவிர, ஈழ விடுதலை இயக்கத்தின் வீழ்ச்சிக்கும் பின்னடைவுக்குமான காரணங்களை உரிய தருணத்தில் முதன்முதலாக புதிய ஜனநாயகம் வெளியிட்டுள்ளது.




"ஆயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் உயிர் கொடுத்து, இரத்தம் சிந்தி, தியாகம் செய்து வருவது ஈழத்தை நாயிடமிருந்து காத்து பேயிடம் தருவதாக முடிந்து விடக் கூடாது....சக போராளிகளைப் படுகொலை செய்யும் சமூக பாசிஸ்டுகள்; சொந்த மக்களைக் கொன்று கொள்ளையிடும் சமூக விரோத



படிப்பகம்

www.padippakam.com



## "பாசிஸ்டும் 'தேச' விரோதியுமான ராஜீவ் மரணத்திற்கு மக்கள் அஞ்சலி செலுத்த முடியாது; கூடாது என்று இக்கட்டான நேரத்திலும் அறைகூவினோம்"

அராஜகவாதிகள்; ருஷ்யா அல்லது அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும், இந்திய மேலாதிக்கத்துக்கும் தனது இன மக்களை அடகு வைக்கும் கடைந்தெடுத்த சந்தர்ப்பவாதிகள் ஆகிய இரண்டு சக்திகளிடம் ஈழத்தை இழந்து விடக் கூடாது; அப்படி எதுவும் நடந்து விட்டால் விடுதலைக்கும், சுதந்திரத்திற்கும், ஜனநாயகத்திற்குமான போராட்டத்தை விடாப்பிடியாக ஈழ மக்கள் தொடரவும் வேண்டும். இதை ஈழ மக்களுக்குச் சுட்டிக் காட்டி எச்சரிப்பதும், இந்தப் போராட்டத்தில் உண்மையான ஈழப் போராளிகளுக்குத் துணை நிற்பதும் அவசியமாகும். இது எமது கடமையுமாகும்.

... தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனை ஈழத்து எம்.ஜி.ஆர். என்று வர்ணிப்பது பலவகையில் மிகவும் பொருத்தமானதாக இருக்கும். இரண்டு பேருமே பாசிசமும், வக்கிரமும், தனிநபர் வழிபாடும், கோமாளித்தனமும் கலந்து அரசியல் நடத்துகிறார்கள். இரண்டு பேரின் அரசியல் - இராணுவ - போலீசு நடவடிக்கைகள் ஒரே மாதிரியாய் இருக்கின்றன. இந்திய - ஈழத் தமிழ் மக்களை ஏய்க்க தனி மனித வழிபாடும், கவர்ச்சியும்; அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டுவதற்கு பாசிசக் கொலை வெறியாட்டம்...

பிரபாகரன் - பாலசிங்கம் கும்பலுடன் சமரசம் செய்து கொள்வது என்கிற பாதையில் அடியெடுத்து வைத்துள்ளது ஈராஸ் தலைமை... இந்தியாவின் பாசிச ராஜீவ் கும்பலையும், சர்வதேச திருத்தல்வாதிகளும் சமூக ஏகாதிபத்தியவாதிகளுமான ருஷ்ய ஆளும் கும்பலையும் மேலும் அதிகமாகச் சார்ந்து நிற்கும் பாதையில் நடக்கிறது ஈ.பி.ஆர்.எல்.எப். தலைமை. ... எனவே ஈழ மக்களும், புரட்சிகரப் போராளிகளும் தற்போது நடத்தி வரும் போராட்டத்தில் புலிகளின் பாசிச சர்வாதிகார சதிகளை இனங்கண்டு முறியடிக்க வேண்டும். ''பிளாட்'', ''டெலோ'' வினரின் சமூக விரோத அராஜக நடவடிக்கைகளை எதிர்த்திட வேண்டும். ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈராஸ் தலைமைகளின் சந்தர்ப்பவாதத்தை நிராகரிக்க வேண்டும். அப்போது தான் உண்மையான விடுதலை, சுதந்திரம், ஜனநாயகத்தை ஈழ மக்கள் அடைய முடியும்.

(புதிய ஜனநாயகம், இரண்டாமாண்டு இதழ் எண்:4,5)




ஈழ விடுதலை இயக்கத்தின் வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் உண்டு. பாசிச ஜெயவர்த்தனேயின் இராணுவத் தாக்குதல், புலி பிரபாகரனின் பேராசை, பாசிச சதிகள் - கொலைகள், ஈராஸ் பாலகுமாரன், ஈ.பி.ஆர்.எல்.எப். பத்மநாபா ஆகியோரின் சந்தர்ப்பவாதம், டெலோ சிறீசபாரத்தினம் - பிளாட் முகுந்தனின் சமூக விரோத - அராஜக நடவடிக்கைகள் - இப்படி பல காரணங்களினால் ஈழப் போராட்டம் இன்று வீழ்ச்சியைச் சந்தித்திருக்கிறது.

இவை தவிர ஈழ விடுதலை இயக்கத்தைச் சிதைப்பதில் மிக முக்கிய பங்காற்றியது, இந்தியாவின் ரகசிய உளவுப்படை நிறுவனமான ''ரா'' (RAW)வாகும்.

தமிழக ஓட்டுக் கட்சிகளையும், உளவு அமைப்புகளான ''ரா'' மற்றும் ''கியூ''வின் தயவிலே ஈழ மக்களின் விடுதலையைச் சாதிக்க முடியாது. ஜெயவர்த்தனேயின் காலனி ஆதிக்க வெறித் தாக்குதலிலிருந்து தப்புவதற்காகப் போராடும் ஈழ மக்களை இந்திய ஆளும் கும்பலின் நவகாலனிய அடிமைகளாக்குவது பச்சைத் துரோகமாகும். (இரண்டாமாண்டு, இதழ் எண்: 15, 16-30 ஜூன் '87).

ஈழ விடுதலை இயக்கத்தை ஆதரிப்பதாக நடித்துக் கொண்டு இலங்கை மீது படையெடுத்து சிங்கள மக்களுக்கு எதிராக இதேபோல இந்திய ராணுவம் அட்டூழியங்கள் செய்திருந்தால், அப்போது கருணாநிதி, வீரமணி, நெடுமாறன் கட்சிகள் அதை ஆதரித்திருப்பர். இந்தப் பாணியிலேயே அவர்கள் வெளிப்படையாகப் பேசுகின்றனர். ஆக, இனவெறியில் ஆதாயம் தேடுவதுதான் அவர்களது நோக்கம். என்வேதான் சிங்கள சிவிலியன்களுக்கு எதிரான விடுதலைப் புலிகளின் படுகொலைகளைக் கூட அவர்கள் கண்டிக்கவில்லை.

1962, 65, 71 போர்களின் போது தேசிய வெறியில் இவர்கள் அனைவருமே மிதந்தவர்கள்தாம்! கருணாநிதி, வீரமணி, நெடுமாறன் கட்சிகள் ஈழத்தமிழரது சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதாகக் கூறிக் கொண்டாலும், நாகா, மிஜோ, மணிப்பூர், காஷ்மீர் மக்களது சுயநிர்ணய உரிமைப் போராட்டங்களை இந்திய அரசு ராணுவத்தை ஏவி அடக்குவதை ஆதரித்தே வருகின்றனர்.

''ராஜீவே கொலையாளி! இந்திய ராணுவம் ஆக்கிரமிப்புப் படையே! இலங்கையை விட்டு இந்திய ராணுவமே வெளியேறு! ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி!'' — என்கிற நியாயமான அடிப்படையில் கருணாநிதி, வீரமணி, நெடுமாறன் கட்சிகளின் முழக்கங்கள் கிடையாது... இந்திய ஆக்கிரமிப்பு எதிர்ப்புப் போராட்டங்களை நடத்துவதே இந்திய மக்களின் பிரதானக் கடமையாக இருக்க வேண்டும். இதுதான் ஈழ மக்களுக்குச் செய்யும் நியாயமான உதவியாகும். (இரண்டாமாண்டு, இதழ் எண்: 24, 1-15 நவம் '87)

## செத்தவனெல்லாம் உத்தமனல்ல!

### பாசிஸ்டுகளை தோலுரித்து...

விதி விலக்கின்றி அனைத்து ஓட்டுக் கட்சிகளும் ''இறந்து போகும் அரசியல் தலைவர்களின் வாழ்க்கையை விமர்சிப்பதில்லை'' என்பதைத் தங்களுக்குள் எழுதப்படாத மரபாகக் கொண்டுள்ளன. நமது பண்பாடு என மழுப்பப்படும் இம் மரபை நேற்றைய 'மகாத்மா' காந்தி தொடங்கி இன்றைய ராஜீவ் காந்தி வரை அனைத்து வழக்குகளிலும் காணலாம். ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட பின் காங்கிரசு - அ.தி.மு.க. காலிகளால் தங்களது சொந்த அணிகள் தாக்கப்பட்ட பொழுதுகூட கைகட்டி வாய் பொத்தி நின்றன எதிர்க்கட்சி



படிப்பகம்

www.padippakam.com



"பொறுக்கி அரசியல் என்ற சொற்பதத்தை முதன்முதலாக அறிமுகப்படுத்தி இப்புதிய போக்கின் சமூக, சித்தாந்த, அமைப்பு அடிப்படைகளை விளக்கினோம்"

கள். "இப்பொழுது பதுங்கிப் பின் பாய்வோம்" என செயல் தந்திரம் பேசின பல்வேறு ஈழ ஆதரவு போலி தமிழினவாதக் குழுக்கள். அந்நெருக்கடியான கால கட்டத்திலும் "புதிய ஜன நாயகம்" இதழ் மட்டும்தான் "மரணம் யாரையும் புனிதனாக்கி விடுவதில்லை" என்ற உண்மையில் அழுந்தி நின்று பாசிச ராஜீவை அம்பலப்படுத்தியது; எம்.ஜி.ஆர். இறந்து போன பொழுதும் பிரேமதாசா, ரஞ்சன் விஜயரத்னே போன்றோரும் ஈழத் துரோகிகளான அமிர்தலிங்கம், பத்மநாபா படுகொலை செய்யப்பட்ட பொழுதும் இந்த உண்மையில் அழுந்தி நின்று இவர்களின் மரணத்தை உழைக்கும் மக்கள் எப்படி பார்க்க வேண்டும் என்பதையும் அதையொட்டிய அரசியல் மாற்றங்களையும் தெளிவாகவம் உறுதியாகவும் எடுத்துரைத்தது.

"எம்.ஜி.ஆர்: ஒரு பாசிஸ்டின் மரணம்" எனும் கட்டுரையில் அவரையும் அவரது ஆட்சியைப் பற்றியும்

"...... கையேந்தி நிற்பவர்களுக்கு ஒரு பரோபகரியாகவும் இது எனது உரிமை என்று போராடுபவர்களுக்கு பாசிச பரம எதிரியாகவும் விளங்கியவரே எம்.ஜி.ஆர்".

"தனது அரசியல் - அதிகார அட்டூழியங்களுக்கும் பகற் கொள்ளைக்கும் வசதியாக இந்திராவின் இளைய பங்காளியாகவும் பாசிச பாதந்தாங்கியாகவும் மாறினார்...."

"... எம்.ஜி.ஆர். நோயுற்று நடைபிணமான பின்னும் மாற்றுத் தலைமை தருவதில் ஓட்டுக் கட்சிகள் அனைத்துமே தோல்வியுற்றுப் போனதால் கடைசியாக எம்.ஜி.ஆர். ஆட்சியில் இருந்து தூக்கியெறியப் படவில்லை. அதிகாரத்தை அவர் முழுமையாக அனுபவித்த பிறகு சாவுதான் அவருடைய ஆட்சிக்கு முடிவு கட்டியது." என எழுதினோம். (மூன்றாமாண்டு, இதழ் எண்:4)




ராஜீவ் படுகொலை செய்யப்பட்ட இக்கட்டான நேரத்திலும்

"..... ராஜீவ் செய்த கிரிமினல் குற்றங்கள், படு கொலைகள், பாசிச அடக்குமுறைகள், நாட்டையே சுரண்டி சூறையாடியது ஆகியவை மன்னிக்க முடியாத பொருளாதார, அரசியல், கிரிமினல் குற்றங்கள்... சொந்த தேசத்தையே சூறையாடிய மார்க்கோஸ் - டுவாலியர் வகையைச் சேர்ந்தவர்தான் ராஜீவ்... பஞ்சாப், அசாம் மாநிலத்து மக்கள், ஈழத் தமிழர்கள் - இப்படி தனது உயிருக்குக் குறி வைக்கும் பல கொலைகாரர்களை உருவாக்கிக் கொண்டார்...."

"... நிச்சயமாக இது கோழைத்தனமான செயல் அல்ல; ... பாசிஸ்டும் தேச விரோதியுமான ராஜீவ் தமிழ்நாட்டில் கொல்லப்பட்டது குறித்துத் தமிழர்கள் அவமானப்படவோ, வெட்கப் படவோ என்ன இருக்கிறது?"

.... உழைக்கும் மக்களைப் பொருத்தவரை அவர் ஒரு பிரதமரல்ல; பிணந்தின்னியே;.... எனவே அவரது மரணத்திற்கு உழைக்கும் மக்கள் அஞ்சலி செலுத்த முடியாது; கூடாது" என அவரது மரணத்தை மதிப்பிட்டோம். (ஆறாமாண்டு, இதழ் எண்:14)

பிரேமதாசா படுகொலையை, "கொடூரமாக வாழ்ந்தான்; குரூரமாக வீழ்ந்தான்" எனச்சித்தரித்து விட்டு,

"..... கிரிமினல் கொலைகளுக்கு மரண தண்டனை வழங்குவது ஆட்சியாளர்களுக்கு மட்டுமே உள்ள அதிகாரமல்ல; அது ஆட்சியாளர்களுக்கும் எதிராக வழங்கப்படுவதில் அதிர்ச்சிக்கோ துக்கத்துக்கோ இடமில்லை. பாசிச பயங்கரவாதப் பாதையில் தொடர்ந்து நடை போடும் அரசு - அரசியல் தலைவர்களுக்கு இந்திரா, ராஜீவ், ரஞ்சன் விஜயரத்னே, லலித் அதுலத் முதலி ஆகியோரோடு பிரேமதாசாவின் அரசியல் வாழ்வும் சாவுமே பாடமாக அமைகின்றன; (எட்டாமாண்டு, இதழ் எண்: 13 -14) என எழுதி மக்களின் எதிரிகள் அனைவரின் மரணங்களும் படுகொலைகளும் "இறகை விட இலேசானவை" என்பதை உழைக்கும் மக்களுக்கு அறிவித்தோம்.

## போலி ஜனநாயகத்தைத் திரைகிழித்து...

மரணப் படுக்கையில் வீழ்ந்துவிட்ட இந்திய நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தை ஓட்டுக் கட்சிகள் முட்டுக் கொடுத்து தாங்கிப் பிடிக்கின்றன. ஒருமைப்பாடு, ஐக்கியம் பற்றி பேசும் 'தேசிய' கட்சிகளிலிருந்து, மாநில சுயாட்சி பற்றி பேசும் பிராந்தியக் கட்சிகள் வரை எதுவுமே நாடும் மக்களும் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளைத் தீர்க்க வக்கற்றவை; மாறி மாறி மக்கள் ஏமாந்ததுதான் கண்ட பலன். எனவே இக்கட்சிகள் அனைத்தையும் நிராகரித்து, புரட்சிப் பாதையில் அணிதிரள்வதுதான் விடுதலைக்கு வழி வகுக்கும் என புதிய ஜனநாயகம் தொடர்ந்து ஒவ்வொரு இதழிலும் ஓட்டுக்கட்சிகளின் ஓட்டாண்டி நிலையைத் தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்தது.

● அன்று காங்கிரசிலிருந்து கலகம் செய்து வெளியேறிய ஜனதா கட்சியிலிருந்து, தி.மு.க.விலிருந்து வெளியேறிய இன்றைய வை.கோ. கட்சிவரை - அவற்றின் கொள்கை, லட்சியம் அரசியல் பித்தலாட்டங்களை தொடர்ந்து அம்பலப்படுத்திக் காட்டியது. ஓட்டுக் கட்சிகள் மாற்றுத் தீர்வல்ல; ஓட்டுக் கட்சிகளின் திவால்நிலை முதலான கட்டுரைகள் மூலம் அவற்றின் யோக்கியதையை தோலுரித்துக் காட்டியது.

● ஓட்டுக் கட்சிகளை மட்டுமல்ல; அரசியல் அரங்கில் தோன்றும் புதியவகை போக்குகளையும் இனங்கண்டு புதிய ஜனநாயகம் அம்பலப்படுத்தியது. முதலாளித்துவத்தின் பலவகைப்பட்ட சித்தாந்தங்கள் - காந்தீயத்திலிருந்து போலிக் கம்யூனிசம்வரை - அனைத்துமே தோல்வியடைந்து விட்ட நிலையில் நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பாற்ற இன்று ஓட்டுக் கட்சிகள் பொறுக்கி அரசியலில் தஞ்சம் புகுந்துவிட்டதை புதிய ஜனநாயகம் முதன் முதலாக வெளிச்சமிட்டுக் காட்டியது. மக்களை ஏய்க்க அரசியல் அரங்கில் எழுந்துள்ள இப்புதிய போக்கின் சமூக, சித்தாந்த, அமைப்பு அடிப்படைகளை விளக்கிய



படிப்பகம்

**10ம் ஆண்டு**

> ''போலி சுதேசிக்குப் பெருகிவரும் ஆதரவை வைத்து சில மா-லெ குழுக்கள் அரசியல் ஆதாயத்திற்காக எடுத்த தவறான நிலைப்பாட்டை சுட்டிக்காட்டினோம்''

தோடு, ஒரு பாசிச காட்டாட்சியை நிறுவுவதற்கான சமூக அடித்தளமாக இப்பொறுக்கி அரசியல் விளங்குவதையும் சுட்டிக் காட்டி எச்சரித்தது. தென்னிந்தியாவில் பொறுக்கி அரசியல் வேரூன்றி வரும்போது வட மாநிலங்களில் கிரிமினல் அரசியல் ஆழமாகப் பரவி வருவதையும், நாடாளுமன்ற போலி ஜனநாயகத்தின் சாவுக்குரிய நோய்க் குறிகளில் ஒன்றுதான் இது எனவும் விளக்கியது.

● ஓட்டுக் கட்சிகளின் ஊழல்-கொள்ளை, அரசியல் பித்தலாட்டம் - மோசடிகள், சாதி-மத இனவெறியர்கள் - கிரிமினல்-மாஃபியாக்களுடன் அவை கொண்டுள்ள கள்ளக்கூட்டு, அவற்றின் பிழைப்புவாத - சந்தர்ப்பவாத பச்சோந்தித்தனம், கட்சிக்குள் ஜனநாயகமின்மை முதலானவற்றை அம்பலப்படுத்தியது. குறிப்பாக, போலிக் கம்யூனிஸ்டுகளின் சந்தர்ப்பவாதம், திராவிடக் கட்சிகளின் பிழைப்புவாத பித்தலாட்டம், நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு அடிமைப்படுத்தும் காங்கிரசின் துரோகம், பாரதீய ஜனதாவின் இந்துவெறி ஆகியவற்றை இதழ்தோறும் அம்பலப்படுத்தியது. ஓட்டுக் கட்சிகளுக்கு வெளியிலுள்ள சீர்திருத்தவாத இயக்கங்கள், பிழைப்புவாதிகள், இனவாதிகளின் முகவிலாசத்தைத் தோலுரித்துக் காட்டியது. ஏகாதிபத்திய எடுபிடிகளும், புரட்சிக்கு எதிரானவர்களுமான தன்னார்வக் குழுக்களின் தகிடுதத்தங்களை அம்பலப்படுத்தி உழைக்கும் மக்களை எச்சரித்தது.




● இந்திய ஜனநாயகம் எவ்வாறு கேலிக் கூத்தானது என்பதை தேர்தல் தில்லு முல்லு - மோசடிகளைக் காட்டி நிரூபித்துக் காட்டியது. தேர்தல் வெற்றியைத் தீர்மானிப்பது பணபலம், குண்டர்பலம், சாதிய பலம் ஆகியவைதான் என்பதை ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தியது. மரணவாயிலில் தேர்தல் முறை, இந்திய ஜனநாயகத்தின் விலை 20,000 கோடிரூபாய், கருப்புப்பணத் திருவிழா, பண நாயகமே வெல்லும் முதலான சிறப்புக் கட்டுரைகள் மூலம் தேர்தல் பாதை திருடர் பாதையே என விளக்கி, போலி ஜனநாயகத் தேர்தலைப் புறக்கணித்து புரட்சிக்கு அணிதிரளுமாறு மக்களை அறை கூவி அழைத்தது. தேர்தல் புறக்கணிப்பை விளக்கி புதிய ஜனநாயகம் ஒரு பிரசுரத்தையும் வெளியிட்டது.

● தேர்தல் வெற்றிக்குப் பிறகு புதிதாக அமையும் ஆட்சிகளைப் பற்றி 100 நாட்களுக்குப் பிறகுதான் விமர்சிக்க வேண்டும் என்கிற முதலாளித்துவ மரபுகளை உடைத்து, எந்தவொரு புதிய ஆட்சியையும் அதன் வர்க்கத் தன்மையிலிருந்து புதிய ஜனநாயகம் துணிவுடன் அம்பலப்படுத்தியது. குறிப்பாக வி.பி. சிங்கின் சிறுபான்மை ஆட்சி இந்து வெறியர்கள் மற்றும் போலிக் கம்யூனிஸ்டுகளின் தயவில் நின்றபோது, ''வண்டி ஒன்று! பாதை இரண்டு! போவது எங்கே?'' என்று இச்சந்தர்ப்பவாதக் கூட்டையும் பதவி வெறியர்களின் ஆட்சியையும் தோலுரித்துக் காட்டியது. சந்திரசேகரின் ஆட்சியை இந்துஜா - அம்பாணி ஆகிய தரகுப் பெருமுதலாளிகள் ஏலத்தில் எடுத்த ஜனநாயக சாத்தானின் ஆட்சி என்று முதன் முதலாக விளக்கிக் காட்டியது. ஜெயாவின் ஆட்சியை பார்ப்பன - பாசிச ஆட்சி என்ற அரசியல் வரையறுப்புடன் யாவருக்கும் முதலாக அம்பலப்படுத்திக் காட்டியது. இதுபோல, உ.பி.-யின் முலயம் சிங் - கன்ஷிராமின் ஆட்சி சமூக நீதிக்கானதல்ல என்றும் இன்னுமொரு சாதியக் கூட்டணிதான் என்றும் அம்பலப்படுத்திக் காட்டியது.

## விரிந்த பார்வையே விடுதலையைத் தரும்

சர்வதேச ரீதியில் ஏற்படும் அரசியல் - பொருளாதார மாற்றங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல், எந்தவொரு நாட்டிலும் புரட்சிக்கு மக்களைப் பயிற்றுவிக்க இயலாது. இதன் காரணமாக புதிய ஜனநாயகம் அதன் தொடக்க காலத்தில் இருந்தே, ''ஏகாதிபத்தியங்களின் புதிது புதிதான காலனியாதிக்க நடவடிக்கைகள், அவற்றுக்கிடையே மூண்டு எழும் போட்டா போட்டி, ஏகாதிபத்திய நாடுகளில் எழும் அரசியல் - பொருளாதார நெருக்கடிகள், சோவியத் யூனியன் மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் சிதைவு, ஏழை நாட்டு மக்களின் எழுச்சிமிகு போராட்டங்கள், அந்நாடுகளின் அரசியல் மாற்றங்கள் போன்ற விசயங்களைத் தொடர்ச்சியாக எழுதி வாசகர்களின் பார்வையை விரிவடையச் செய்து வந்தது.

● அமெரிக்கப் பொருளாதாரம் இராணுவ மயப்படுத்தப்பட்டதால் திவால் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதையும் அந்நாட்டின் தேசிய வெறி - யுத்த வெறி காரணமாக கிரிமினல் - பாலியல் குற்றங்கள் பெருகி வருவதையும் விரிவாக அம்பல்ப்படுத்தினோம்; மூன்றாண்டுகளுக்கு முன்பு எழுந்த கறுப்பின மக்களின் போராட்டத்தை விரிவாக எழுதி அமெரிக்க ஜனநாயகத்தின் முகமூடியைத் திரை கிழித்தோம்.

● ஜியா, நோரிகா போன்ற சர்வாதிகாரிகளை ஆதரித்த அமெரிக்காவின் முக விலாசம் ஈராக் யுத்தம், கம்பூச்சியா, சோமாலியா, ஹெய்தி போன்ற நாடுகளுக்கு தனது படைகளை அனுப்பியிருப்பது; அடிபணியாத நாடுகளின் மீது சூப்பர் 301 தடைச் சட்டம்; ''நாஃப்தா'', ''ஏ.பி.இ.சி.'' - என்ற பொருளாதார வளையங்களை உருவாக்குவது - இதன் மூலம் அமெரிக்காவின் ஆதிக்க நோக்கங்களை அம்பலப்படுத்தினோம்.

● ஜெர்மனியில் நவீன நாஜிகள் பெருகி வருவது ஜப்பான், பிரான்சு, பிரிட்டன் நாடுகளில் வேலை வாய்ப்பின்மையும் வறுமையும் அதிகரிப்பது; ஜப்பான் மற்றும் இத்தாலியில் ஊழல் ஆட்சியாளர்கள்; இவற்றுக்கெதிரான மக்களின் போராட்டங்கள் என ஏகாதிபத்திய நாடுகளின் சமூக-பொருளாதார நெருக்கடிகளைக் குறிப்பிட்டு முதலாளித்துவ ஜனநாயகத்தை அம்பலப்படுத்தினோம்.

● ஐ.எம்.எஃப்., உலக வங்கி, ''காட்'' போன்ற சர்வதேச நிறுவனங்கள், மரபியல் கூறு விஞ்ஞான வளர்ச்சி, அணு ஆயு



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

**10 ம் ஆண்டு**

**''அயோத்தி மசூதியை நினைவுச் சின்னமாக்க வேண்டும் என்று போலிக் கம்யூனிஸ்டுகள் முன்வைத்த சமரச-சந்தர்ப்பவாத பாதை எம்மிடம் அறவே இல்லை''**

தப் பரவல் தடுப்பு, மனித உரிமை என்ற பெயரில் மூன்றாம் உலக நாடுகளில் ஏகாதிபத்தியங்கள் தலையீட்டு வருவதை எடுத்து விளக்கினோம்.

● சோவியத் யூனியன் சிதைவதற்கு முன்பு அதனை ஒரு மேலாதிக்க வல்லரசு நாடென்றும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளை சோவியத் யூனியனின் தொங்குசதை நாடுகளென்றும் குறிப்பிட்டோம். சோவியத் யூனியன் சிதைவை கம்யூனிசத்தின் தோல்வியென்று ஏகாதிபத்தியவாதிகள் கூச்சலிட்டபொழுது, அது அதிகார வர்க்க முதலாளித்துவத்தின் தோல்வி என்பதனை சித்தாந்த ரீதியாக விளக்கினோம். சீர்திருத்தங்கள் கொண்டு வந்த பின் அந்நாடுகளில் வறுமையும், தேசிய இன மோதல்களும் பாசிசத்திற்கான அபாயமும் நிலவுவதைச் சுட்டிக்காட்டி முதலாளித்துவ ஜனநாயகத்தின் ஒட்டாண்டித்தனத்தை அம்பலப்படுத்தினோம். சோவியத் யூனியன் சிதைவைக் கொண்டு இந்திய போலிகளின் சந்தர்ப்பவாத சாகசங்களைச் சுட்டிக் காட்டினோம்.

● சீனத்தில் டெங் கும்பல் கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றி கம்யூன் பொருளாதாரத்தைச் சிதைத்து, சந்தை பொருளாதாரத்தை புகுத்தியது. பிறகு எழுந்த மாணவர் போராட்டம் மேலும் முதலாளித்துவ சீர்திருத்தங்களைத் தான் கோரியது; எனவே அப்போராட்டத்தையும் டெங் கும்பலையும் ஆதரிக்க முடியாது என விளக்கினோம்.

● பர்மா, பிலிப்பைன்ஸ், பெரு, கம்பூச்சியா போன்ற நாடுகளில் கம்யூனிசப் புரட்சியாளர்களின் தலைமையில் மக்கள் யுத்தப் பாதையில் புரட்சி முன்னேறி வருவதைக் குறிப்பிட்டோம்; தென்னாப்பிரிக்காவிலும் நமீபியாவிலும் நடந்துள்ள மாற்றங்கள் அந்நாடுகளின் வெள்ளை இன ஆளும் வர்க்கங்களுடன் ஏற்பட்டுள்ள சமரசம்; இஸ்ரேல் - பி.எல்.ஓ. ஒப்பந்தம் துரோகத்தனமானது என விளக்கியிருந்தோம். பின்தங்கிய நாடுகளில் இஸ்ரேல், இந்தியா, போன்ற துணை மேலாதிக்க வல்லரசுகள் உருவாகியுள்ளதைச் சுட்டிக் காட்டி, வாசகர்களுக்கு விரிந்த பார்வையும், ஒருங்கிணைந்த உலகக் கண்ணோட்டமும் பெற உதவியுள்ளோம்.



ஈழ - இந்தியத் தமிழர்கள் மீது பார்ப்பன பாசிச ஜெயா தாக்குதல்

● வளைகுடாப் போரில் அமெரிக்காவின் நோக்கம் ஆதிக்க வெறி என்றும், ஈராக்கின் நோக்கம் ஆக்கிரமிப்பு என்றும், இதன் காரணமாகவே இரு தரப்பையும் எதிர்க்க வேண்டும் என்றும் நாம் கூறினோம். இது பாட்டாளி வர்க்க சர்வதேச பொதுவழிக்கு எதிரானது; உலக மக்களின் முதன்மையான எதிரியான அமெரிக்காவின் நவகாலனிய ஆதிக்கத்துக்கு எதிராக, நிபந்தனையுடன் ஈராக்கை ஆதரிக்க வேண்டும் என்ற சிலர் நம்மை விமர்சித்தனர். அப்போது நாம் கேள்வி - பதில் பகுதியில் விரிவாக விளக்கத்தை அளித்தோம். நமது நிலைப்பாடு எவ்வாறு சரியானது, மார்க்சிய - லெனினிய வழியிலானது என்பதை அது நிரூபித்துக் காட்டியதோடு, சில மா-லெ குழுக்களின் தவறான அணுகுமுறையையும் அம்பலப்படுத்திக் காட்டியது.

''ஈராக் இப்போது நடத்தும் யுத்தம் எந்த வகையிலும் நீதியானது இல்லை என்பதால்தான் அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய எதிரிகளின் குற்றங்களைச் சொல்லி தனது ஆக்கிரமிப்பை நியாயப்படுத்துகிறது. ஒரு தரப்பின் ஆக்கிரமிப்பு, ஆதிக்கக் குற்றங்கள் இன்னொரு தரப்பின் அதே தன்மையுடையவைகளை நியாயப்படுத்திவிட முடியாது. ஆகவே எந்தத் தரப்பிலும் நியாயமில்லாத ஆக்கிரமிப்பு - ஆதிக்க, நாடு பிடிக்கும் இந்த யுத்தத்தை அநீதியானது, கொடூரமான பேரழிவு விளைவிக்கக்கூடியது, பிற்போக்கானது, கொள்ளையடிப்பதற்கானது ஆகிய ஏகாதிபத்திய போர்களின் தன்மைகளைக் கொண்டது என்கிறோம். இத்தகு யுத்தங்களின் போது எத்தரப்பையும் ஆதரிக்க முடியாது; ஆதரிக்கவும் கூடாது. மாறாக, யுத்தங்களின் விளைவான அரசியல், பொருளாதார நெருக்கடிகளைப் பயன்படுத்திக் கொண்டு இரு தரப்பினது ஆளும் வர்க்கங்களையும் வீழ்த்தும் புரட்சிகர யுத்தத்தைத் தொடுக்க வேண்டும். இதுதான் அநீதியான யுத்தத்தை நீதியான யுத்தமாக மாற்றுவது என்றார் லெனின். போதிய பலமில்லை என்றால் அரசுகளுக்குரிய யுத்தகால நெருக்கடிகளையும், மக்களது வெறுப்பையும் புரட்சியை முன்னேற்றுவதற்குப் பயன்படுத்த வேண்டும் என்கிறார் லெனின்.'' (ஆறாமாண்டு, இதழ் எண்:8, 1-15 மார்ச் '91)

## பஞ்சாப்-அசாம் போராட்டங்கள் தரும் பாரிய படிப்பினைகள்

கடந்த பத்தாண்டுகளாக இந்திய அரசியலில் முக்கிய சக்தியாக வளர்ந்த பஞ்சாப் - அசாம் போராட்டங்கள் இன்று பிளவுக்கும் பின்னடைவுக்கும் தள்ளப்பட்டு தோல்வி கண்டுள்ளது. அதன் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் இருந்து பெற்ற பாரிய படிப்பினைகளைத் தொகுத்து ஓர் சிறப்புக் கட்டுரை வெளியிட்டது.

''பஞ்சாபில் சீக்கிய தீவிரவாதிகளால் தொடுக்கப்பட்ட 'தர்ம யுத்தம்', சீக்கியர்களிடையே நவீன ரக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள ஜாட் சாதியினருக்கும் இந்துக்களிலேயே வர்த்தகம் மற்றும் பிற தொழில்களில் ஈடுபட்டுள்ள பார்ப்பன - பனியா சாதியினருக்கும் இடையிலான - ஆளும் வர்க்கங்களுக்கு இடையிலான யுத்தமாகவே நடந்தது. பார்ப்பன - பனியாக்கள் தரகு அதிகார முதலாளிகளாகவும் அரசு எந்திரத்தில் மேலாண்மை பெற்றவர்களாகவும் இருப்பதால் அரசு பயங்கரவாத அடக்குமுறையின் மூலம் வெற்றி பெறத் துடித்தனர். சீக்கிய ஜாட் நிலப்பிரபுக்களோ தேசிய இனக் கோரிக்கைகளுடன் மதவெறி பயங்கரவாதத்தை உசுப்பிவிட்டு தமது நோக்கங்களைச் சாதித்துக் கொள்ள முற்பட்டனர். ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினரின் நலன்களுக்கான போராட்டமாக பஞ்சாப் 'தர்ம யுத்தத்'தின் நோக்கம் சுருங்கிப் போனதே அதன் தோல்விக்கு முதன்மையான காரணமாகும்... இரண்டாவதாக சீக்கிய தீவிரவாதிகள் படுபிற்போக்கான மத ரீதியிலான ''காலிஸ்தான்


படிப்பகம்

## "இட ஒதுக்கீட்டில் 'பிற்பட்ட' மேல்சாதிகளை நாம் ஆதரிக்காததால் பார்ப்பனத் தலைமை என அவதூறு பரப்பிய நாக்கிற்கு ஆப்பறைந்தோம்"

'' எனும் தனிநாடு அடைவதை நோக்கமாகக் கொண்டிருந்தனர். .. மூன்றாவதாக, பஞ்சாபி தேசிய இனம் என்பது சீக்கியர்களையும் இந்துக்களையும் கொண்டது... பெரும்பான்மை சீக்கியர்களையும் சிறுபான்மை இந்துக்களையும் ஐக்கியப்படுத்தி போராடுவதற்குப் பதிலாக, இந்துக்களை விரட்டியடித்து விட்டு பஞ்சாபை சீக்கியர்களுக்கு மட்டுமேயான காலிஸ்தானமாக மாற்றுவதையே தீவிரவாதிகள் லட்சியமாகக் கொண்டிருந்தனர். இக்காரணங்களால் பஞ்சாப் போராட்டம் மதவெறி பயங்கரவாத இயக்கமாகச் சுருங்கி சீரழிந்துபோனது...

... புலிகள் எம்.ஜி.ஆருடன் மேற்கொண்ட சந்தர்ப்பவாத உறவைப் போலவே, உல்பா இயக்கமும் அசாம் கணபரிஷத் கட்சி - ஆட்சியுடன் சந்தர்ப்பவாத உறவை மேற்கொண்டது. கணபரிஷத் ஆட்சி கவிழ்ந்து ''காண்டா மிருக நடவடிக்கை'' என்ற பெயரில் அரசு பயங்கரவாதம் கட்டவிழ்த்து விடப்பட்ட போது, அதை எதிர்கொள்ள முடியாமல் உல்பா இயக்கம் பின்னடைவுக்குள்ளானது. மேலும், தேசிய இனச் சிறுபான்மையினர், மலை சாதியினருடன் அது ஐக்கியப்பட்டு முன்னேறத் தவறியதால், அரசு பயங்கரவாதத் தாக்குதலை எதிர் கொள்ள புகலிடமோ, தளமோ இல்லாமல் பின்வாங்க நேரிட்டது. குட்டி முதலாளித்துவ ஊசலாட்டம் காரணமாக அதன் உயர் மட்டத் தலைவர்களும் - தளபதிகளும் சரணடைந்து கைதான பிறகு, இயக்கமே பிளவுபட்டு இன்று முடங்கிப் போய் விட்டது.



பாட்டாளி வர்க்க சித்தாந்தக் கண்ணோட்டம், யதார்த்த நிலைமைகளுக்குப் பொருத்தமான புரட்சிகரத் திட்டம், அரசியல் - இராணுவப் பாதை, கட்டுப்பாடு மிக்க தலைமையும் மக்கள் திரள் அமைப்புகளும் ஆகியவை மட்டுமே புரட்சியைச் சாதிக்க முடியும் என்ற படிப்பினையை அசாம் - பஞ்சாப் போராட்ட வரலாறு மீண்டும் ஒரு முறை நிரூபித்துக் காட்டுகிறது. ஆனால் நிலைமைகளை யதார்த்த பூர்வமாக ஆய்வு செய்வதற்குப் பதிலாக, பிராந்திய ரீதியிலான பிரச்சினைகளைக் கூட தேசிய இனப் பிரச்சினையாக மதிப்பிடுவது, அதை ஆதரிக்காவிட்டால் தனிமைப் படுவோம் என்ற அச்சத்திலும், தலைமை கொடுப்பதன் மூலம் புரச்சிகர போராட்டமாக மாற்றி விடலாம் என்ற ஆர்வத்திலும் சில மா-லெ குழுக்கள் அணுகுகின்றன. ஆனால் இம்மாதிரியான அணுகுமுறை ஒரு போதும் புரட்சியை நோக்கி இட்டுச் செல்லாது. (எட்டாமாண்டு, இதழ் எண்: 11-12, 1-15 மே '93)

## இந்து மதவெறி பாசிசத்துக்கு எதிராக....

நாட்டையும் மக்களையும் அச்சுறுத்தும் இந்துவெறி பாசிசத்துக்கு எதிராக புதிய ஜனநாயகம் சளைக்காமல் போராடி வந்துள்ளது. மசூதி இருந்த இடத்தில்தான் ராமன் கோயில் இருந்தது என்பதற்கு எவ்வித ஆதாரமும் கிடையாது என்பதை வரலாற்று ஆதாரங்களுடன் நிரூபித்தது. இந்து வெறியர்களின் அகழ்வாராய்ச்சி மோசடிகளை அம்பலப்படுத்திக் காட்டியது. ஆர்.எஸ்.எஸ். கும்பலின் விசுவாசிகளையும், பார்ப்பன - பனியா தலைமையையும் கொண்டதுதான் பாரதீய ஜனதா என்றும், அதன் ராம ராஜ்யத்தின் முகவிலாசத்தையும், கட்சிக்குள் நடக்கும் பதவிச் சண்டை, அதன் ஏகாதிபத்திய எதிர்ப்பு சுதேசி நாடகம், விநாயகர் ஊர்வலம் - ரத யாத்திரைகளின் நோக்கம், அகண்ட பாரத பாசிசக் கனவுகள், வெளியே காவியுடையும் உள்ளே ரத்த வெறியும் கொண்ட அதன் உண்மைச் சொரூபம் ஆகியவற்றை தொடர்ந்து தோலுரித்துக் காட்டியது.

மசூதியை ஒருமைப்பாட்டின் சின்னமாக அறிவித்துவிட வேண்டும் என்று போலிக் கம்யூனிஸ்டுகள் உள்ளிட்டு அனைத்து கட்சிகளுமே இந்து வெறியர்களுக்கு விட்டுக் கொடுத்துப் போகவே விழைகின்றன. இந்திய அரசு எந்திரத்தின் பெரும்பகுதி இந்து மதவெறிக்கு ஆதரவாக நின்று அதன் வெற்றிக்கு நிச்சயம் சேவை செய்யும். எனவே நாடாளுமன்ற தேர்தல் அரசியலுக்குள் ஓட்டுக் கட்சிகள் நடத்தும் போராட்டத்தின் மூலம் இந்து மதவெறி பாசிசத்தை ஒருபோதும் வீழ்த்த முடியாது. மதச் சார்பற்ற ஜனநாயக சக்திகளின் புரட்சிகர போராட்டத்தின் மூலமே அதை சாதிக்க முடியும் என்று தெளிவு படுத்தியது. ஆர்.எஸ்.எஸ். இந்து வெறியர்களின் தேசத் துரோக - பார்ப்பன பாசிச பாரம்பரியத்தை தொடர் கட்டுரை மூலம் தோலுரித்துக் காட்டியது. இந்து வெறியர்களுக்கு அடிபணிந்து போகும் காங்கிரசு இந்து வகுப்புவாதக் கட்சிதான்; இந்து வெறியர்களுடன் அது நடத்திக் கொண்டிருப்பது நிழற் சண்டைதான் என்பதை தெளிவு படுத்தியது.

இந்து வெறி பாசிசத்திடமிருந்து தற்காத்துக் கொள்ள முஸ்லீம் மதவெறி அமைப்புகளிடம் தஞ்சம் புகுவது தற்கொலைக்கு ஒப்பானது என்றும் மதச் சார்பற்ற ஜனநாயக சக்திகளின் பின்னே அணிதிரண்டு போராடுவது தான் ஒரே தீர்வு என்றும் முஸ்லீம் மக்களை அறைகூவி அழைத்தது. இந்து மதம் என்பது பார்ப்பன - வருணாசிரம அடக்குமுறை மதம்தான்; இத்தனை நாளும் சாதி ரீதியாக இழிவுபடுத்தி ஒடுக்கி வந்த பார்ப்பன - ஆதிக்க சாதியினருடன் தாழ்த்தப்பட்ட - பழங்குடி மக்கள் சேர்ந்து கொண்டு தாங்களும் இந்துக்கள் என்று கூறிக் கொண்டு பெருமை கொள்ள முடியாது என்று ஒடுக்கப்பட்ட மக்களை இந்து வெறியர்களுக்கு எதிராக அணிதிரளுமாறு அறை கூவியது.

## பார்ப்பனத் தலைமை என்ற அவதூறுகளுக்கு ஆப்பு!

திராவிடர் கழகத்தின் பிழைப்புவாத வீரமணி கும்பலும், தமிழினவாதிகளின் ''தாயகம்'' இதழினரும் நம்மை பார்ப்பனத் தலைமை கொண்டவர்கள்; பார்ப்பனர்கள் ஒருபோதும்



படிப்பகம்

**10ம் ஆண்டு**

**''புதைக்கப்பட்ட உண்மைகளை அறியவும் வரலாற்றிலிருந்து படிப்பினைகளை பெறவும் பல ஆய்வு - தொடர்கட்டுரைகளை வெளியிட்டோம்''**

புரட்சி செய்ய மாட்டார்கள்; தக்க சூழ்நிலை வரும்போது அவர்களது ஆதிக்க உணர்வு வெளிப்படும் என்று பெரியாரும் அம்பேத்கரும் கூறியுள்ளதை மேற்கோள் காட்டி, நம்மை நேர்மையற்ற முறையில் அவதூறு செய்தனர். அப்போதும் தொடர்ந்தும் புதிய ஜனநாயகம் தனது கேள்வி - பதில் பகுதியில் தக்க விளக்கமளித்தது. ஈராண்டுகளுக்கு மேலாகியும் நமது விளக்கத்திற்கு பதிலோ, மறுப்போ சொல்ல எவருமே துணியவில்லை.

## மறைக்கப்பட்ட வரலாற்றிலிருந்து துரோகத்தை தோலுரித்து...

மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகளை உழைக்கும் மக்களிடம் விளக்கும் நோக்குடன் பல்வேறு தொடர் கட்டுரைகளை புதிய ஜனநாயகம் தொடர்ந்து வெளியிட்டது. அவை ஆட்சியாளர்களும், ஓட்டுக் கட்சிகளும் மக்களிடம் செய்து வரும் மோசடிகளைத் தோலுரித்துக் காட்டியது. புதைக்கப்பட்ட உண்மைகளை அறிந்து கொள்ளவும், கடந்த கால வரலாற்றிலிருந்து படிப்பினைகளைப் பெற்று புதிய தலைமுறையினர் புரட்சிப் போராட்டங்களில் ஈடுபடவும் இத்தொடர்கள் உதவியாக அமைந்தன.




● நேரு - இந்திரா - ராஜீவ் பரம்பரையின் துரோகத்தை நேருவின் நூற்றாண்டு விழாவின் போது புதிய ஜனநாயகம் தொகுத்து வெளியிட்டது. நேருவின் ஏகாதிபத்திய அடிமை மோகம், அரண்மனை விருந்து பேரங்கள், பிரிவினைவாதத்தைத் தூண்டி மக்களைப் படுகொலைக்குத் தள்ளிய துரோகம், காமக் களிவெறியாட்டம் முதலானவற்றை அம்பலப்படுத்தியது.

● தேச பக்தி என்பது வேறு; தேசிய வெறி என்பது வேறு. நேரு காலத்திலிருந்து ஆளும் கும்பல் பின்பற்றும் ''அகண்ட பாரதம்'' எனும் விரிவாக்க ஆக்கிரமிப்பு கொள்கை தேசிய வெறி அடிப்படையிலானது. எல்லைத் தகராரைச் சுமுகமான பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்ப்பதற்குப் பதிலாக, அமெரிக்காவின் கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வுடன் கூட்டுச் சேர்ந்து கொண்டு நேரு, சீனா மீது நடத்திய ஆக்கிரமிப்புப் போரை, எல்லைத் தகராறு பற்றிய உண்மைகளைத் தொகுத்து ஒரு தொடர் கட்டுரையை புதிய ஜனநாயகம் வெளியிட்டது. இப்போரை ஒட்டி இந்தியப் போலி கம்யூனிஸ்டுகள் எடுத்த சந்தர்ப்பவாத நிலைப்பாடுகளையும் துரோகத்தையும் தோலுரித்துக் காட்டியது.

● 1947-ல் மத அடிப்படையில் இந்தியா - பாகிஸ்தான் என்று துண்டாட காங்கிரசும் ஆங்கிலேயரும் செய்த சூழ்ச்சிகள் - சதிகள், இந்து வெறியர்களுடனும் இந்து தரகுப் பெரு முதலாளிகளுடனும் சேர்ந்து கொண்டு வங்கத்தை துண்டாட நடத்திய சதிகளை வரலாற்றின் ஏடுகளிலிருந்து தொகுத்தளித்து, காங்கிரசுக்காரர்களே பிரிவினைவாதிகள் என்ற தொடர் கட்டுரை மூலம் நிரூபித்தது.

● 'மார்க்சிஸ்ட்' கட்சியின் மாண்டுபோன தலைவர்களில் ஒருவரான திருவாளர் பி. இராமமூர்த்தியின் ''விடுதலைப் போரும் திராவிட இயக்கமும்'' என்ற நூலின் மீதான விமர்சனத் தொடரை புதிய ஜனநாயகம் தொகுத்து வெளியிட்டது. கம்யூனிசப் போர்வையில் ஒளிந்து கொண்டிருந்த ராமமூர்த்தி, அடிப்படையில் ஒரு காந்தீய - காங்கிரசு - பார்ப்பனவாதிதான் என்பதை வரலாற்று ஆதாரங்களுடன் நிரூபித்துக் காட்டியது. சர்வ கட்சியினரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு கை தேர்ந்த அரசியல் தரகர்தான் ராமமூர்த்தி என்பதை அவரது வாக்கு மூலங்களிலிருந்தே அம்பலப்படுத்திக் காட்டியது. காந்திய காங்கிரசு இயக்கத்தை விடுதலைப் போராகச் சித்தரிக்கும் அவரது துரோகத்தைத் தோலுரித்துக் காட்டியது.

● இவை தவிர இந்திய கம்யூனிச இயக்க வரலாற்றை விளக்கும் ''இந்திய இடதுசாரிப் போக்கு'' எனும் தொடர் கட்டுரை; நக்சல்பாரி புரட்சிகர இயக்கத்தின் வரலாற்றை விளக்கும் தொடர்; வீரஞ்செறிந்த தெலுங்கானா விவசாயிகளின் பேராட்டத்தையும் (1946-51) போலி கம்யூனிஸ்டுகளின் துரோகத்தையும் தொகுத்தளித்த தொடர் கட்டுரை; பல்வேறு வகையான போலி சோசலிசம், போலி கம்யூனிசப் போக்குகளை அம்பலப்படுத்தும் ''பாட்டாளியை மயக்கும் பல வண்ண சோசலிசம்'' எனும் தொடர் கட்டுரை முதலானவற்றை புதிய ஜனநாயகம் தொடர்ந்து வெளியிட்டது.

## சமூகப் பிரச்சினையில் நமது அணுகுமுறை

அரசியல் பிரச்சினையோடு மட்டும் புதிய ஜனநாயகம் வரம்பிட்டுக் கொண்டதில்லை. நாட்டையும் மக்களையும் பாதிக்கும் பல்வேறு சமூகப் பிரச்சினைகளில் அது உழைக்கும் மக்களின் நிலையிலிருந்து தீர்வுகளைக் கூறியது. ஆளும் வர்க்கங்களின் சமூக விரோதக் கொள்கைகளைச் சாடியதோடு, குட்டி முதலாளிகள் - போலி சோசலிஸ்டுகளின் சமரசவாத மாய்மாலங்களையும் அம்பலப்படுத்தியது.

● நகர்ப்புற சேரிகளில் வாழும் மக்களை விரட்டியடித்துவிட்டு, நகரை அழகுபடுத்தும் ஆட்சியாளர்களின் கொள்கையை எதிர்த்து, ''உழைப்புக்கான இடத்தில் குடியிருப்பது அடிப்படை உரிமை'' என்று முழங்கியது.

● எம்.ஜி.ஆரின் சத்துணவுத் திட்டம் என்பது, ஒட்டிய வயிறுக்கு வட்டிலில் படைக்கும் தானம்; தட்டிப் பறித்தவிட்ட வாழ்வுக்குத் தரும் சமாதானம் என்று தோலுரித்துக் காட்டியது.

● உழைக்கும் மக்களை ஏய்த்து அரசே நடத்தும் மிகப் பெரிய கொள்ளைதான் லாட்டரி என்றும் அரசே நடத்தும் சூதாட்டமான லாட்டரியின் மோசடிகள் - கேடுகளை அம்பலப்படுத்தியது. இதை நியாயப்படுத்தித் தமது மாநிலத்தில் லாட்டரி சூதாட்டம் நடத்தும் போலி கம்யூனிஸ்டுகளைத் திரை கிழித்துக் காட்டியது.

● நகர்ப்புறங்களில் நிலவும் குடியிருப்பு நெருக்கடி; நடுத்தர வர்க்கத்தின் சொந்த வீடு கட்டிக் கொள்ளும் ஆசைக் கனவு



படிப்பகம்

www.padippakam.com

**10ம் ஆண்டு**

## ''வேலையின்மை, பெண்கள்-குழந்தைகள்-அகதிகள்-காவிரி நீர் பிரச்சினை, தொற்றுநோய் பாதிப்புகள் முதலானவற்றிற்கு சமூகத் தீர்வை முன்வைத்தோம்''

- ஆகியவற்றைச் சாதகமாக்கி கொண்டு, ரியல் எஸ்டேட் மாஃபியாக்கள் பெருகி விட்டதையும், அவர்களது மோசடி - கொள்ளையும், அரசின் கையாலாகாத சட்டங்களையும் விரிவாக விளக்கியது.

● நாட்டில் பெருகிவரும் வேலையின்மை - அதன் விளைவுகள்; வேலையின்மைக்கான காரணம் - அதற்கான தீர்வுகளை ''வேலை காலி இல்லை'' என்னும் சிறப்புக் கட்டுரை மூலம் விளக்கியது.

● ஏகாதிபத்தியங்கள் குவித்து வைத்துள்ள அணு ஆயுதங்கள், ஏவுகணைகள், நட்சத்திரப் போர்கள், சர்வதேச பயங்கரவாதம், எயிட்ஸ் - இவை எல்லாவற்றையும் விட உலகை அச்சுறுத்தும் மிகப்பெரிய முக்கியமான பிரச்சினை, சர்வதேச அகதிகள் பிரச்சினையாகும். மிகவும் புறக்கணிக்கப்பட்ட, தார்மீக ரீதியான இப்பிரச்சினை பற்றி புதிய ஜனநாயகம் விரிவான தொடர் கட்டுரையை வெளியிட்டது. சரியான அரசியல் விழிப்புணர்வு ஏற்படுத்துவதன் மூலம் சர்வதேச அகதிகள் முகாம்களையே புரட்சிப் பாசறைகளாக மாற்ற முடியும் என்று நம்பிக்கையூட்டியது.




● கோயில் திருவிழா, ரசிகர் மன்ற கலைவிழா என்ற பெயரில் நன்கொடை திரட்டுவது, மாநகராட்சி குடிநீர் வரிசையை ஒழுங்குபடுத்துவது என 'சமூகசேவை'யிலிருந்து தொடங்கி சமூகவிரோதிகள் எப்படி உருவாகி வளர்கிறார்கள்; ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பதையும், நமக்கேன் வம்பு என்று மக்கள் ஒதுங்கிக் கொள்வதால் இவர்கள் கொட்டமடிப்பதையும் விளக்கி, இத்தகைய சமூக விரோதிகளுக்கு எதிரான போராட்டம் ஏன் அவசியமானது என்று விரிவான கட்டுரையை புதிய ஜனநாயகம் வெளியிட்டது.

● பஞ்சம் பாரித்த ஒரிசாவில் இந்திய அரசு நிறுவியுள்ள ஏவுகணைத்தளம், அப்பகுதிவாழ் விவசாயிகள் - மீனவர்களைப் பாதிக்கக் கூடிய திட்டம் மட்டுமல்ல; வல்லரசுகளின் அணு ஆயுதப் போருக்கு இந்தியாவைத் தளமாக்கும் திட்டம்தான் என்று அம்மக்களின் நியாயமான போராட்டத்தை ஆதரித்து எழுதியது.

● உலக வங்கியின் திட்டத்தாலும், நேரு - இந்திரா பரம்பரையின் போலி சோசலிசக் கொள்கையாலும் நாடே பாலைவனமாக மாறும் அபாயத்தில் இருப்பதை அதிர்ச்சி தரும் புள்ளி விபர ஆய்வுகளைக் கொண்ட சிறப்புக் கட்டுரையை புதிய ஜனநாயகம் தொகுத்தளித்தது.

● துக்ளக், தராசு, நக்கீரன், ஜூனியர் விகடன், போலீஸ் செய்தி, சத்ரியன், கழுகு, கருடன் முதலான கிசுகிசு பத்திரிகைகளின் அரசியல் போதை வியாபாரத்தையும், வதந்தி, பரபரப்பு, ஆபாசம், வக்கிரம், கிரிமினல் செய்திகள் மூலம் அவை வாசகர்களை ஏமாற்றி மோசடி செய்து வருவதையும் தொடர்ந்து தோலுரித்துக் காட்டியது.

● சுற்றுச்சூழலும் உயிரியல் சூழலும் நஞ்சாவதற்கு ஏகாதிபத்திய லாபவெறியும் போர்வெறியுமே பிரதான காரணம் என்று அம்பலப்படுத்தி, ஏகாதிபத்தியங்களுக்கு எதிரான சுய சார்பான தேசிய உற்பத்தியை நிறுவி வளர்க்காதவரை ஏழை நாடுகள் மீது ஏகாதிபத்திய நரிகள் போடும் பழியையும் சுற்றுச்சூழல் பாதிப்பின் சுமையையும் தடுத்து நிறுத்த முடியாது என சுற்றுச்சூழல் மாநாட்டையொட்டி தொடர் கட்டுரை வெளியிட்டது. மூன்று லட்சம் ஆதிவாசிகளை அகதிகளாக்கும் நர்மதா பேரழிவுத் திட்டத்தை எதிர்த்து அம்பலப்படுத்தியது.

● டங்கல் திட்டத்தின் மூலம் நமது நாட்டு விவசாயத்தின் மீது ஏகாதிபத்தியங்கள் தங்குதடையின்றி ஆதிக்கம் செலுத்த முயற்சிப்பதையும், இதனால் ஏற்படப் போகும் விளைவுகளைப் பற்றி விரிவான தொடர் கட்டுரை மூலம் தமிழகத்தில் முதன்முதலாக விளக்கியது புதிய ஜனநாயகம்.

● பெண்கள் மீதான அடக்குமுறைகள், வரதட்சிணைக் கொலைகள், தேவதாசி முறை, போலீசாரின் பாலியல் கொடுமைகள், சாதிவெறியர்கள் தாக்குதல்கள் - அவமானப்படுத்தல்கள், ஆபாச சீரழிவுகள், குழந்தை உழைப்பு, கொத்தடிமைத்தனம் முதலானவற்றுக்கு எதிராக புதிய ஜனநாயகம் தொடர்ந்து குரல் கொடுத்து வந்ததோடு, இப்பிரச்சினைகளுக்கான மாற்றுத் தீர்வையும் முன்வைத்தது.

● உலக வங்கியின் உத்திரவுப்படி அடிப்படை சுகாதார வசதிகளை ஆட்சியாளர்கள் தொடர்ந்து புறக்கணிப்பதால் பெருகிவரும் தொற்று நோய்கள், அரசு மருத்துவமனைகளின் அவலநிலை, அதிகரித்து வரும் ஐந்து நட்சத்திர சொகுசு மருத்துவமனைகள், அணுக்கதிர் வீச்சுக் கசிவினால் பாதிக்கப்பட்டு பரிதவிக்கும் மக்கள், காட்டுப் பருப்பை உணவாகக் கொண்டு கால்கள் முடமாகிப் போகும் லட்சக்கணக்கான மக்களின் அவலம், புளோரைடு மிகுதியான குடிநீரைத் தொடர்ந்து பயன்படுத்தி முகமே விகாரமாகிப் போகும் விவசாயிகள், அயோடின் சத்துக் குறைவால், முன்கழுத்துக் கழலை நோயால் அவதியுறும் ஆதிவாசி மக்களின் வேதனை, தொடரும் பட்டினிச் சாவுகள், அரசின் அலட்சியத்தால் நேர்ந்த நிலநடுக்கப் பேரழிவு, ஆண்டுதோறும் தாக்கும் புயல் - வெள்ளத்தால் நேரும் கோரம் - என உழைக்கும் மக்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சமூகப் பிரச்சினைகளையும் ஆட்சியாளர்களின் மக்கள் விரோதக் கொள்கைகளையும் தொடர்ந்து அம்பலப்படுத்தியது. இவற்றை செய்திக் கட்டுரைகளாகவும், அதிர்ச்சிதரும் படங்களைக் கொண்ட படக்கட்டுரைகளாகவும் வெளியிட்டது. கடந்த 9 ஆண்டுகளாக ஒவ்வொரு இதழின் பின் அட்டையிலும் ''இதுதான் இன்றைய இந்தியா'' எனும் தலைப்பில் படங்களைக் கொண்டு விளக்கி, இக்கேடு கெட்ட சமூக - அரசியல் அமைப்பை வீழ்த்த அறைகூவி அழைத்தது.

— இவை வகை மாதிரிக்கு சில உதாரணங்கள்தான். இன்னும் பல்வேறு சமூக பிரச்சினைகளைப் பற்றி ஆழமான ஆய்வுகள் - தீர்வுகளைக் கொண்ட பல கட்டுரைகளை புதிய ஜனநாயகம் வெளியிட்டுள்ளது. ●



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

**சிவசேனா சைவப் புலியாம்!**

பாபர் மசூதி இடிக்கப்பட்டதையடுத்து பம்பாயில் இந்து மதவெறி கலவரங்களைத் தலைமையேற்று நடத்திய சிவசேனா, "சாம்னா" எனும் தனது நாளிதழில் "முஸ்லீம்கள் தேசவிரோதிகள்" எனப் பொருள் தரும்படியான பத்திற்கும் அதிகமான தலையங்கக் கட்டுரைகளைத் தொடர்ச்சியாக அச்சமயத்தில் வெளியிட்டு வந்தது. இக்கட்டுரைகளை ஆதாரமாகக் கொண்டு, "பால் தாக்கரே இதன் மூலம் கலவரங்களைத் தூண்டிவிட்டுள்ளார்; எனவே அவரைக் கைது செய்ய வேண்டும்" என மகாராஷ்டிர மாநில உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார் அம்மாநிலத்தின் முன்னாள் தலைமைச் செயலர். வழக்கை விசாரித்த நீதிமன்றமோ, "கட்டுரைகள் முஸ்லீம் மதத்திலுள்ள சமூக விரோதிகளைத்தான் குறிப்பிடுகிறது; முஸ்லீம் சமூகத்தினர் அனைவரையும் குறிப்பிடவில்லை" எனத் தீர்ப்பெழுதி வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டது.

**பஞ்சாப் போலீசின் போலி மோதல் நாடகம்.**

கடந்த 1991-ம் வருடம் உ.பி. மாநிலத்தின் தெராய் பகுதியில், சுற்றுலாவுக்கு வந்த பத்து சீக்கிய இளைஞர்களை துப்பாக்கி முனையில் கடத்திச் சென்று கொன்றொழித்தது, பஞ்சாப் போலீசு. அந்த இளைஞர்களைக் கொடிய தீவிரவாதிகள் என்றும் நேரடி மோதலில் கொல்லப்பட்டனர் என்றும் பின்னர் கதை கட்டியது. இவ்வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம் போலீசாரின் மோதல் நாடகத்தை அம்பலப்படுத்தியதுடன், இப்படுகொலைக்குக் காரணமான 58 போலீசாரின் மீது வழக்குத் தொடரவும் கூறி தீர்ப்பளித்துள்ளது.

**அமெரிக்க பன்னாட்டு நிறுவனத்திற்கு எதிராக...**

மகாராஷ்டிர காங்கிரசு அரசு, அமெரிக்க நாட்டின் பன்னாட்டு நிறுவனமான "என்ரான்", அம்மாநிலத்தில் மின் உற்பத்தி நிலையம் அமைப்பதற்கு தபோல் எனும் கிராமத்திலுள்ள நிலங்களை அந்நிறுவனத்திற்கு மாற்றிக் கொடுப்பதற்குத் திட்டம் தீட்டியது. இதற்கு எதிராகப் போராடும் அக்கிராம மக்கள், சமீபத்தில் அரசு அதிகாரிகள் நிலத்தை மேற்பார்வையிட வந்த பொழுது சுற்றி வளைத்துக் கொண்டு தடுத்து நிறுத்தி விட்டனர். அப்போராட்டத்தில் கலந்து கொண்ட 190 ஆர்ப்பாட்டக்காரர்களுள் 145 பேர் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

**தபால் பட்டுவாடா தனியாருக்கு**

தொலை தொடர்புத் துறையின் கீழ் இயங்கும் தொலைபேசி இலாகாவில் தனியார் நுழைய அனுமதித்த பின், தபால் துறையிலும் ஒரு பிரிவைத் தனியாருக்குத் தாரைவார்க்க முடிவெடுத்துள்ளது ராவ் அரசு. இத்திட்டத்தின்படி உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடிதங்களை அனுப்பும் பொறுப்பு தனியார் "கூரியர்" நிறுவனங்கள் வசம் ஒப்படைக்கப்படும். இதன் மூலம் தனியார் நிறுவனங்கள் 500 கோடி ரூபாய் அளவிற்கு வருமானம் ஈட்ட வழி ஏற்படுத்தித் தந்துள்ளது, ராவ் அரசு.

**ஈயத்தைப் பார்த்து இளிக்கும் பித்தளையாக 'மார்க்சிஸ்டு'கள்**

'மார்க்சிஸ்டு'கள், தாங்கள் ஆளும் மேற்கு வங்க மாநிலத்தை தொழிற்மயப்படுத்துவதற்காக, "அந்நிய மூலதனத்தை வரவேற்றும், தனியார் துறைக்கு ஊக்கமளித்தும் வேலை நிறுத்தங்களில் தொழிலாளர்கள் இனி ஈடுபடாது பார்த்துக் கொள்வோம் என வாக்குறுதிகள் தந்தும் " ஒரு புதிய தொழிற் கொள்கையை அறிவித்துள்ளனர். "மத்திய அரசிடமிருந்து உங்கள் கொள்கை வேறுபட்டதாகத் தெரியவில்லையே" என நிருபர்கள் கேட்டதற்கு, "நாங்கள் மேற்கு வங்கக் குடியரசில் வாழவில்லை" என தர்க்க வாதம் பேசியும் "பன்னாட்டு மூலதனத்தை நாங்கள் ஆக்க பூர்வமாகப் பயன்படுத்துவோம்" என விளக்கமளித்தும் "மீசையில் மண் ஒட்டவில்லை" எனக் காட்டிக் கொண்டார், ஜோதிபாசு. அக்கட்சியின் மத்தியக் கமிட்டியும் கேள்வி ஏதுமின்றி ஜோதிபாசுவின் கொள்கையை ஏற்றுக் கொண்டு விட்டது.

**திருப்பூரிலும் குழந்தை உழைப்பு**

தீப்பெட்டி, பட்டாசு, தோல் பதனிடுதல், பீடித் தொழில்களையடுத்து திருப்பூரின் பின்னலாடை மற்றும் சாயப்பட்டறைகளிலும் குழந்தைத் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படுவது அதிகரித்து வருகிறது. ஐந்து முதல் பதினான்கு வயதுள்ள 30,000 சிறுவர் சிறுமியர்கள் வெறும் 3 ரூபாய் சம்பளத்திற்குத் தினமும் 16 மணி நேரம் தொடர்ந்து வேலை செய்ய நிர்ப்பந்திக்கப் படுகின்றனர். இதோடு காச நோய் போன்ற நுரையீரல் சம்மந்தப்பட்ட நோய்களும் பல்வேறு விதமான தோல் வியாதிகளும் எளிதில் தொற்றிக் கொள்ளும் அபாயமும் இவர்களைத் தொடர்கிறது.

**டெல்லி போலீசின் குதர்க்க புத்தி**

இந்திரா காந்தி கொல்லப்பட்டு பத்து ஆண்டுகள் கழிந்தும் விசாரணைக் கமிஷன் அமைத்து சீக்கியர்களை நரவேட்டையாடிய குற்றவாளிகள் அடையாளம் காட்டப்பட்டும் இதுநாள் வரை யாருக்கும் எதிராகவும் வழக்குக்கூட தொடரப்படவில்லை. டெல்லி போலீசுத்துறை இந்த இழுத்தடிப்பைச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு, "இந்தியக் குற்றவியல் சட்டத்தின்படி குற்றங்கள் நடந்த ஒரு வருடத்துக்குள் அரசு வழக்குத் தொடர வேண்டும்; எனவே, காலதாமதமான இவ்வழக்கில் சம்மந்தப்பட்டுள்ள போலீசாரை விடுவித்துவிட வேண்டும்" என அறிக்கை தயாரித்து அரசுக்கு அனுப்பியிருக்கிறது.

**அரசாங்கத்திற்குச் சவால் விடும் கருப்புப் பணம்**

1989-ஆம் ஆண்டு முடிய கிட்டத்தட்ட 3 லட்சம் கோடி கருப்புப் பணம் நமது நாட்டில் புழக்கத்தில் இருப்பதாக வருமான வரித்துறை அதிகாரிகள் சங்கம் அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளது. மேலும் இது வருடமொன்றுக்கு 50,000 கோடி என்ற அளவில் அதிகரித்து வருவதோடு, பன்னாட்டு நிறுவனங்களின் வருகையின் பின் இது மேலும் உச்சத்தை அடையவே வாய்ப்புகள் உள்ளன. "இக் கறுப்புப் பணத்தில் 25 சதவிகிதத் தொகையைக் (75,000 கோடி) கைப்பற்றினாலே நாட்டின் பற்றாக்குறையை சமாளித்து விடலாம் என அறிக்கைச் சுட்டிக் காட்டியிருப்பதோடு, வருமான வரி சோதனைகளின் போது "குண்டர்களைக் கொண்டு அதிகாரிகள் தாக்கப்படுவது அதிகரித்து வருவதையும்" அரசிடம் தெரிவித்துள்ளது. ஆனால் ராவோ முதலாளிகளுக்கு மேலும் வரிச்சலுகைகளை அளித்தும் பற்றாக்குறையைச் சமாளிக்க மேலும் கடன் வாங்கியும் நாட்டின் பொருளாதாரத்தை எதிர்த் திசையில் நகர்த்திச் செல்கிறார்.

தீர்ப்பை எதிர்த்து பம்பாய் உயர் நீதிமன்றத்தின் முன் மறியல் செய்யும் "ஏக்தா" அமைப்பினர்






படிப்பகம்

www.padippakam.com

## மார்வாடி எதிர்ப்புப் போராட்டம்:

# மறைக்கப்பட்ட உண்மைக்கு மணியரசன் குழு வாக்குமூலம்

மார்வாடி எதிர்ப்பு போராட்டம் நடத்திய பிழைப்புவாதி மணியரசன் - நெடுமாறன் கும்பலைப் பற்றி "மார்வாரி எதிர்ப்பில் மறைக்கப்படும் உண்மைகள்" என்ற கட்டுரையில் '94 ஜூன் 15 இதழில் நாம் அம்பலப்படுத்தியிருந்தோம். அதற்கு எதிராக "புதிய ஜனநாயகம் - மார்வாடிகளுக்கு மறைமுக வக்காலத்து" என்கிற பெயரில் மணியரசன் கும்பல் நடத்தும் "தமிழர் கண்ணோட்டம்" '94 ஜூலை இதழில் நம்பூதிரித்தனமான வாதங்களை எழுதியது. அவற்றுக்குத் தகுந்த பதிலைக் கடந்த "புதிய ஜனநாயகம்" இதழில் எழுதினோம். அதன் இறுதியில் நமது வாதங்களுக்குப் பதிலளிக்க வக்கில்லாத மணியரசன் கும்பல் முன்னுரையாகவும் பின்னுரையாகவும் பல புளுகு - அவதூறுகளை எழுதியிருப்பதாகவும் அவற்றை இந்த இதழில் அம்பலப் படுத்துவதாகவும் குறிப்பிட்டிருந்தோம்.

"புதிய ஜனநாயகத்தின்" விமர்சனத்துக்குப் பதிலளிக்கப்புகுமுன், "புருடாவிடுவது, அரைப்பேச்சுக் கொண்டு அம்பலம் ஏறுவது, அரசாங்கத்திற்கு ஆள் காட்டிவிடுவது ஆகியவை 'புதிய ஜனநாயக'த்தின் உடன் பிறந்த குணங்கள்" என்று குணக்கொலை செய்யும் பணியில் இறங்கியுள்ளது, மணியரசன் கும்பல்.

முதலாவதாக, "புருடா விடுவது" என்று அக்கும்பல் எதைக் குறிப்பிடுகிறது? '94 ஜனவரி 'புதிய ஜனநாயக'த்தில் ஒரு புகைப்படம் வெளியிட்டிருந்தோம். அதற்கு "கிட்டுவுடன் விடுதலைப் புலிகளின் தமிழகப் பினாமிகள் நெடுமாறன், மணியரசன்" என்று படக்குறிப்பு எழுதியிருந்தோம். அது "தமிழர் கண்ணோட்ட"த்தில் இருந்து எடுத்த புகைப்படம். அந்தப்படத்தில் இருப்பவர்கள் யார், யார் என்று அந்த ஏடு தனது படக்குறிப்பில் எழுதவில்லை. வெறுமனே "ஈழத் தமிழர்களுடன் மணியரசன், நெடுமாறன்" என்றுதான் இருந்தது. சற்று தெளிவற்ற நிலையில் இருந்த அப்படத்தில் கிட்டுவைப் போன்ற தோற்றமுடைய ஒரு நபர் இருந்தார். அவர் கிட்டுதான் என்று நாம் நம்பினோம். தனது பயணத்தில் கிட்டுவைச் சந்தித்தாக இப்போதும் மணியரசன் பெருமையுடன் பேசிவருகிறார். இப்போது மணியரசன் கூற்றுப்படி புதிய ஜனநாயகம் எழுதிய படக்குறிப்பு தவறானது என்பதை நாம் உணருகிறோம். ஆனால் '94 ஜனவரியில் நேர்ந்த இத்தவறை அறிந்தும் மணியரசன் கும்பல் எமக்குத் தெரிவிக்கவில்லை. அவ்வாறு முன்பே சுட்டிக்காட்டியிருந்தால் தவறுக்கு சுயவிமர்சனமேற்று பிழைத்திருத்தமும் வெளியிட்டிருப்போம். மணியரசன் கும்பலோ ஆறு மாதத்திற்குப் பிறகு தனது அரசியல் பிழைக்குச் சப்பைக்கட்டுப் போடுவதற்கு அந்த நமது தவறைப் பயன்படுத்திக் கொள்கிறது.

இரண்டாவதாக, "அரைப்பேச்சுக் கொண்டு அம்பலம் ஏறுவது" என்று குறிப்பான எதையும் மணியரசன் கும்பல் சுட்டிக்காட்டவில்லை. ஆனால் மணியரசனும், நெடுமாறனும் விடுதலைப் புலிகளுக்காக அவர்கள் பெயரில் எந்த பினாமி வேலையும் செய்யவில்லை என்று மறுத்திருக்கிறது. தமிழீழ விடுதலையையும் அதற்காகப் போர் புரியும் விடுதலைப் புலிகளையும் கோட்பாட்டளவில் ஆதரிப்பதாகக் கூறிக்கொள்கிறது.

மணியரசன் - நெடுமாறன் கும்பலைப் பொருத்தவரை அதற்கு ஒரு கோட்பாடு இருக்கிறது என்பதே பித்தலாட்டமாகும். அதுகோட்பாடு எதுவுமற்ற பிழைப்புவாத கும்பல்தான். ஈழ விடுதலையையும், தமிழ்நாட்டின் தன்னுரிமையையும் தமது அரசியல் பிழைப்புக்காக அக்கும்பல் ஏற்றுள்ளது என்பதுதான் நமது முடிவாகும். இதை இறுதியில் நாம் நிரூபிப்போம். மணியரசன் நெடுமாறன் கும்பல் விடுதலைப் புலிகளுடைய பிரச்சார இயந்திரத்தின் ஒரு பகுதியாகச் செயல்படும் அரசியல் பினாமிகள் என்கிற பொருளில்தான் நாம் குறிப்பிட்டு வருகிறோம். மற்றபடி புலிகளின் வேறுபிற நடவடிக்கைகளுக்கு அக்கும்பல் பினாமியாகச் செயல்படுகிறதா, இல்லையா என்கிற விவரம் நமக்குத் தெரியாது. ஆனால் ஒரு போரில் ஈடுபட்டுள்ள, கட்டுக்கோப்பான அமைப்புடைய புலிகள் மணியரசன், நெடுமாறன், வீரமணி போன்றவர்களை வேறுபிற நடவடிக்கைகளுக்குப் பினாமிகளாக பயன்படுத்தும் அளவுக்கு முட்டாள்கள் அல்லவென்று நாம் உறுதியாக நம்புகிறோம். அச்செயல்களுக்கு இவர்களை நம்புவதைவிட அரசியலற்ற பல பினாமிகளையே புலிகள் அதிகம் நம்புகின்றனர் என்பது வெளிப்படையான இரகசியமாகும்.

மூன்றாவதாக அரசாங்கத்துக்கு ஆள் காட்டுவது என்று மணியரசன் கும்பல் எதைக் குறிப்பிடுகிறது? புலிகளை ஆதரிப்போரை அரசு வேட்டையாடுகிறது; தடை செய்யப்பட்ட புலிகளின் பினாமிகள் என்று மணியரசனையும் நெடுமாறனையும் அரசுக்கு ஆள்காட்டுகிறோம் என்கிறது. நெடுமாறனுடன் தனது மேலைச்சீமைப் பயணம் பற்றிய தொடர் எழுதி வருகிறார். மேற்குச் சீமைக்கு இவர்களை அழைத்துப் பல நிகழ்ச்சிகளிலும் உரையாற்றவும், சுற்றுலாப் போகவும் புலிகள் அமைப்பினர் ஏற்பாடு செய்ததாகவும் தமது பயணம் குறித்து போட்டிக் குழுக்கள் மூலம் (ஜெர்மன் போலீசாருக்குக்கூட) தெரியவந்து, தாம் தங்கியிருந்த இடத்தை சோதனையிட்டதாகவும் மணியரசனே பெருமையுடன் எழுதியுள்ளார். இந்தியாவில் தடை செய்யப்பட்ட புலிகள் அமைப்புடன் இப்படி வெளிநாட்டில் சென்று தொடர்பு வைத்துக் கொண்டதை தானே பீற்றிக் கொள்வது அரசுக்குத் தெரியாதது போலவும், புலிகளின் பினாமிகள் என்று நாம் எழுதியதுதான் ஆள்காட்டி வேலை என்றும் மணியரசன் கும்பல் கண்கட்டி வித்தை காட்டுகிறது. புலிகளை ஆதரிக்கவும், அதனால் ஆதாயம் அடையவும் வேண்டும். ஆனால், அதன் காரணமாக எவ்விதப் பாதிப்பும் வரவும்கூடாது என்பது கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசை என்கிற கதைதான்.

பு.ஜ.வின் உடன்பிறந்த குணங்கள் என்று மூன்று அவதூறுகளை எழுதிய பின் பு.ஜ.வைப் பற்றி, அதனுடன் இவர்கள் கொள்ள வேண்டிய அணுகுமுறை பற்றி பின்வருமாறு எழுதுகிறது, மணியரசன் கும்பல். "புதிய ஜனநாயகம்" பார்வைக்கு ஒரு சில்லுண்டித்தனமான பத்திரிக்கை போல் தோன்றும். ஆனால் அதை அப்படி எளிதாக நினைத்துக் கவனக்குறைவாக இருந்துவிடக்கூடாது".

மேற்கண்ட மணியரசன் கும்பலின் "விமர்சன"த்தை "புதிய ஜனநாயக"த்தின் பத்தாண்டு கால அரசியல் பணியைக் கண்டு வரும் வாசகர்களின் முடிவுக்கு விட்டுவிடுகிறோம். அக்கும்பலுக்கு பதில் சொல்ல முடியாத காரணத்தினால் அல்ல; சுய மதிப்பீட்டைவிட வாசகர் மதிப்பீட்டை மேலாகக் கருதுவதனால்!

"புதிய ஜனநாயகம்" ஏடு தமிழ்த் தேச தன்னுரிமையை ஆதரிப்பது, தமிழ்



படிப்பகம்

www.padippakam.com

ஈழம் விடுதலை ஆவதை ஆதரிப்பது, பார்ப்பனீயத்தை எதிர்ப்பது, பெரியாரை ஆதரிப்பது ஆகியவை போலித்தனமானது, வெறும் நடிப்பு, வேடம் புனைவது என்று மணியரசன் கும்பல் கூறுகிறது. இதற்கும் ஆதாரமாக தனது குரு நம்பூதிரி பாணியில் நமது நிலைப்பாடுகளைத் திரித்துச் சொல்லியும், இட்டுக்கட்டியும் வாதம்புரிந்துள்ளது, மணியரசன் கும்பல்.

விடுதலைக்காக ஆயுதப் போர் நடத்தும் புலிகளை எதிர்த்துப் பிரச்சாரம் செய்வதில் அரசுக்கும் புதிய ஜனநாயகத்துக்கும் அடிப்படையான வேற்றுமை ஒன்றுமில்லை; ஏனென்றால் புலிகளை அரசாங்கம் பயங்கரவாத அமைப்பு என்கிறது; புதிய ஜனநாயகமோ பாசிச அமைப்பு என்கிறது; ஆகவே நமது ஈழ ஆதரவு நடிப்பு என்கிறது மணியரசன் கும்பல். இட்லரை ''நாஜி'' என்றும் முசோலினியை ''பாசிஸ்டு'' என்றும் கூறி அமெரிக்கா மற்றும் மேலை ஏகாதிபத்தியமும், யூத இன வெறியர்களும் சாடி எதிர்த்தார்கள்; கம்யூனிஸ்டுகளும் ''அவ்வாறே'' சாடி எதிர்த்தார்கள். அதற்காக இட்லரும் முசோலினியும் அப்படி இல்லை என்றோ, கம்யூனிஸ்டுகளும் ஏகாதிபத்தியமும் அவர்களை எதிர்த்ததில் அடிப்படையில் வேற்றுமை ஒன்றுமில்லை என்றோ கருதமுடியுமா? பாரதீயா ஜனதா, சிவசேனா கும்பல்களை வகுப்புவாத மதவெறியர்கள் என்று வி.பி.சிங் - சந்திரசேகர், ''இடதுசாரி'' முன்னணி மட்டுமல்ல ராஜீவ், நரசிம்மராவ் அரசாங்கங்களும் பிரச்சாரம் செய்கின்றன. கம்யூனிசப் புரட்சியாளர்களும் அக்கும்பல்களை இந்துமதவெறி பாசிச அமைப்பாக வரையறுத்து பிரச்சாரம் செய்து எதிர்க்கின்றனர்; அதற்காக அக்கும்பல்களை எதிர்ப்பதில் அனைவருக்குமிடையே அடிப்படையில் வேற்றுமை ஒன்றுமில்லை என்று கூறமுடியுமா?

புலிகளை நாம் ஏன் பாசிச அமைப்பு என்று வரையறுக்கிறோம் என்பதற்கான காரணங்களைப் பலமுறை தெளிவுபடுத்தியிருக்கிறோம். அவற்றுக்குப் புலிகளோ, மணியரசன் கும்பல் உட்பட அவர்களின் அரசியல் பினாமிகளோ இதுவரை பதில் ஏதுவும் கூறவே இல்லை. ''புலிகள்தாம் ஈழ விடுதலைக்குப் போராடும் ஒரே அமைப்பினர்; ஈழ விடுதலையை ஆதரிப்பது என்பதே புலிகளை ஆதரிப்பதுதான்'' என்றுதான் இதுவரை கூறப்பட்டு வருகிறது; இதற்கும் நாம் விளக்கமளித்தும் அவர்களிடம் இருந்து பதில் கிடையாது. மேலும் இதே மணியரசன் கும்பல் முன்னாள் சோசலிச நாடுகளின் வீழ்ச்சிக்கான காரணங்களைக் கூறும்போது, அங்கு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பது ஒரு கட்சி சர்வாதிகாரமாகிப் போனதுதான் காரணமென்றும் பல கட்சி ஜனநாயக ஆட்சிமுறைதான் தீர்வு என்றும் வாதிடுகிறது. சோசலிசத்திற்கே பலகட்சி ஆட்சிமுறையை முன்மொழியும் இந்தக் கும்பல் விடுதலை பெறும் ஈழத்திற்கு மட்டும் புலிகளின் ஒரே கட்சி ஆட்சி முறைக்கான பாசிச நடவடிக்கைகளை எதிர்க்கக் கூடாது என்கிறது. இதிலிருந்து வேடம் புனைந்து நடிப்பது யார் என்பது தெளிவாகிறது.

பெரியாரின் முக்கியக் கொள்கையான வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை புதிய ஜனநாயகம் ஆதரிக்கவில்லை; மண்டல் குழு பரிந்துரையை எதிர்க்கிறது; பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பில் மிக முக்கிய ஆயுதமான இடஒதுக்கீடு பிற்படுத்தப்பட்டவர்களுக்குக் கூடாது என்று




பேசுகிறது; இதன் உள்நோக்கம் மறைமுகமாகப் பார்ப்பன ஆதிக்கத்தை ஆதரிப்பதுதான் என்கிறது, மணியரசன் கும்பல். இட ஒதுக்கீடு, மண்டல் விவகாரத்திலும் நமது நிலைப்பாடுகளை நாம் பலமுறை எழுதியிருக்கிறோம்; அவை எதற்குமே இவர்கள் யாருமே பதில் கூற முடியாத நிலையில் பார்ப்பன முத்திரை குத்தி நழுவிக் கொள்ளவே முயலுகின்றனர் என்பதுதான் உண்மை; இதன்மூலம் நாம் குற்றஞ்சாட்டுவதைப் போல இவர்கள் அனைவரும் மேல்சாதி மேட்டுகுடியினரின் நலன்களுக்காகவே நிற்கின்றனர்; ஆனால் பிற்படுத்தப்பட்ட மக்களின் நலனில் அக்கறையுள்ளவர்களாக நடிக்கின்றனர் என்பது மீண்டும் நிரூபணமாகிறது.

''மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சித் திட்டம்போல அனைத்திந்தியப் புரட்சி - புரட்சியின் வெற்றிக்குப் பிறகு விரும்பிச் சேர்ந்த தேசிய இனங்களின் ஒன்றியமாக இந்தியாவை மாற்றுவதுதான்'' பு.ஜ.வின் திட்டம்; ''சீனாவில் நடந்த புரட்சி போல் கிராமங்களை விடுவித்துக் கொண்டே சென்று இறுதியில் தலைநகர் தில்லியைக் கைப்பற்றுவதை'' பு.ஜ.வின் திட்டம் குறிக்கிறது; ஆனால் தமிழ்த் தேச தன்னுரிமையோ தில்லியின் ஆதிக்கத்திலிருந்து விடுபடுவதைக் குறிக்கிறது. ஆகவே பு.ஜ. தமிழ்த் தேச தன்னுரிமையை ஆதரிப்பதாக வஞ்சகமாக வாய்ச்சாலம் செய்கின்றது என்கிறது, மணியரசன் கும்பல்.

''மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு'' கட்சி அதன் மதுரை, கொச்சி மாநாடுகளிலேயே தேசிய இனங்களின் தன்னுரிமைக்கு மாற்றாக ''மாநிலங்களுக்குக் கூடுதல் அதிகாரம்'' என்கிற திருத்தத்தைத் தனது திட்டத்தில் செய்துவிட்டது. அப்போது இந்த மணியரசன் கும்பல் அக்கட்சியில்தான் குப்பை கொண்டிக் கொண்டிருந்தது. நமது கட்சி அதன் துவக்க நாளில் இருந்தே தேசிய இனங்களின் தன்னுரிமையை தனது திட்டத்தின், புரட்சியின் ஒரு அங்கமாக கொண்டிருக்கிறது. ஆனால் இரண்டு கட்சிகளின் திட்டமும் புரட்சியும் ஒரே தீர்வைக் கொண்டிருப்பதாகப் பச்சையாகப் புளுகுகிறது, மணியரசன் கும்பல். தன்னுரிமைக்காக ஆயுதப் போராட்டங்கள் நடத்திக் கொண்டிருக்கும் நாகா, மிசோ, குக்கி, மணிபுரி, அசாமி, காஷ்மீரி விடுதலை அமைப்புகள் நமது அமைப்பின் நிலைப்பாட்டை ஏற்று தோழமை உறவு கொண்டுள்ளன. தமிழ் தேசத்தன்னுரிமை சவடால் அடிக்கும் மணியரசன் கும்பலைப் போன்ற பிழைப்புவாதிகள்தாம் நம்மீது அவநம்பிக்கையும் அவதூறும் கொண்டு பாய்கிறார்கள்.

முதலாளித்துவ, ஏகாதிபத்தியவாதிகளுக்குத்தான் சர்வதேசியமும் தேசியமும் எதிரெதிரானவை; முரண்பாடானவை. ஆனால் பாட்டாளி வர்க்கத்தைப் பொருத்தவரை சர்வதேசியமும் தேசியமும் எதிரெதிரானவையோ முரண்பாடானவையோ அல்ல என்பது ''பொதுவுடமை''க் கட்சி என்று பெயர் வைத்துக் கொண்டிருக்கும் அந்தக் கும்பலுக்கு நன்றாகவே தெரியும். ஆனால் அரசியல் பிழைப்புக்காக தன்னுரிமைக் கொள்கையை ஏற்றுள்ளதாக நடிப்பதால் அவை எதிரெதிரானவை என்று சித்தரிக்கிறது.

இந்தக் கும்பலின் தாய்க்கட்சியைப் போல தில்லியைக் கைப்பற்றுவதற்கு, இந்த கும்பலே தன்னுரிமை பெறவும் நாக்கில் எச்சில் விட்டுக் கொண்டு காத்திருப்பதைபோல ஓட்டுப் பொறுக்கி அரசியல் மூலம் தில்லியைக் கைப்பற்றுவதில்லை கம்யூனிஸ்டு புரட்சியாளர்களின் திட்டம். அதாவது இப்போதிருக்கும் தேசிய இன ஒடுக்குமுறை அரசியல் அமைப்பை அப்படியே கைப்பற்றி தன்னுரிமை பெற்ற தேசிய இனங்களின் ஒன்றியமாக இந்தியாவை மாற்றுவது அல்ல; அனைத்திந்


படிப்பகம்

www.padippakam.com

திய புரட்சியின் மூலம் ''தில்லியிலுள்ள'' தேசிய இன ஒடுக்குமுறை அரசியல் அமைப்பைத் தகர்ப்பதே நமது திட்டமும் நடைமுறையுமாக உள்ளது. அவ்வாறு செய்யும் போது அது தில்லியின் ஆதிக்கத்தில் இருந்து விடுபடும் தமிழ்த் தேசத் தன்னுரிமைக் குறிக்கோள் நிறைவேறியதாகாதா? தேசிய இன ஒடுக்குமுறையில் இருந்து விடுபடுவதுதானே குறிக்கோள்! வெறுமனே தன்னுரிமைக்காகத் தன்னுரிமையா? தில்லி ஆதிக்கத்தில் இருந்து விடுபடுவதுதான் குறிக்கோளே தவிர வெறுமனே தில்லியில் இருந்து விடுபட வேண்டும் என்பதற்காக விடுபடுவதல்லவே!

அந்தப் புரட்சியில் பாட்டாளி வர்க்கத்தலைமையும், அதன் திட்டத்தில் ஒரு அங்கமாக தன்னுரிமைக் குறிக்கோளும், அதற்கான புரட்சிகர முன்னணி, தன்னுரிமைப் போராளிகளும் உள்ளடக்கியிருப்பதும் தேசிய இன ஒடுக்குமுறையற்ற புதிய அரசியல் அமைப்பை நிறுவிக் கொள்வதை உறுதி செய்கிறது; அதையும் ஏற்காமல் ஒரு தேசம் பிரிந்து போவதை விரும்பினால் அதற்கான உரிமையும் உறுதி செய்யப்படுகிறது. இந்த அடிப்படையில் இயங்கும் புரட்சிகர இயக்கத்தின் மீது அவநம்பிக்கை பரப்பும் இதே மணியரசன் கும்பல்தான் பண்ருட்டி ராம்சந்திரன், அப்துல்சமது, ஜான் பாண்டியன், பழனிபாபா போன்றவர்களை முன்பு தன்னுரிமையை ஏற்கும் கொள்கைக் கூட்டணிக்காரர்கள் என்று நம்பச் சொன்னது; காங்கிரசுடன் பேரங்கள் நடத்தும் ராமதாசை ஈழ விடுதலை, புலி ஆதரவு, தன்னுரிமைப் போராளி என்று நம்பும்படி சொன்னது. காவிரி விவகாரத்தில் ஜெயலலிதா போராட்டத்தையும் சமூக நீதி காத்த வீராங்கனை என்று அவரைப் போற்றும் நெடுமாறனையும் நம்பும்படி சொல்கிறது. இப்படிப்பட்ட நபர்கள் சொல்வதை நம்பலாம். ஆனால் கம்யூனிசப் புரட்சியாளர்கள் சொல்வது மட்டும் நடிப்பு, போலித்தனம், வேடம் போடுவது என்கிறது மணியரசன் கும்பல்!

தமிழ்த் தேசத்தை ''மாநிலம்'' என்று கொச்சைப்படுத்துவதாகவும், ''மாநில அமைப்புக் குழு'' என்று பெயர் வைத்துக் கொண்டு குதிரையில் வரும் பிரிதிவி ராஜனுக்காக காத்திருக்கும் புதிய சம்யுக்தையைப் போல அனைத்திந்தியத் தலைமைக்காகக் காத்திருக்கிறோம்; மத்தியக் குழுவோ, பிற மாநிலங்களில் கிளைகளோ இல்லாத சோகநிலையில் உள்ளோம் என்று கேலி பேசுகிறது, மணியரசன் கும்பல்.

அடிப்படை நிலைப்பாடுகளில் ஒன்றுபட்டிருப்பினும் இன்னும் சில கோட்பாடு, போர்த்தந்திர, செயல் தந்திர நடைமுறைப் பிரச்சினைகளில் கருத்து வேறுபாடு கொண்டிருப்பதால் கம்யூனிசப் புரட்சியாளர்கள் குழுக்களாகவே இயங்குகிறோம்; அவற்றைக் கலைந்து ஒரே தலைமையின் கீழ் இணைவதற்கான முயற்சியில் அக்குழுக்கள் இரண்டு போக்குகளாகவும் அமைப்புகளாகவும் ஐக்கியப்படுவதில் முன்னேற்றமும் கண்டுள்ளோம். மூன்று தனிக்குழுக்களாக இயங்கி புரட்சியில் முன்னேறியபோது இணைந்து வியத்நாமிய கம்யூனிஸ்டுக் கட்சி உருவானது; சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சி என்ற ஒரே பெயரில் இயங்கி வந்த புரட்சிக்கு முந்திய ருஷ்யாவில் ஒன்றுபட்ட தலைமை பல ஆண்டுகளாகக் கிடையாது; குழுக்களாகவே இயங்கி வந்தது; அவற்றை இணைத்து மாநாடுகள் நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட மத்தியக் கமிட்டியும் கலைந்தது; இறுதியில் லெனின் தலைமையிலான ''போல்ஷ்விக் குழு''தான் கம்யூனிச கட்சியாகி புரட்சியில் வென்றது; பொதுவுடமைக் கட்சி என்று பெயர் வைத்துக் கொண்டுள்ள பிழைப்புவாத மணியரசன் கும்பலுக்கு இந்த வரலாறு தெரியாதா?

> இந்தியாவில் தடை செய்யப்பட்ட புலிகள் அமைப்புடன் வெளிநாட்டில் சென்று தொடர்பு வைத்துக் கொண்டதை, தானே பீற்றிக் கொள்வது அரசுக்குத் தெரியாதது போலவும் புலிகளின் பினாமிகள் என்று நாம் எழுதியதுதான் ஆள்காட்டி வேலை என்றும் மணியரசன் கும்பல் கண்கட்டி வித்தை காட்டுகிறது.

தெரிந்தும் நம்மைக் கிண்டல் செய்கிறதா?

கம்யூனிசப் புரட்சியாளர்கள் குழுக்களாகப் பிளவுபட்டிருப்பதைக் கேலி செய்த வீரமணி கும்பலுக்கும், போலிக் கம்யூனிஸ்டுகளுக்கும் சொன்ன அதே பதிலை மல்லாக்கப் படுத்துக் கொண்டு மேலே எச்சில் உமிழும் இவர்களுக்கும் கூறுகிறோம்.

இவ்வளவு பரந்த, மாறுபாடுகளுடைய இந்தியாவில் நாம் சில குழுக்களாக இருக்கும் நிலை நீடிப்பது உண்மை தான். ஆனால் இந்தியாவில் பத்தில் ஒரு பகுதி கூட இல்லாத, ஒரே இனம், ஒரே மொழி பேசும் தமிழ்த் தேசத்தில் தன்னுரிமை - சமூக நீதிப் புரட்சி பேசும் வீரமணி, நெடுமாறன், சுபவீ - தியாகு, மணியரசன் பொழிலன், புலவர், உண்டகட்டி சுந்தரம், இளங்கோவன் இப்படி தலைக்கொரு குழுவாக நூற்றுக்கணக்கில் பிளவுபட்டுக் கிடக்கிறார்களே, இது அவர்களுக்குத் தெரியவில்லையா? இவர்கள் எல்லாம் அந்த ஆண்டாளைப் போல எந்தப் பெருமாளின் வரவுக்காக மாலையும் கையுமாக திருப்பாவை, திருவெண்பாவை பாடிக் கொண்டு காத்திருக்கிறார்கள்?

நமது அமைப்புக்குப் பிற மாநிலங்களில் கிளைகளே இல்லாத சோக நிலையைக் கிண்டல் செய்யும் ''தமிழ் தேசப் பொதுவுடமை கட்சி'' என்று பெயர் வைத்துக் கொண்டுள்ளதே இந்த மணியரசன் கும்பல், இதற்கு தமிழ்நாட்டின் எல்லா மாவட்டங்கள், வட்டங்களில் கிளைகள் இருக்கின்றனவா? இருக்கும் ஒரு சிலரை வைத்து மாவட்ட, வட்ட அமைப்புகள் என்கிற பம்பாத்துக் காட்டிக் கொண்டிருக்கிறதே இது ''சோக நிலை'' இல்லை, சுய இன்பநிலை தான்!

''புதிய ஜனநாயகத்தின் தற்குறித்தனம்'' என்று தொடங்கி பல அவதூறுகள் நிறைந்த முடிவுரையும் எழுதியுள்ளது. புதிய ஜனநாயகம் 15 ஜூன் '94 இதழில் பின்வருமாறு நாம் எழுதியிருந்தோம். ''குட்டி முதலாளித்துவத் தலைமையிலான தன்னுரிமைப் போராட்டங்கள் - அசாம், மணிப்பூர், ஈழம், பாலஸ்தீனம், தென்னாப்பிரிக்கா போன்றவை பின்னடைவுக்கோ, சிக்கலுக்கோ, திரிபுகளுக்கோ, துரோகத்திற்கோ இலக்காகியுள்ளதைப் பார்க்கிறோம். இதற்கு முக்கியக் காரணம் அவர்களிடம் சித்தாந்தம், கொள்கை, அரசியல் திசை வழியில் எதுவும் தெளிவாக திட்ட வகைப்பட்டதாக இல்லை என்பதே''.

பு.ஜ. எழுதியிருந்ததின் இந்தப் பகுதியில் ''திரிபுகளுக்கோ, துரோகத்திற்கோ'' என்கிற இரண்டு அம்சங்களை இருட்டடிப்புச் செய்து விட்டு மேற்கோள் காட்டிய மணியரசன் கும்பல்.

''மேற்கண்ட பத்தியை வைத்துக் கொண்டே பு.ஜ.வின் அரைவேக்காட்டுத்தனத்தை அடையாளம் கண்டு கொள்ளலாம். இதற்குப் பெயர்தான் தற்குறித்தனம் ஆணவம், (போனால் போகிறது என்று காஷ்மீர், குர்திஷ் போன்ற போராட்டங்களை விட்டு விட்டார்களா அல்லது அங்கெல்லாம் பாட்டாளி வர்க்கத்தின் தலைமையில் போராட்டம் நடைபெறுவதாகக் கருதினார்களா என்பது தெரியவில்லை.)'' என்று நம்மீது பாய்ந்திருக்கிறது. ''ஆயுதப் போராட்டம் நடத்துவதாக நெடுங்காலமாக சொல்லி வரும் பு.ஜ. இங்கு நடத்திய ஆயுதப் போராட்டம் எது? மேற்படி போராட்டங்களை விட எடுத்துக் காட்டான, அவை பின்பற்றத்தக்க ஆயுதப் போராட்டம் நடத்துகிறதா?'' என்று கேள்விகள் எழுப்புகிறது. ''இல்லை. வெட்கமற்ற வாய்க்கூச்சல், வெற்று வேட்டுச் சத்தம்! இதற்குப் பெயர் தான் தற்குறித்தனமான ஆணவம்!'' என ஏசியுள்ளது, மணியரசன் கும்பல்.


படிப்பகம்

www.padippakam.com

"மேற்குறிப்பிட்ட தேசிய இனங்களின் ஆயுதப் போராட்டங்களை விடத் தெளிவான சித்தாந்தம், கொள்கை, அரசியல் திசைவழி ஆகியவை தமக்கிருப்பது போலவும், இவற்றை விடவும் தன்னிகரற்ற ஆயுதப்போராட்டம் நடத்துவது போலவும் சொற்காமுறுகிறார்கள்." என்றும் நம்மைச் சாடுகிறது மணியரசன் கும்பல்.

அசாம், மணிப்பூரியின் விடுதலைப் போரைத் தொடங்கிய தலைமை சரணடைந்தன; ஈழ விடுதலை இயக்கத்தின் ஒரு பிரிவு பத்மநாபா, முகுந்தன், டக்ளஸ் போன்றவர்கள் தலைமையில்துரோகமிழைத்தது, மற்றொரு பிரிவு பாசிச சக்தியாகவும் அதன் துணை சக்தியாகவும் சீரழிந்தது. எஞ்சிய உண்மைப் போராளிகள் புலிகளால் வேட்டையாடப் படுகின்றனர்; பாலஸ்தீனமும் இப்போது ஜரீஷ்ஆம் மாநில சுயாட்சியை ஏற்றன; இவை "போன்றவை" என்று நாம் எழுதும்போது பின்னடைவுக்கும் சிக்கலுக்கும் உள்ளாகியிருக்கும் காஷ்மீரி, குர்தீஷ் போராட்டங்களையும் சேர்த்துத்தான் குறிப்பிடுகிறோம். "போன்றவை" என்பதற்குப் பொருள் புரியாத இந்த "அறிவாளிகள்" நம்மைத் தற்குறித்தனம் என்று ஏசுகின்றனர்.

இப்போது நாம் ஆயுதப்போராட்டம் நடத்துவதாக எங்கேயும் கூறிக்கொள்ளவில்லை. தற்போது அது சாத்தியமில்லை, உடனடியாக அந்த வேலையில் நாம் இறங்கமாட்டோம்; தலைமைக் கருக் குழுவையும் அணிகளையும் வென்றெடுக்கும் முதல் கட்டத்திலேயே உள்ளோம்; அதற்கான பிரச்சார வடிவமே முதன்மையான பணியாகக் கொண்டுள்ளோம் என்று நமது ஆவணத்தில் இருந்து எடுத்துக் காட்டும் மணியரசன் கும்பல் இதையே ஆதாரமாக வைத்து இப்படி வாய்ச் சொல்வீரர்களாக உள்ள புதிய ஜனநாயகத்தினர் மேற்கண்ட தன்னுரிமை ஆயுதப் போராட்டங்கள் மீது கருத்துக் கூறுவதும் விமர்சிப்பதும் தாமே தன்னிகரற்ற ஆயுதப் போராட்டம் நடத்துவதுபோல சொற்காமுறுவதாகும் என்று எழுதுகிறது.

ஒரு ஆயுதப் போராட்ட இயக்கம் பற்றி அதைவிட விஞ்சிய நிலையில் உள்ளவர்தான் கருத்துக்கூறவும், விமர்சிக்கவும் உரிமை உள்ளவர்களா? அந்நிலையை அடையாதவர்கள் கருத்துக் கூறுவதும் விமர்சிப்பதும் தற்குறித்தனம், ஆணவம் சொற்காமுறுவது ஆகிவிடுமா? அப்படியானால் சீன, சோவியத் கம்யூனிஸ்டு கட்சிகளையும் ஸ்டாலினையும் மாவோவையும் இந்த மணியரசன் கும்பல் விமர்சித்துக் கருத்துக் கூறுகிறதே அவர்களை விஞ்சிவிட்ட புரட்சியையும் சோசலிச கட்டமைப்பையும் சாதித்துவிட்டதா? ஆந்திராவில் மக்கள் யுத்தக் குழுவின் போராட்டத்தை விமர்சித்துள்ளதே அதைவிட விஞ்சிய, அதற்கு எடுத்துக் காட்டாக, முன்னோடியான போராட்டங்களை இந்தக் கும்பல் நடத்துகிறதா?

அரசியலில் பல ஆண்டுகளானாலும், வயதாகியும் அறிவில் விடலைகளாகவே வாதம் புரிவது இந்தக் கும்பலின்




வழக்கமாக உள்ளது. சான்றாக ஈழப்பிரச்சினையில் இவர்களின் தாய்க் கட்சியான சி.பி.எம் நிலைப்பாடு பற்றி பின்வருமாறு வாதம் புரிகின்றனர். "இலங்கைப் பிரச்சினை உள்நாட்டுப் பிரச்சினை என்று கூறிய அக்கட்சியைச் சேர்ந்த தலைமைக்குழு உறுப்பினர் பி. ராமமூர்த்தி இலங்கைக்கு இராணுவம் அனுப்பக் கூடாது என்று கூறியிருப்பது இலங்கை நாட்டு விவகாரத்தில் தலையிட்டு அபிப்பிராயம் கூறுவதாகாதா? ஒன்றைச் செய் என்பதும் அதனைச் செய்யாதே என்பதும் தலையீடுதான். இது சாதாரண மனிதன் கூட உணர்ந்துள்ள எதார்த்த தர்க்கமாகும்." (இந்த மணியரசன் கும்பல் 1985 ஜூன் 29,30 தேதிகளில் கூடி நிறைவேற்றிய அறிக்கை பக்:22). எப்படி இந்த கும்பலின் எருமை மாட்டுத் தர்க்கம்!

இந்த இலட்சணத்தில் நாம் சில ஆண்டுகளாக கட்சி மாநாட்டில் நிறைவேறாத நகல் திட்டம் வைத்துக் கொண்டு செயல்படுகிறோம்; ஆவணங்களில் இல்லாமலே பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பு என்று மூச்சுக்கு மூச்சு உச்சரிக்கிறோம் என்கிறது மணியரசன் கும்பல். ருஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர்கட்சி 1885 இல் ஒரு திட்டத்தை நிறைவேற்றிய போதும் பல குழுக்களாக செயல்பட்டதையும் மீண்டும் 1902 காங்கிரசுக்கு நகல்கள் தயாரிக்கப்பட்டதையும் அதனாலேயே புரட்சிகர இயக்கம் நின்று போய் விடவில்லை என்பதையும் இந்தக் கும்பல் அறியாதா? இதேபோல புரட்சிகர இயக்கம் தொடங்கி முன்னேறிப் பல ஆண்டுகளுக்குப் பின்னர் முறைப்படி திட்டம் நிறைவேற்றிய வரலாறுகளைப் பலநாட்டுக் கம்யூனிசக் கட்சிகள் கொண்டுள்ளன.

நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் புரட்சி என்பது இந்திய நிலைமைகளில் பார்ப்பன ஆதிக்க எதிர்ப்பையும் உள்ளடக்கியது என்றும், இப்போது நமது செயல் தந்திரம் பார்ப்பன-பாசிச எதிர்ப்பு முழக்கத்தைக் கொண்டிருக்கிறது என்றும் நாம் பலமுறை எழுதியும் அப்படி ஏதும் நமது ஆவணங்களில் இல்லை என்று புளுகுகிறது, மணியரசன் கும்பல்.

தமிழ்த் தேசத் தன்னுரிமை முன்னணியிடம் சித்தாந்தம், கொள்கை, அரசியல் திசைவழி எதுவும் தெளிவாக-திட்டவகைப் பட்டதாக இல்லை; தன்னுரிமைக்குத் தடையான எதிரிகள், நட்புச் சக்திகள், அந்த இலட்சியத்தை அடைவதற்கான போராட்ட வழிமுறைகளில் ஒற்றுமை கிடையாது; அதை வரம்புக்குட்பட்ட - சட்டவாதப் போராட்டமாகவே அணுகுகிறார்கள்; தமது போராட்டப் பாதையை எழுத்தாலோ பேச்சாலோ ஒரு ஆயுதப் போராட்ட வழியாக அறிவித்ததில்லை - என்று நாம் எழுதியிருந்தோம். இதற்குப் பதிலாகத்தான் நம்மிடம் அவை இல்லை என்று பாய்ந்திருக்கிறது மணியரசன் கும்பல்.

ஆனால் போராட்ட வழிமுறை என்று எதையும் தன்னுரிமை முன்னணியின் ஆவணங்களில் இருந்து அந்தக் கும்பலால் காட்ட முடியவில்லை; அக்குழுக்களிலேயே தெளிவான சித்தாந்தவாதிகளாகப் பீற்றிக் கொள்ளும் மணியரசன் கும்பலின் கொள்கை அறிக்கையிலும் தமிழ்த் தேசிய எழுச்சிக்குத் தடையான சக்திகள், முதன்மையான முரண்பாடு, தன்னுரிமையின் அவசியம் குறித்து எழுதிவிட்டு பின் வருமாறு எழுதியுள்ளது:

www.padippakam.com

''தமிழகத்தில் பெரு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு ஏகபோக எதிர்ப்பு, பார்ப்பனீய ஆதிக்க எதிர்ப்பு, இந்தி ஆதிக்க எதிர்ப்பு நோக்கம் கொண்ட தமிழக மக்கள் ஒன்று திரண்டு போராடுவதன் மூலமே தன்னுரிமை பெறமுடியும்'' (பக்:13). இதைத் தவிர தன்னுரிமை பெறுவதற்கான வழிமுறை - பாதையாக அந்தக் கும்பலின் ஆவணத்தில் எதுவும் இல்லை. இது அவர்களின் தாய்க்கட்சி திட்டத்தைப் போல எவ்வளவு பொத்தாம் பொதுவானது என்பதைச் சொல்லத் தேவையில்லை. இப்போதுதான் ''எழுச்சி மிக்க மக்கள்திரள் போராட்டமே, த.தே.பொ.க. மற்றும் தன்னுரிமை முன்னணி ஆகியவற்றின் போராட்ட வழிமுறை என்று தெள்ளத் தெளிவாக நமது ஆவணங்களில் அறிவித்துள்ளோம்'' என்று கூறுகிறது மணியரசன் கும்பல். ஐரோப்பாவின் தனிச்சிறப்பான அரசியல் நிலைமைகள், குறிப்பாக இன்றைய உலக அரசியல் நிலைமைகள் காரணமாக கிழக்கு ஐரோப்பாவிலும் முன்னாள் சோவியத் ஒன்றியத்திலும் ''எழுச்சிமிக்க மக்கள் திரள் போராட்டங்களால்'' சில இனங்கள் தன்னுரிமை பெற்றன. மற்றபடி இந்த வழிமுறையால் தன்னுரிமை பெற்றதாக சான்றுகளே கிடையாது; குறிப்பாக இந்திய நிலைமைகளில் தன்னுரிமை, இன, மொழி உணர்வு பேச்செடுத்தாலே பயங்கரவாத பிரிவினைவாத முத்திரை குத்தி ஒடுக்கும்போது, பல ஆண்டுகளாக வடக்கிலும் வடகிழக்கிலும் தன்னுரிமை இயக்கங்கள் ஆயுதப் போராட்ட வழிகள் தவிர்க்க முடியாதவை என்று நிரூபித்துள்ள போது பொத்தாம் பொதுவான ''எழுச்சி மிக்க மக்கள் திரள் போராட்டம்'' மூலம் தன்னுரிமை அடையப்போவதாக மணியரசன் கும்பல் கூறிக் கொள்கிறது. உண்மையில் இது தமது சட்டவாத, சமரச, பிழைப்புவாத நடைமுறைக்கு வழிவகுப்பதுதான்.

பல பத்தாண்டுகளாகத் திராவிடர், தமிழர் தன்னுரிமை பேசிய திராவிட, தமிழின இயக்கங்கள் எந்தப் பாதையில் அதை அடைவதென்று வரையறுத்துக் கொண்டு செயல்பட்டதே கிடையாது. நாம் இந்தக் கேள்வியை எழுப்பிய பிறகுதான் இதுபற்றி மணியரசன் கும்பல் வாய் திறந்துள்ளது. அதுவும் பு.ஜ.வின் ஆவணங்களில் அறிவிப்புகள் இருந்தாலும், நடைமுறையில் ஆயுதப் போராட்டம் எதுவும் கிடையாது; வாய்ச்சொல் வீரம் தான், சொற்காமுறுவதுதான் என்று எரிந்து விழுகிறது. ஒரு இலக்கை அடைவதற்கான வழிமுறை வகுத்துக்கொனடு அந்தப் பாதையில் முன்னேறுவதுதான் சரி; அப்படி எதுவும் தன்னுரிமை முன்னணியிடம் கிடையாது என்பது நமது விமர்சனம்; அப்படி ஒரு வழிமுறை வகுத்துக் கொண்டுள்ள நீங்கள் என்ன சாதித்துவிட்டீர்கள் என்று கேட்கிறது மணியரசன் கும்பல்; இதுதான் விதண்டாவாதம்; குதர்க்கம்; இதற்கும், இதன் மூலம் தமது ஓட்டாண்டித்தனத்தையும் நமது விமர்சனத்தையும் ஒப்புக் கொள்கிறது, அக்கும்பல்.

இறுதியாக, ஆத்திரத்தின் உச்சிக்கே சென்று பு.ஜ.வின் மீது சீறிப் பாய்ந்துள்ளது, மணியரசன் கும்பல். ''புதிய ஜனநாயகமும் அதன் அரசியல் தலைமையும் சீர்குலைவுச் சக்திகள். அவைகளுக்கு ஆக்கபூர்வமான மாற்றுத்திட்டம் கிடையாது. முன்னோடியான போராட்டங்களையும் அவை நடத்தவில்லை. மற்றவர்கள் நடத்தும் இயக்கங்களைக் கொச்சைப் படுத்தி சீர்குலைவு வேலை செய்வதே அவற்றின் தொழில்..'' என்று நமது அமைப்பின் மீதான தனது மேதகு முடிவை அறிவித்துள்ளது. மணியரசன் போன்றவர்களிடம் இருந்து இத்தகைய மதிப்பீட்டைப் பெறுவது உண்மையில் பெருமைக்குரியதாகும்.

நமது விமர்சனங்களுக்கு முகங் கொடுக்க முடியாதவர்கள் இப்படி அவதூறு செய்தபோதும் நமது நிலை சரியானதென்றே பல விவகாரங்களிலும் நிரூபிக்கப்பட்டுள்ளது. சான்றாக ராமதாசு, பண்ருட்டி, அப்துல்சமது, நெடுமாறன், ஜான் பாண்டியன் போன்றோருடன் தேர்தல் கூட்டுச் சேர்ந்தபோது அதை கொள்கைக் கூட்டணி என்று அறிவித்துப் பித்தலாட்டம் செய்தது மணியரசன் கும்பல். ராமதாசைக் கொள்கைச் சிங்கம் என்றும் தலை மீது தூக்கிவைத்துக் கூத்தாடியது. அப்போதே அந்தக் கூட்டணி மோசடி பற்றியும், ராமதாசு பற்றியும் அம்பலப்படுத்தி நாம் எழுதினோம். அதை ஏற்காத மணியரசன் கும்பல், ராமதாசு காங்கிரசுடன் பகிரங்க பேரம் நடத்தி தானே வலிய சென்று அக்கட்சியை ஆதரித்தபோது ''பா.ம.க. பல்டி'', ''பூனை வெளியே வந்துவிட்டது'' என்று தனக்குச் சம்பந்தமில்லாத மூன்றாவது மனிதனைப் பற்றி எழுதுவதுபோல எவ்வித சுயவிமர்சனமுமின்றி எழுதியது, மணியரசன் கும்பல்.

> காளிமுத்து, வலம்புரி ஜான், க.சுப்பு போன்றவர்கள் பிழைப்புக்காக கட்சிமாறிகளாக இருக்கிறார்கள். மணியரசன், நெடுமாறன் போன்றவர்கள் அரசியல் பிழைப்புக்காகத் தமது கொள்கை, கோட்பாடு, சித்தாந்தத்தை மாற்றிக் கொள்பவர்கள்.

ராமதாசின் தடுமாற்றமெல்லாம் நாற்காலி படுத்தும் பாடு என்று எழுதி மணியரசன் கும்பல், ''ஒருவர் தம்மைப் பற்றி என்ன கூறிக் கொள்கிறார், தமக்கு என்ன பட்டம் சூட்டிக் கொள்கிறார், எப்படிப்பட்ட ஆடை அணிந்து கொள்கிறார் என்பதை வைத்து அவரை எடை போடாதே; அவர் எப்படி நடந்து கொள்கிறார் என்று பார்த்து முடிவு செய்! என்று லெனின் சொன்னதைப் பார்ப்பது நல்லது'' என்கிறது. சரி! இந்த உபதேசம் ராமதாசோடு கொள்கைக் கூட்டணி அமைத்த போது மணியரசன் கும்பலுக்குப் பொருந்தாதா? இப்போதும் நெடுமாறன் விவகாரத்தில் மேற்படி உபதேசத்தைப் பிரயோகிக்க மறுக்கிறது. ஜெயலலிதாவுக்கு வீரமணி ஆதரவு தருவது தவறானது; அது தனி நபர் ரீதியிலானதல்ல, வீரமணி தலைமையேற்கும் இயக்கமே செய்வதுதான் என்று விமர்சிக்கிறது, மணியரசன் கும்பல். ஆனால் காவிரிப் பிரச்சினையில் உண்ணாவிரதமிருந்த போதும், இடஒதுக்கீடு பிரச்சினையி ஜெயலலிதா நாடகமாடும்போது ஓடோடிச் சென்று ஆதரவு தரும் நெடும றனின் செய்கை மட்டும் இயக்க தலைமை என்ற ரீதியிலானது அல்ல, த நபர் செயல் என்று வாதிடுகிறது. மெ தத்தில் மணியரசன் நெடுமாறன் மும், நெடுமாறன் வீரமணி மூலம் ப பன-பாசிச ஜெயலலிதாவுடன் ''ஒ வகை நேச உறவு'' கொண்டுள்ளனர் எ பதுதான் உண்மை.

காளிமுத்து, வலம்புரிஜான், க.சுப்பு போன்றவர்கள் பிழைப்புக்காக பல கட்சி மாறிகளாக இருக்கிறார்கள்; மணியரசன், நெடுமாறன் போன்றவர்களும் பிழைப்புவாதிகள்; இவர்கள் அரசியல் பிழைப்புக்காகத் தமது கொள்கை, கோட்பாடு சித்தாந்தத்தை மாற்றிக் கொள்பவர்கள். அரசின் தாக்குதல் வரும்போது இவர்கள் ஓடி ஒளிந்து கொள்வதும், தன்னுரிமைக்கு மாநில சுயாட்சிக்குரிய விளக்கமளிப்பதும் இதற்குத் தக்க சான்றுகளாகும். ராஜீவ் கொலையைத் தொடர்ந்து வந்த நாட்களில் மணியரசன் கும்பலின் நடத்தையும், தஞ்சை தன்னுரிமை மாநாட்டுக்குத் தடை விதித்து கைது செய்தபோது நெடுமாறன் நடத்தையும் இதையே காட்டின.

தமிழினவாதக் குழுக்களிடே மிகவும் தெளிவான சித்தாந்த கோ பாடு, திட்டம், கொள்கை, வழி வகுத்துக் கொண்டிருப்பதாகப் கொள்கிறது, இந்த மணியரசன் கு ஆனால் இவற்றில் எல்லாம் இந்தக் விடம் நிலவும் குழப்பங்களே இவர் அரசியல் பிழைப்புக்காகத் தெரிந்தெ டுத்துக் கொண்டவைதாம் தன்னுரிமை பொதுவுடைமை போன்றவை. அந்த குழப்பங்களை அடுத்த இதழில் அம்பல படுத்துவோம்.

— தொடரு

www.padippakam.com

# துரை மாணவர் போராட்டம் தேவை - புரட்சிகர தலைமை

மதுரை கே.கே. நகரில்
அமைந்துள்ள வக்பு வாரியக் கலை மற்
றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள்
20-10-94 அன்று விடுதியில் அடிப்
படை வசதியின்மை மற்றும் அண்
ணாவை இழிவு செய்து சேஷன் எழு
திய புத்தக நகலை எரிக்கும் போராட்
டத்தை நடத்தினர். போலீசு போராட்ட
பகுதியில் போக்குவரத்தை முறைப்ப
டுத்தாமல் அலட்சியமாக இருந்தது.
மாணவர்களின் மீது பாயும் நிலையில்
பேருந்து ஒன்று வர மாணவர்கள் சிதறி
ஓட சில மாணவர்கள் ஆத்திரமாகி கல்
எறிந்து தாக்கினர். ஆனால் பேருந்
துக்கோ பயணிகளுக்கோ எந்த ஆபத்
தும் இல்லை. மதிச்சியம் போலீசு
நிலைய துணை ஆய்வாளர் மேல் ஒரு
கல் விழுந்ததும் போலீசுபட்டாளம் உத்
ரவு, அறிவிப்பு எதுவும் இல்லாமலே
டியடி பிரயோகம் செய்தது. மாணவர்
ர் பலர் காயமடைந்தனர். சம்பவத்
ல் தொடர்பில்லாத 13 மாணவர்
ளை போலீசு கைது செய்து பொய்
க்கு போட்டதோடு தாக்கி சித்திரவ
தையும் செய்துள்ளது. மாணவர்களை
பிணையிலும் விட மறுத்தனர்.

இச்செய்தி அனைத்து கல்லூரி
மாணவர்களையும் கொதிப்படையச்
செய்தது. வக்பு வாரியக் கல்லூரி மாண
வர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள்
உதவியுடன் மாணவர் கூட்டமைப்பை
ஏற்படுத்தி 21-10-94 அன்று தேவர்
சிலை முன்பு மறியல் செய்ய தீர்மானித்
தனர். சுமார் 1000 மாணவர்கள்
திரண்டு போலீசு மிரட்டலையும் மீறி
1.30 மணி நேரம் மறியல் செய்து நகரப்
போக்குவரத்தையே நிறுத்தினர். ஓட்
டுக்கட்சிகளின் பொறுப்பில் உள்ள
சில மாணவர்கள் தாமாக தலை
மையை கையிலெடுத்துக் கொண்டு
தலையிட்டு போலீசுக்குச் சாதகமாக
நடந்து பிற மாணவர்களையும் பலி
யாக்கினர்.

மாவட்ட ஆட்சியாளர் நேரில்
வந்து உரிய நடவடிக்கை எடுப்பதாக
பகிரங்கமாக அறிவித்த பின்தான்
போராட்டத்தைக் கைவிடுவோம் என
உறுதியாக இருந்த மாணவர்களை
கலைத்து, மாவட்ட ஆட்சியாளர் அலு
வலகத்திற்கு சென்று முறையிட மாண
வர்களை அழைத்துப் போனார்கள்.
ஆனால் அங்கு ஆட்சியாளர் இல்லா
தது தெரிந்ததும் மாணவர்களை
போலீசு ஏமாற்றி அழைத்து வந்ததும்
அதற்கு ஓட்டுக்கட்சியினர் உடந்தை
யானதும் வெளிச்சமாகியது. மாணவர்
களை ஆட்சியாளர் வீட்டிற்கும்
அழைத்துச் சென்றனர். அவரோ நடவ
டிக்கை எடுக்க தனக்கு அதிகாரம்
இல்லை என்று கைவிரித்து போலீசு
உயரதிகாரிகளை சந்திக்க கூறினார்.
போலீசு அதிகாரிகளோ இழுக்கடித்து
பிறகு, இழப்பீடு தந்தால் மாணவர்கள்
மீதான வழக்கை திரும்பப் பெறுவதாக
கூறினார். இப்படி அரைகுறையாக
மாணவர் போராட்டம் கைவிடப்பட்
டது. மதுரையில் மாணவர்களின்
போர்க்குணமிக்க போராட்டங்கள்
அடிக்கடி நடந்தாலும் அவை சரியான
தலைமையின்மை காரணமாக பின்ன
டைவு, திசை திருப்பல், துரோக முடிவு
களுக்கு இலக்காகுவது நிகழ்கிறது.
எனவே அரசு, போலீசு, ஓட்டுக் கட்சிக
ளுக்கு எதிராக புரட்சிகர அமைப்பை
கட்டியமைப்பதை மாணவர்கள் உடன
டியாகச் செய்ய வேண்டும்.

## ஜயா ஆட்சி நாடகங்களை அம்பலப்படுத்தி ஊர்வலம்

கா துரை - உத்தம பாளையம் தாலு
ாவில் பாசிச ஜெயாவின் நல்வாழ்வுத்
திட்ட நாடகத்தைத் தோலுரித்தும் மக்க
ளின் அடிப்படைத் தேவைகளை நிறை
வெற்றக் கோரியும் 23.10.94 அன்று விவ
சாயிகள் விடுதலை முன்னணியினர்
ாசக்கின் ஊர்வலம் நடத்தினர். கம்பம்
குதியில் தொடங்கி க.புதுப்பட்டியில்
டிவடைந்த ஊர்வலத்திற்கு தோழர்
சகர் தலைமை தாங்கினார். பெண்கள்
ட்பட சுமார் 100 பேர் கலந்து கொண்ட
ர். பொதுக்கூட்டம் நடத்த போலீசு
னுமதி மறுத்துவிட்டது. ஊர்வலத்தின்
ரச்சாரத்தைக் கண்டு அதையும் தடுக்க
யன்ற போலீசு, ஊர்வலம் எங்கிருந்து
ாடங்குகிறது என்ற தெரியாமல் அவ
பட்டது.

## றால் பண்ணை எதிர்ப்புப் பிரச்சார இயக்கம்

சீர்காழி வட்டாரத்தில் உள்ள
ங்களில் வி.வி.மு. சார்பாக விவ
த்தைப் பாழாக்கும் இறால் பண்
ாகளுக்கு எதிரான பிரச்சார இயக்
மேற்கொள்ளப்பட்டது. இது அக்
பர் முதல் வாரத்தில் மக்கள் கலை
க்கியக் கழகத்தினரின் உதவியு
தெருமுனைப் பிரச்சாரம் கலை
ச்சிகளுடன் 4 நாட்கள் நடந்தது.
பெருந்தோட்டம், கோணையாம்பட்டி
னம், மங்கைமடம், தென்னாம்பட்டி
னம், கோவில்பத்து, நெம்மேலி, வள்
ளுவக்குடி, கொண்டல், பனங்காட்
டான்குடி, பச்சை பெருமாள்நல்லூர்
ஆகிய கிராமங்களிலும் சீர்காழி நகரத்
திலும் நடத்தப்பட்ட தெருமுனைக்
கூட்டங்களுக்கு ஒவ்வொரு இடத்தி
லும் 300 பேர் வரை மக்கள் கூடி ஆதர
வளித்தனர். "காட் - டங்கல்" திட்டத்
தின் ஒரு பகுதியாகவே இறால்
பண்ணை பெருக்கம் உள்ளது என்
பதை பேச்சாளர்கள் விளக்கிப் பேசி
னர். பெருந்தோட்டத்தில் கூலி விவசா
யிகள் பெருமளவு நிதியளித்து ஆதரவு
தந்ததோடு "உயிரைக் கொடுத்தும்
இக்கிராமத்தில் இறால் பண்ணை வரு
வதைத் தடுப்போம்" என்று கூறி உற்
சாகப்படுத்தினர். இறால் பண்ணை
எதிர்ப்பாளர்கள் வீடு கொளுத்தப்
பட்ட தென்னாம்பட்டின கூலி விவசா
யிகளும் இவ்வாறே பேசி ஊக்குவித்த
னர்.

அக்டோபர் மூன்றாவது வாரத்
தில் மக்களை தனித்தனியே சந்திக்கும்
பொருட்டு வீடுவீடாகச் சென்று 7 நாட்
கள் பிரச்சாரம் மேற்கொள்ளப்பட்டது.
அனைத்து கிராமங்களிலும் கூலி விவ
சாயிகள் இறால் பண்ணையை
எதிர்க்க வேண்டும் என்றே கருத்துத்
தெரிவித்தனர். அகரப் பெருந்தோட்
டத்தைச் சேர்ந்த இந்திய கம்யூனிஸ்ட்
கட்சிக்காரர், உவர் நிலத்தில் மக்களின்
கூட்டுப் பண்ணையாக இறால்
பண்ணை வைக்கலாம் என்றும்
விளை நிலத்தில் வைக்க வேண்டிய
தில்லை என்றும் கட்சி முடிவெடுத்தி
ருப்பதாகக் கூறினார். இதை சில கூலி
விவசாயிகள் எதிர்த்துக் கருத்து தெரி
வித்தனர்.

கீழ மூவர்க்கரையில் மீனவர்கள்,
61 மீனவர் கிராமங்கள் சேர்ந்து தங்கள்
பகுதிகளில் இறால் பண்ணைகள்
வைப்பதைத் தடுக்க இருப்பதாக கருத்
துத் தெரிவித்தனர். இறால் பண்
ணைக்கு நிலத்தை விற்ற விவசாயிக
ளையும் சந்தித்ததில் 10,15 ஆண்டுக
ளாக தண்ணீர் - பாசன வசதி இன்மை
யால் விவசாயம் பண்ண முடியாமல்
கஷ்டப்பட்டதையும் இறால் பண்
ணைக்காரர்கள் நல்லவிலை கேட்ட
தால் விற்றுவிட்டதையும் எடுத்துக்
கூறினர். சிலர் வீடு, மாடுகளை விற்று
விட்டும் வேறு இடங்களுக்கு பிழைக்க
போக இருப்பதையும் பார்க்க முடிந்
தது. மொத்தத்தில் இறால் பண்
ணைக்கு எதிரான உணர்வே கூலி
விவசாயிகள் மற்றும் குறிப்பிட்ட அள
விற்கு நடுத்தர விவசாயிகளிடத்திலும்
இருக்கிறது. இவர்கள் சரியான
அமைப்பின் கீழ் ஒருங்கிணைந்து
எழுச்சிமிகு போராட்டத்தைத் தொடக்
கும் பொழுதே பண்ணைகளை
தடுத்து ஒழிக்க முடியும்.

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015.
Printed by him at EZHIL PRINTS, 110, II Floor, 63 Arcot Rd, Madras - 600 024. Editor:R.SHANMUGARAJ

www.padippakam.com




படிப்பகம்